

KALKI

13.5.84 ரூ1.50

குஜராத் சிறப்பிதழ்



கல்கி



அதிக சுவையானது
அதிக முழுமையானது



நீங்கள் பாசத்துடன் ஊட்டும் ஒவ்வொரு கவளமும் உங்கள் பாப்பாவின் வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரணசக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. ஒவ்வொரு கவளத்திலும் அதிக முழுமையான திட உணவு.

CLARION/B/GX/3/203 TAM



நல்வரவு கூறும் நவீன குஜராத்

வாழ்த்துச் செய்தி

முதல் அமைச்சர் – குஜராத் மாநிலம்

காந்தி நகர்,
382010
ஏப்ரல் 2, 1984

தமிழ் நாட்டின் புகழ்வாய்ந்த, மூத்த பத்திரிகைகளில் ஒன்றான 'கல்கி'; குஜராத் மாநிலச் சிறப்பிதழ்கள் வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழர்கள் பல வருடங்களாக இன்றைய குஜராத்தின் முன்னேற்றத்துக்கு – முக்கியமாகத் தொழில்துறையிலும், அரசு நிர்வாகத் துறையிலும் – குறிப்பிடத்தக்க வகையில் செயலாற்றி வந்திருக்கிறார்கள். நமது இரண்டு மாநிலங்களுக்கிடையே கலாசார, பொருளாதாரத் தொடர்புகள் வளர்ந்து உறுதியும் பெற்று வருகின்றன. தென்னிந்தியர் சங்கம் இங்கே கலைநிகழ்ச்சிகள் நடத்தாத வாரமே கிடையாது.

தமிழ்நாட்டின் கைத்தறி, பட்டு ஆடைகளுக்கும், பரத நாட்டியத்திற்கும் மட்டும் தான் இங்கே பெயரும் புகழும் இருக்கிறது என்றில்லை. தமிழ்மொழி, கலாசாரம், பொருளாதார முன்னேற்றம் ஆகியவை பற்றியும் இங்கே சிறப்பாகப் பேசப்படுகின்றது.

'கல்கி' வெளியிடும் இந்தச் சிறப்பிதழ், இன்றைய நவீன குஜராத்தைப் பற்றி மேலும் நீங்கள் அறிந்துகொள்ளவும், 'கல்கி' வாசகர்கள் பலர் குஜராத்துக்கு விஜயம் செய்யத் தூண்டவும் உதவும் என்று நம்புகிறேன்.

(ஒப்.) மாதவ்ஸி.



- விருந்தோம்பலில் குஜராத்தியருக்குஈடு இணை சொல்ல முடியாது. 'வேண்டாம், போதும்' என்று விருந்தாளி அடிக்கடி சொல்ல வேண்டியிருக்கும்.

- ஒரு குஜராத்தி வீட்டுக்குப் போனவுடன், நாம் கேட்காமலே கிடைப்பது குளிர்ந்த நீரும், டீயும். (சா–பாணி). இதற்கு நேரம் காலம் எல்லாம் கிடையாது.

பொது நலத் தொண்டுக்குப் பொழுது போதவில்லை

ஆமதாபாத் நகரின் மையத்தில் ஸ்ரீ மென்லால் தரம்தாஸ் சாலையிலுள்ள அமைதியான பங்களாக்களில் ஒன்றில் நமது முன்னாள் ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களைச் சந்தித்தோம். வேளை—மாலை.

போர்ட்டிகோவில் ஒரு பியட் கார் நிற்கிறது. (சென்னைவாசி ஒருவர் அன்பளிப்பாகக் கொடுக்க முன்வந்தும் செக் கொடுத்து வாங்கினார் என்பது இதன் பின்னணி.) இதை அடுத்து கறுப்பு நிற ஆட்டோ ரிக்ஷா ஒன்று. வாசல் முகப்பில் போடப்பட்டிருக்கும் பெரிய ஊஞ்சலில் அமர்ந்து மெல்ல ஆடிக்கொண்டே புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார்.

''தமிழ்நாட்டிலிருந்து வருகிறவர்கள் யாரும் என்னைப் பார்க்காமல் போவதில்லை!'' என்றார் சிரித்துக்கொண்டே. அவருக்கு அசாத்திய மகிழ்ச்சி என்பது அவர் எங்களை வரவேற்று உபசரித்ததிலிருந்தே தெரிந்தது.

''ஆமதாபாத்தில் தமிழர்கள் நடத்துகிற எல்லா விழாக்களுக்கும் எனக்கு அழைப்பு வருகிறது மட்டுமல்ல, நேரில் வந்து அழைக்கிறார்கள். தமிழர்கள் ஒரு முருகன் கோயில் கட்டியிருக்கிறார்கள் இங்கே. அழகான கோயில். அந்த விழாவில் எல்லோருக்கும் உணவு பரிமாறினார்கள். என் கையால் நூறு பேருக்காவது பரிமாற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். பரிமாறியதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி!''

தினமும் அதிகாலையில் எழுந்திருந்து ஒரு மணி நேரம் வாக்கிங். பிற்பகல் முழுவதும் பொது நலப் பணிகள். டஜன் கணக்கான டிரஸ்ட்டுகளை ஏற்று நடத்துகிறார் திரு. பட்வாரி. புத்தக வெளியீடு வேறு.

கிராமப்புற குடிதண்ணீர் வசதிக்காக இவர் செய்யும் தொண்டு குறிப்பிடத்தக்கது. இதற்கு குஜராத் அரசும் இவருக்கு உதவுகிறது. இவரது அலுவலகம் இயங்க மாதம் ஒரு ரூபாய் வாடகையில் (!) தனது பல மாடிக் கட்டிடம் ஒன்றில் இடம் தந்திருக்கிறது அரசு.



''எனக்குத் தினமும் குறைந்தது ஐந்து—ஆறு கடிதங்களாவது தமிழ் நாட்டிலிருந்து வருகிறது. என்னை இன்னும் நினைவில் வைத்துக் கொண்டிருக்கும் தமிழர்களின் அன்பை நினைத்து நான் பூரித்துப் போகிறேன்!''

முதல்வர், எம். ஜி. ஆரிடமிருந்தும் கடிதம் வருவதுண்டு என்றார். சிலர் இவரது பிறந்த நாளை இன்னும் நினைவில் வைத்துக் கொண்டு வாழ்த்துத்தந்தி அனுப்புகிறார்கள் தமிழ் நாட்டிலிருந்து.

ஹைதராபாத்தில் நடைபெற்ற மதுவிலக்கு மாநாட்டுக்குப் போய் விட்டுத் திரும்பியிருந்தார் திரு. பட்வாரி. ''மதுவிலக்கை அமல் செய்யும் எங்கள் குஜராத் மாநிலத்தில் எவ்வளவு அருமையாக நிதி நிர்வாகம் செய்கிறார்கள் என்று வந்து பாருங்கள் என்று நான் அங்கே அழைப்பு விடுத்தேன்!''

சமீபத்தில் ஒரு முறை நைரோபிக்குப் போக வேண்டியிருந்ததாம். அங்கே விமான ரிசர்வேஷன் கடைசி நிமிஷத்தில் ஏற்பாடு செய்து தந்தவர் ஒரு தமிழர். 'நீங்கள் எங்கள் தமிழ்நாட்டு கவர்னராயிருந்தவர் அல்லவா!' என்று உதவ முடிந்ததில் மகிழ்ந்து போனாராம்.

ராஜ்பவனில் சஞ்சீவ ரெட்டி வந்து தங்கிய போது அவருக்கு மாமிச உணவும் மதுபானமும் வழங்காத கோபத்தில் தம்மைப் பதவியை விட்டுப் போகச் செய்த பழைய கதையை, துளியும் மனக்கசப்பின்றிச் சிரித்துக் கொண்டே சொன்னார் இந்த நடைமுறைக் காந்தியவாதி.

''இந்திராவுக்குக் கூட என் பேரில் அவ்வளவு கோபமில்லை. ரெட்டிகாருவுக்கு ஏக ஆத்திரம்!''

சில தமிழ் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இவர் வீட்டுக்கு அருகே வசிக்கிறார்கள். அவர்களைப்பெரும்பாலும் காலை 'வாக்கிங்' கிலோ மாலை, பூங்காவிலோ சந்தித்து உரையாடுகிறார்.



முதல்வர்



அரச பரம்பரையைச் சேர்ந்தவர் இன்றைய குஜராத் முதல்வர் மாதவ்ஸி சோலங்கி. ஆனால் அரசியலில் சோஷலிஸவாதி! ஐம்பத்தாறு வயது நிரம்பிய இவர் ஆழ்ந்த கடவுள்பக்தி உள்ளவர். ஏழைகளின் நலத்தில் உண்மையான அக்கறையுடன் செயல்பட்டு வருகிறவர். பம்பாய் பல்கலைக் கழகத்தில், பொருளாதாரம் — அரசியல் படித்த பட்டதாரி. வழக்கறிஞர். ஆமதாபாத்திலிருந்து வெளியாகும் ஒரு நாளிதழில் உதவி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு ஆமதாபாத் முனிசிபல் கார்ப்பரேஷனில் பொது மக்கள் தொடர்பு அதிகாரியானார். அரசியல் பிரவேசத்துக்கு இங்கே தான் அடித்தளம் அமைந்தது.

1957—ல் முதன் முதலாகப் பம்பாய் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு தொடர்ந்து எல்லாத் தேர்தல்களிலும் வெற்றி. 1962—ல், சுமார் அரை டஜன் இலாக்காக்களுடன் துணை அமைச்சராக குஜராத் அமைச்சரவையில் அறிமுகமானார். கூட்டுறவுத் துறையிலும், கிராம அபிவிருத்தித் இடங்களிலும் அயராது உழைத்தவர்.

குஜராத் நேச்கரல் ஹிஸ்டரி சொஸைட்டியின் துணைத் தலைவர். இந்தியப் பறவை இனங்கள் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார். நீக்ரோ கல்வியாளர் ஒருவர் பற்றிய புத்தகம் ஒன்றும், எவரெஸ்ட் சிகரம் பற்றிய நூல் ஒன்றும் இவர் அக்கறையுடன் எழுதியவை. ஏராளமான புத்தகங்கள் படிப்பார்; எந்த சப்ஜெக்ட்டும் விலக்குக் கிடையாது.

'எதிர் முகாமைச் சேர்ந்தவராயினும் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த பயப்படாதே. ஆனால் பயந்து போய் மட்டும் பேச்சு வார்த்தை நடத்தாதே!' என்பது சோலங்கியின் கோட்பாடு.

பட்டுப் புடவை பரிசுத்திட்டம்

பெண்களுக்காக மட்டும் நடக்கிற போட்டி அல்ல. யார் வேணுமானாலும் எழுதலாம்.

போட்டி 2: எம். ஜி. ஆரிடம் ஒரு கேள்வி!

- முதல்வர் எம். ஜி. ஆரை நீங்கள் நேரில் சந்தித்து ஒரே ஒரு கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறீர்கள் என்றால் என்ன கேள்வி கேட்பீர்கள்?

கீழே எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். உறையின் மேல் ''எம். ஜி. ஆரிடம் ஒரு கேள்வி'' என்று குறிப்பிட வேண்டும். குலுக்கல் முறையில் பட்டுப் புடவை பரிசுக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் மிக ரசமான கேள்விகள் கல்கியில் பிரசுரமாகும். அவற்றுக்குத் தனியே சன்மானம் உண்டு. முடிவு தேதி: 28.5.84.



நினைவிருக்கட்டும், 51 பட்டுப் புடவைகளுள் ஒன்றை நீங்கள் பெற வாய்ப்புள்ளது. வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்: ....

விலாசம்: ....

BE FORTUNATE ON THIS THURSDAY

Gurjar Laxmi

GUJARAT STATE LOTTERY

WEEKLY DRAW:

FIRST PRIZE

Rs. 1 Lakh

One in each series

Total prizes of **Rs. 10.08 Lakhs**

Ticket only
Re. 1

— Director,
Gujarat State Lotteries
Gandhinagar



தீபக்கின் தீ மல்ஹாரின் தண்மை

பைஜூ பாவ்ரா என்ற பிரபல இந்தி சினிமா நினைவு இருக்கிறதோ? பைஜூ பாவ்ரா என்கிற இசை மேதை பிறந்தது குஜராத்தில்தான். அனந்த்பூரைச் சேர்ந்ததானாரீரி என்றஇசை கலைஞர், தான்சேன் 'தீபக்' ராகம் பாடித் தீப் பிடித்துக் கொண்ட போது, குஜராத்துக்கு உரித்தான 'மல்ஹார்' ராகத்தைப் பாடி அவரைக் காப்பாற்றினாராம்.

வைஷ்ணவ ஜனதோ பாடலை இயற்றிய நர்ஸி மேத்தாவும் ஒரு பாடகர். 'கேதார' ராகம் பாடிக் கண்ணனுடன் ஒன்றிப் போய் விட்டவர். குர்ஜரி தோடி, பிலாவல், கம்பாவடி — இந்த ராகங்கள் முறையே குஜராத், விராவல், கேம்பே ஆகிய இடங்களைக் குறிக்கும். இன்று பிரபலமாயுள்ள உஸ்தாத் ஃபெய்ஸ்கான், வீணை மேதை ரஹீம்கான், பண்டிட் ஓம்கார்நாத் டாக்குர் இவர்களும் குஜராத்தைச் சேர்ந்தவர்கள்.

சங்கீத நூல்களைப் படைத்திருப்பதிலும் குஜராத்தியருக்குப் பங்கு உண்டு. கஹ்யாலால் சிவராம் 'சங்கீத் கலாதர்' எழுதியிருக்கிறார். ஆதித்யராம் வியாஸ் 'சங்கீதாதித்யா' என்ற நூலைத் தொகுத்திருக்கிறார்.

கர்பா'வும், 'ராஸ்' நடனமும் குஜராத்தின் தனிப்பட்ட நடனங்கள் என்றால், 'பவாய்' கிராமிய நாடக வகையைச் சேர்ந்தது. (கிட்டத்தட்ட நமது தெருக்கூத்து மாதிரி இருக்கும்.) குழலூதி இசைபாடி மயக்கிய கண்ணன் காலத்திலிருந்தே இந்த நடன வகைகள் தோன்றியிருக்கின்றன. இவை இந்த மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிப் போய் விட்டன.

கோகுலத்திலும் பிருந்தாவனத்திலும் மாடுகள்மேய்க்கும் சிறுவனாகக் கண்ணன் இருந்த போது ஆடிய ராஸலீலா நடனமே 'ராஸ்' எனப்படுகிறது. இளைஞர்கள் கையில் கோலுடன் குதித்து ஆட, டோலக், ஜால்ரா, புல்லாங்குழல், ஷெஹனாய் வாத்தியங்கள் இனிமையாக முழங்கும்.

ஸ்ரீகிருஷ்ணர் ராஸ் நடனத்தைப் பிரபலப்படுத்தினார் என்றும், அவருடைய பேரனின் மனைவி 'லாஸ்ய நிருத்யா' என்று முன்னாளில் வழங்கப்பட்ட கர்பா நாட்டியத்தைப்பிரபலப்படுத்தினார் என்றும் சொல்லுகிறார்கள். வட்டமாகச் சுற்றி வந்து இளம் பெண்கள் ஆடும் கர்பா நடனம் குறிப்பாக நவராத்திரி சமயத்தில் ஆடப்படுகிறது.

மெதுவான தாளத்தில் தொடங்கி, போகப்போக வேகமாகி முடியும். இதற்கான பாடல்கள் கிருஷ்ணனின் லீலைகளையும், அம்பாளின் திருவிளையாடல்களையுமே சித்திரிக்கின்றன.

டிப்பாணி நிருத்யா, ஸித்தி நாட்டியம், பதர் நிருத்யா, டங்கி நிருத்யா என்று வேறு பல வகை நடனங்களும் இங்கே புகழுடன் விளங்குவன.



✕ ஆண் கலைஞர்கள் அளிக்கும் ராஸ்



✕ கர்பா நடனம்



இலக்கியம்

குஜராத்தி மொழியை, கிட்டத்தட்ட இரண்டு கோடி மக்களுக்கு மேல் பேசுகிறார்கள். இதில் இந்து, முஸ்லிம், பார்ஸி, கிறிஸ்தவர்கள் எல்லோரும் அடக்கம். பெருநகரமான ஆமதாபாத்திலும், அதைச் சுற்றியும் வசிக்கும் மக்கள் பேசும் குஜராத்தி தரமான மொழி என்றும், மற்ற இடங்களில் பேசப்படும் குஜராத்தி மாவட்டத்துக்கு மாவட்டம் மாறுபடும் என்றும் கூறுகிறார் மன்சுக் லால் ஜவேரி. (கோவைத் தமிழ், திருநெல்வேலித் தமிழ் இல்லையா, அது போல).

'சம்ஸ்கிருதத்துடன் சரித்திர காலத் தொடர்பு இருந்ததால், பெருமளவுக்கு சம்ஸ்கிருத மொழிச் சொற்கள் குஜராத்தியில் கையாளப்படுகின்றன. மற்ற இந்திய மொழிகளில் காணப்படாத சில சொற்களும் குஜராத்தியில் உண்டு. ஆயிரம் மைல்களுக்கு மேற்பட்ட கடற்கரையோரப் பகுதி குஜராத்தில் இருப்பதால் திராவிட மொழிகள் தவிர, பொஷிய, அராபிய, போர்ச்சுக்கீசிய, டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் கலப்பும் இருந்திருக்கிறது.

குஜராத்தி மொழியில் முதன் முதலாக 1868—இல் நவீனக் கதை எழுதியவர் நந்தசங்கர் என்பவர். தொடர்ந்து வேறு பலர். ஆனால் சிறு கதையின் உருவத்தைப் பற்றி அப்போது தெளிவான கருத்துக் கிடையாது. 1918 வாக்கில் குஜராத் மக்களுக்கு முதன் முதலாகச் சிறந்த சிறுகதைகளை எடுத்துக் காட்டிய பெருமை 'மலயா நில' என்ற புனை பெயர் கொண்ட கஞ்ச்சன் லால் வாசுதேவ மேஹதா என்ற எழுத்தாளரையே சேரும்.. தன்சுக்லால் மேஹதா தமது பல சிறு கதைகள் மூலம் குஜராத்தி கதை இலக்கிய மலர்ச்சிக்கு உரமாக விளங்கியிருக்கிறார்.

கே. எம். முன்ஷி (பாரதீய வித்யாபவன் ஸ்தாபகர்) பிரபல சரித்திர நாவலாசிரியர் என்று பலருக்கும் தெரியும். தன் காலத்திய சமூகத்தின் குற்றங்குறைகள், அறிவின்மை, மூட பக்தி, பரம்பரைச் சீர்கேடுகள் பற்றித் தமது சிறுகதைகள், நாடகங்கள்மூலம் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்.' இவரது சமகாலத்திய எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க சிலர் உமர் வாடியா, லீலாவதி முன்ஷி இந்துலால் யக்ஞிக், கேசவ் பிரசாத் தேசாயி. ஆனால் இவர்கள் அனுபவம் எல்லாம் உயர், நடுத்தரவாக்கத்தினரின் வாழ்க்கையையே எல்லையாகக்கொண்டது.

காந்திஜியின் அரசியல் பிரவேசத்திற்குப் பிறகு ஒரு புது விழிப்பு உண்டாயிற்று. எண்ணற்ற இளைஞர்கள் , கிராமங்களுக்குச் சென்றார்கள். கிராமத்தின் உயிர் நாடியை அவர்கள் உணர்ந்தார்கள். படிப்பில்லாதவன், ஒதுக்கப்பட்டவன், வெறுக்கப்பட்டவன், மனிதத் தன்மை நசுக்குண்டு ஒளி இழந்த உள்ளம் படைத்த மனித சமூகமே இவர்கள் கண் முன்தோன்றியது. இந்த எழுத்தாளர்களில் முக்கியமானவர் 'தூம கேது' என்ற புனை பெயர் கொண்ட கௌரி சங்கர் கோவர்த்தனராம் ஜோஷி. குஜராத்தி சிறுகதையை நடுத்தர வகுப்பினர் வாழ்க்கையின்வரை கோட்டிலிருந்து, சமூகத்தின் அடித்தளம் வரை கொண்டு சென்ற எழுத்தாளர் இவர். இவரது கதைகள் நகரத்து மண்ணிலிருந்து தொடங்கி, கிராம மைதானங்களிலும், மலைச் சரிவுகளிலும், நதிக்கரைகளிலும் மலர்ந்திருக்கின்றன. 'தூமகேது'வின் கதைகள் குஜராத்தி சிறுகதை இலக்கியத்துக்கு ஒரு புதுச் சிறப்பை அளித்திருக்கின்றன. இவருக்கு இணையாக இந்தத் துறையில் பிரகாசித்த இன்னொரு எழுத்தாளர் 'த்விரேஃப்' எனும் புனைபெயர் கொண்ட ராம் நாராயண் விசுவநாத பாட்டக்.


✕ லீலாவதி முன்ஷி



✕ உமாசங்கர் ஜோஷி



முட்களை உணர்த்தி மலர்களைக் காட்டி





குஜராத்தி சினிமா

இப்போதும் ராமாயணம்



''சமூகப் படங்களை விட, புராண — இதிகாசப் படங்களும், கிராமியக்கதைகளுமே குஜராத்தியில் அதிகமாக வருகின்றன. இப்போதும் 'ராமாயணம்' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது!

இப்போது பிரபலமான ஜோடி — உபேந்திர திரிவேதியும், சிநேகலதாவும். ஹிந்தி திரைப்படங்களில் காமெடியனை நடிக்கும் அஸ்ரானியும், வில்லியாக நடிக்கும் அருணா இரானியும் கூட இங்கே ஹீரோ, ஹீரோயின் பாத்திரங்களில் நடிக்கிறார்கள்.



இப்போது புதிதாக அறிமுகமாகியிருக்கும் ஹீரோ நரேஷ் கனோடியா, ராஜீவ் (நம் பக்கத்து ராஜீவ் அல்ல) இன்னொரு கதாநாயக நடிகர். ரமேஷ் மேஹ்தா புகழ் வாய்ந்த காமெடியன். மல்லிகா சாராபாய், நீது சிங், நிருபா ராய், தரலா மேஹ்தா ஆகிய ஹிந்தி நடிகைகளும் அவ்வப்போது குஜராத்தி திரைப்படங்களில் நடிப்பதுண்டு!'' என்று தெரிவித்தார் ஆமதாபாத்தில் உள்ள ஒரு பிரபல திரைப்பட விநியோக நிறுவனத்தின் மேலாளர்.

இந்திப் படங்களில் புகழ் பெற்ற, குஜராத்தி மியூசிக் டைரக்டர் அவினாஷ்வியாஸ் தான், குஜராத்தி படங்களிலும் கொடி கட்டிப்பறக்கிறார்.

''இத்தனை இந்திப்படங்கள் போட்டிக்கு இருந்தும், குஜராத்தி படங்கள் வெற்றிகரமாக ஓடுகின்றனவா?''

''ஏன் ஓடாமல்? குஜராத்தி படங்களைக் கட்டாயம் பார்த்து விடுவதென்று இருக்கும் குஜராத்தி மக்களின் ஆதரவில் ஹவுஸ்ஃபுல் சாட்சிகள் நடைபெறுகின்றன!''

- வருடத்துக்கு 50 குஜராத்தி படங்கள் தயாராகின்றன.
- குஜராத்தி படங்களுக்கு 80 சதவீத வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
- 1983-ம் வருஷத் திரைப்படங்களுக்கான அரசாங்கப் பரிசுகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. 'கர்கர்னி வாட்' இரண்டாம் பரிசும், 'நஸிப்னி—பாலிஹாரி' உற்சாகப் பரிசும் பெற்றிருக்கின்றன. முதல் பரிசு? எந்தப் படத்துக்கும் கிடையாது!

பன்னாலால் பட்டேலின் கதைகளில் குஜராத்தின் உண்மையான கிராமத்தைப் பார்க்க முடியும். உமாசங்கர் ஜோஷி தம் கதைகளில் கிராம வாழ்க்கையின் முட்களையும் காட்டி, மலர்களையும் காண்பித்தவர். 'சுந்தரம்' கலையில் வரம்புக்கு உட்பட்டுப் பெண்ணினத்தின் பெருந்தன்மையையும் உண்மை நிலையையும் எடுத்துக் காட்டியவர். குலாப்தாஸ் புரோக்கர் இளைஞர் — பெண்டிர் மண வாழ்க்கையையும், பொதுவாக மிகச் சாதாரணமாகக் கருதப்படும் நிகழ்ச்சிகளுக்குப்பின் மனித எண்ணத்தில் ஓடும் ஆழ்ந்த சிந்தனைகளையும் வெகு சாமர்த்தியமாகத் தம் கதைகளில் கையாண்டவர்.




✕ முன்ஷி

குஜராத்தி சிறுகதைகளை வளமைப்படுத்திய எழுத்தாளர்கள் பட்டியல் மிக நீண்டது. பொதுவாக இவர்கள் தங்கள் கதைப் பொருளுக்குச் சமூகக்குறைபாடுகளையே தேடுகிறார்கள். ஏழைமை, சமூகத்தின் பொருளாதார ஏற்றத் தாழ்வு; இல்வாழ்க்கையில் ஒழுங்கீனம், வெறுப்பு, பெண்களின் பிரச்னை— இல்லற விஷயங்களில் கவனமுள்ள எழுத்தாளர்கள் பொதுவாக இப்பக்கமே இழுக்கப்படுகிறார்கள்.

நாட்டின் சமூக — பொருளாதாரத் துறைகளில் நிகழ்ந்து வரும் புரட்சி எழுச்சி பற்றி குஜராத்தி எழுத்தாளர்கள் எழுத வேண்டியவை இன்னும் நிறைய இருக்கிறது.

ஆமதாபாத்



✕ படிகள் கொண்ட கிணறு-அடாலஜ் - ஆமதாபாத்

- அம்பாஸடரும், பியட்டும் டால்ஃபின்னும் பறக்கும் சாலைகளில், ஒட்டகம் இழுக்கும் வண்டிகள் சர்வ சாதாரணம். பெண்கள் இழுக்கும் கைவண்டிகளையும் தாராள மாகப் பார்க்கலாம்.

- நகரின் பிரதான கடை வீதியான பத்ரா அருகே உள்ள தல்கர்வாட் பகுதியில் கட்பீஸ் துணிக்கடைகள் ஏராளம். விலை மலிவு. கயிற்றுக் கட்டிலில் நான்கு மூலை களுக்குக் கம்பு பொருத்தி, தோரணம் மாதிரி ஷர்ட், பான்ட் துணிகளைத் தொங்கவிட்டு, வியாபாரம் மும்முரமாக நடக்கிறது. சாதாரண துணிக்கடைகளில் உள்ள கூட்டம் இங்கேயும் அலைமோது கிறது.

- வாடிலால் ஐஸ்க்ரீம் பிரபலம் மட்டு மல்ல. சாதாரண மக்களும் கடையில் நுழைந்து சாப்பிடுமளவுக்கு மலிவு. சென்னை விலைக்குப் பாதிதான்.

- பல மாடிக் கட்டிடங்களான ஃப்ளாட் டுகள் எக்கச்சக்கம். கட்டிட டிஸைன் களில் எத்தனை உண்டோ அத்தனையும் பார்க்கலாம்.

- நகரின் வியாபார கேந்திரத்தையும், மக்களின் குடியிருப்புக்களையும் இணைக்கும் ஐந்து பாலங்கள்: நேரு ப்ரிட்ஜ், எல்லிஸ் பிரிட்ஜ், சர்தார் பிரிட்ஜ், காந்திபிரிட்ஜ், சுபாஷ் பிரிட்ஜ்.

- நகரின் ஒருபுறத்தில் இன்னும் பழைய கோட்டையின் இடிபாடுகள் காணப்படு கின்றன. ஊருக்கு உள்ளே நிறைய நுழை வாயில்கள்: லால் தர்வாஜா, பிரேம் தர்வாஜா, தீன் தர்வாஜா....

- சாலை ஓரங்களில் வெற்றிலை — பாக்குக் கடைகள், கூடவே, பேல்பூரி கடைகள் நிறைய. ஒவ்வொன்றுக்கும் பெயரும் உண்டு; போர்டும் உண்டு. சாலையோரங் களில் உள்ள பேல்பூரி கடைகளில் மோடா, நாற்காலி போட்டுச் சுறுசுறுப் பான வியாபாரம் நடக்கிறது.

- ஸ்கூட்டர் ஓட்டுகிற பெண்கள் இங்கே தான் அதிகம் போலும். கணவனை ஆபீசில் இறக்கி விட்டுவிட்டுத் திரும்பும் பெண்மணிகளும் உண்டு.

- இரவில் பெண்கள் மூன்று, நான்குபேர் அரட்டையடித்துக் கொண்டு ஓரிடத்தி லிருந்து இன்னொரிடத்திற்குத் தைரியமாகப் போக முடிகிறது. மதுவிலக்கு அமலில் இருப்பதுதான் காரணம் என்கின்றனர் பலரும்.

- சாலைகள் பெரும்பாலும் குண்டுகுழி இல் லாமல் நன்றாகவே இருக்கின்றன.

- இரவில் எல்லாத் தெருவிளக்குகளும் பளீர் என்று எரிவதைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது.

- தினசரிகளில் முதலமைச்சர் — அமைச் சர்கள் படங்களோடு திறப்பு விழா, துவக்க விழா விளம்பரங்கள் எதுவும் பார்க்காதது ஆச்சரியமாயிருந்தது. அப் படி எல்லாம் விழாக்கள் ஏதும் இடை யாது போலும். பிழைக்கத் தெரியாத வர்கள்.

- இரவில் திருட்டு பயம் இன்றி பால்கனி கதவுகளைத் திறந்து போட்டுவிட்டுக்கூட உறங்குகிறார்கள். நாங்கள் தங்கியிருந்த இடத்திலும் அப்படித்தான் செய்தோம்!

- எந்த மாணவர் கலாட்டாவானாலும் ஆரம்பிப்பது எல். டி. இஞ்சினியரிங்

✕ தீன் தர்வாஜா நுழைவாயில் அருகே வீதி யோர வியாபாரம்





கல்லூரி மற்றும் விடுதி மாணவர்களிடமிருந்து தான். ஆமதாபாத்திலிருந்து கிளம்பும் முன் இந்தக் கல்லூரி விடுதிக்குள் எட்டிப் பார்த்த போது போலீஸ் ஆக்கிரமித்திருந்தது!

- இதே இஞ்சினியரிங் கல்லூரி மாணவிகள் இரண்டு பேர் — பவனு தவே, யாஸ்மின் கதியாலி — ஒரு புதிய முறை பம்ப் கண்டுபிடித்திருக்கிறார்கள். கீழேயிருந்து ஆறு மீட்டர் உயரத்துக்கு (முதல் மாடி வரை) மிக எளிய முறையில் தண்ணீரை உயரே கொண்டு செல்லுமாம்.


- ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் அலைக்கழிப்பதில்லை. சண்டைக்கு வருவதில்லை. குறைந்த தூரத்துக்கும் முணுமுணுக்காமல் வருகிறார்கள். இரவு நேரத்துக்கு இருபத்தைந்து சதம் கூடுதல் கேட்பதில்லை. மீதி சில்லரையை எண்ணிக் கொடுத்து விடுகிறார்கள். சென்னைவாசிகளே, நன்றாகப் பொறுமைப்படுங்கள்!


- நகரின் சுவர்களில் எழுதிய வாசகங்களை மாணவர் படைகள் மாய்ந்து மாய்ந்து அழித்தன. சுவர்களைச் சுத்தமாக்கியவர்களைப் பாராட்ட இருந்த சமயத்தில், மறுபடியும் முளைத்தன — இந்திரா காங்கிரஸ் மாணவர் படையில் சேரச் சொல்லும் 'ஜாயின் என்.எஸ்.யூ.' என்ற பிரம்மாண்ட எழுத்துக்கள்!

- ஆமதாபாத் சௌத் இந்தியன் அசோசியேஷன் (ASIA) ஒரு பள்ளிக்கூடம் நடத்துகிறது. விளம்பரங்கள், கச்சேரிகள் நாட்டிய நிகழ்ச்சிகள் மூலமாக நிதி திரட்டி சொந்தக் கட்டிடம் கட்டி வருகிறோம் என்கிறார், திரு. பாஷ்யம், தலைவர்.

- இதுதவிர, தமிழ்மன்றம் ஒன்று திரு. சுப்ரமணியம் அவர்களைச் செயலராகக்

✕ ஒட்டக வண்டி





✕ தூணின் உயரே சுழலும் உணவு விடுதி

கொண்டு இயங்கி வருகிறது. இவர்கள் தான் முருகன் கோவில் கட்டியவர்கள்.


- ஆஸ்திக சமாஜம், பெயருக்கேற்ப பக்தியைப் பரப்புகிறது. கதாகாலட்சேப நிகழ்ச்சிகளைக் கச்சிதமாக ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார் செயலாளர் திரு. பரமேசுவரன். இளைஞர்களும் சமாஜத்தின் பணிகளில் பங்கு கொள்வது தான் விசேஷமான அம்சம்.


- மொத்த தமிழர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று சரியாகத் தெரியவில்லை. 35,000 முதல் 40,000 என்றார் ஒருவர். 50,000—க்குமேல் என்றார் இன்னொருவர். திரு. பட்வாரி அவர்கள் கணக்குப்படி 70,000—க்குமேல்.


- ரிவால்விங் ரெஸ்ட்டாரெண்ட் கட்டிடம் ஒன்று தயாராகி வருகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாகச் செயல்படவிருக்கும் 'சுழலும் சிற்றுண்டிச்சாலை' இது.

- ஸன்ஸெட் — டிரைவ் இன் தியேட்டர். காரில் அமர்ந்திருந்தபடி சினிமா பார்க்கலாம். சுமார் 700 கார்களுக்கு மேல் நிறுத்தக்கூடிய இட வசதியுடன் ஹியரிங் கருவிகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன. கார் இல்லாதவர்கள் அமர்ந்து பார்க்க ஆடிடோரியம் இருக்கிறது.

- ரிஃப்ரிஜிரேடட் வாட்டர் என்று சாலைகளில் குளிர்ந்த நீர் விற்கிறார்கள் குடிப்பதற்கு. ஒரு டம்ளர் 15 பைசா. உள்ளேயிருக்கும் குளிர்ந்த நீரை மேலே பம்ப்புடன் கூடிய குழாய் மூலம் டம்ளரில் பிடித்துத் தருகிறார்கள்.


சிங்கள ராணுவம்
இலங்கைத் தமிழர்
எல்லாம் உன்னுடைய பாதுகாப்புக்குத் தான்!


பொது நலன்
தற்காப்புப் படைத் திட்டம்
அகாலி
அணைச்சுப்புடுவேன் அணைச்சுப்புடுவேன்!
சேத்தி


முகமூடிக் கொள்ளைகளைத் தடுக்க ஆறு விமானங்களை வாங்க தமிழக அரசு உத்தேசம் - செய்தி
விமானங்களையே திருடிக்கிட்டுப் போறாங்களே!.. ஓடுங்க.. ஓடுங்க.. பிடியுங்க.. பிடியுங்க!

கல்கி



1984 மே 13
மலர் : 42 இதழ் : 41
ரக்தாக்ஷி சித்திரை 31



லஞ்ச ஊழலில் உலக சாதனை!

பம்பாய். இரண்டொரு மிகப்பெரிய தனியார் துறை நிறுவனங்களின் ஒரு மாநில விற்பனைப் பிரதிநிதியாக ஒரு நபர் ஏஜென்ஸி எடுக்கிறார். அந்தத் தஸ்தாவேஜுகளைக் காட்டி ஒரு வங்கியில் பல லட்சங்கள் கடன் பெறுகிறார். அதே தஸ்தாவேஜுகளை வேறு பல வங்கிகளிலும் காண்பித்து அதே போல் கடன் பெறுகிறார். இவ்வாறு அவர் கடன் பெற அரசாங்க உயர்மட்டத்தில் செல்வாக்குள்ள ஒருவர் ஃபோன் மூலம் சிபாரிசு செய்கிறார். எல்லாப் பணத்தையும் பெற்றுக் கொண்ட நபர் பாங்குகளுக்குக் கையை விரித்து விடுகிறார். வேறு வழியின்றி பாங்குகள் ''ரைட் ஆஃப்'' (தள்ளுபடி) செய்து கணக்கு எழுதுகின்றன. பாங்குகளை ஏமாற்றி மோசடி செய்த அந்த நபர் பணத்தில் ஒரு பகுதியைத் தமக்கு வைத்துக் கொண்டு பெரும் பகுதியை ஆளும் கட்சிக்குக் கொடுத்து விடுகிறார். தேர்தல் நெருங்குகிறதே!

'இதென்ன கட்டுக்கதை' என்று மலைக்க வேண்டாம். இப்படி நடந்ததாக நாளை செய்தி வெளியானால் அதிசயிக்கவும் வேண்டாம். ஏனெனில் இதுபோன்ற மோசமான தில்லுமுல்லுகள் அரசுடைமையான பாங்குகளில் நடப்பதை நாடாளுமன்ற மதிப்பீடு கமிட்டியும் இரா. செழியன் கமிட்டியும் நன்கு உணர்த்துகின்றன. 1978—ஆம் ஆண்டில் 7.38 கோடி ரூபாய்க்கு 1422 மோசடி சம்பவங்கள் எனில் அதுவே 1982—ல் 19.53 கோடி ரூபாய்க்கு 2065 மோசடி சம்பவங்களாக உயர்ந்துள்ளது என்பதை நாடாளுமன்ற மதிப்பீடு கமிட்டி தெரிவிக்கிறது. பல பாங்குகளின் டைரக்டர்களும் சேர்மன்களும் தங்கள் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

செழியன் கமிட்டி, கணக்குகளை வைத்துக் கொள்வதிலும் நேர் செய்வதிலும் (Balancing) பல ஊழல்கள், குறைபாடுகள், இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. அதிகார துஷ்பிரயோகம், போலி தஸ்தாவேஜு தயாரிப்பு, கணக்குகளில் மோசடி போன்ற பல அம்சங்களில் அரசுடைமையான வங்கிகள் முன்னணியில் நிற்கின்றன என்கிறது. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமெனில் யுனைட்டெட் பாங்க் ஆஃப் இந்தியாவின் 897 கிளைகளில் 749 கிளைகள் 1982—க்கான கணக்குகளை 1983 ஜூன் முடிவில் கூட நேர் செய்யவில்லை! இப்படி எத்தனையோ முறைகேடுகள், ஊழல்கள், தில்லுமுல்லுகளை நாடாளுமன்ற மதிப்பீடு கமிட்டியும் செழியன் கமிட்டியும் பட்டியலிடுகின்றன. படிக்கப் படிக்க நெஞ்சு கொதிக்கிறது. பாங்குகளில் முதலீடாகும் பணம் பெரும்பாலும் சிறுசேமிப்பாளரிடமிருந்து வருகிற தொகை என்பதை எண்ணுகையில் அந்த எளியோரை ஏமாற்றி இழைக்கப்படும் அநீதி புலனாகிறது.

அரசுடைமை பாங்குகளில் நடக்கும் ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்களின் பின்னணியில் எந்த அளவுக்கு அரசியல்வாதியின் தூண்டுதல் இருக்கிறது என்பதை ஆராய கமிட்டி அமைக்கவே மாட்டார்கள் என்றாலும், நமக்குத் தெரியும் 'அவனி'ன்றி ஓர் அணுவும் அசையாதென்று. அரசாங்கத்தின் ஓர் இலாக்காவுக்கே இன்னொரு இலாகாவில் காரியம் ஆக வேண்டுமென்றால் அதற்குக் கூட ''ஸம்திங்'' கொடுத்தால்தான் நடக்கும் என்ற அளவுக்கு லஞ்ச ஊழலைப் போஷித்து வளர்த்து விட்டிருக்கிறார் திருவாளர் அரசியல்வாதி. ஒலிம்பிக்கில் கலந்து கொண்டு நமது அண்ணாவி உயரம் தாண்டலில் உலக ரிகார்டை முறியடிக்கிறாரோ, இல்லையோ, நமது அரசியல்வாதிகளின் லஞ்ச ஊழல் உலக ரிகார்டை யாராலும் முறியடிக்கவே முடியாது!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

பழைய கதை

பழம் பெருமையில் குளிர் காய்வதா?





✖ சூரியன் கோவில் - மொதேரா

ஹரப்பா, மொஹஞ்சோ–தாரோ பற்றி சரித்திரத்தில் படித்த நினைவு இருக்கிறதா? அந்தஹரப்பா நாகரீகத்தின் சின்னத்தைக் காண வேண்டுமானால், ஆமதாபாத் அருகே உள்ள லோதால் என்னும் இடத்திற்கு வர வேண்டும். 1954–ல் கண்டுபிடிக்கப்பட்டு, தொடர்ந்து ஏழுவருடங்கள் அந்த நகரத்தை அகழ்ந்து, அங்கு மக்கள் வாழ்ந்த போது இருந்த வசதிகளின் சுவடுகளை வைத்து ஹரப்பா நாகரீகத்தைக் கணித்திருக்கிறார்கள். லோதால் நாகரீகமான கடற்கரைப் பட்டணமாக, வணிகக் கேந்திரமாகமட்டுமல்லாமல், உலகிலேயே முதன் முதலில் விஞ்ஞான ரீதியில் கட்டப்பட்ட துறைமுகம் கொண்ட நகராகவும் இருந்தது.

கூர்ஜர்கள் இந்தியாவில் குடியேறிய இனத்தவர் என்கிறது சரித்திரம். இவர்கள் ராஜஸ்தானத்தில் குடியேறிய ஹன்ஸ் இனத்தவருடன், இந்தியாவுக்கு வந்தார்களாம். பஞ்சாப் வழியே இவர்கள் வந்த பிறகு, மேற்கு இந்தியாவின் ஒரு பகுதியில் குடியேறினர். அப்போது குஜராட்டா என்று பெயர். இதுவே பிற்காலத்தில் குஜராத் என வழங்கலாயிற்று. பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகே குஜராத் என்ற பெயர் பிரபலமாயிற்று.

குப்தர்கள் ஆட்சிக்காலம் குஜராத்தில் எழுபது வருடங்கள் நீடித்தது. அவர்களுக்குப் பின் வந்த மைத்ரகர் ஆட்சிக் காலத்தில் சௌராஷ்டிரா பகுதியில் கட்டப்பட்ட முப்பது கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியச் சிற்பக்கலை பற்றியஆராய்ச்சியாளர்களுக்கு இவை நிறைய விவரங்கள் தருகின்றன. சூரியனைச் சிலை வடிவில் வணங்கும் வழக்கம் இவர்கள் காலத்தில்தான் துவங்கியதாம். சூரியனுக்குக் கோயில்கள் இங்கேநிறையக் காணலாம். ஆமதாபாத்திலிருந்து 106 கி. மீ. தூரத்திலுள்ள மொதேரா கோயில் முக்கியமானது.

சாளுக்கியர்கள் — சோலங்கி என்று பிறகு அறியப்பட்டவர்கள் —காலத்தில் வாணிபம், கடல் போக்குவரத்து, அரசியல் என்று எல்லாவற்றிலும்குஜராத்தைப்புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றார்கள். ஜைனமும், அஹிம்சையும், இவர்கள் காலத்தில்தான் இங்கே வேர்விட்டன. இதற்குப் பிறகு வந்த வாகேலா ஆட்சிக் காலத்தில், அருங்கட்டடக்கலை உயர்வு பெற்றது. தேல்வாடா (ராஜஸ்தானத்திலுள்ளது) அபு கோயில்களில் காணப்படும் பளிங்குவேலைப்பாடுஇதற்குச் சான்று.

குஜராத்தி மக்கள் பரந்த மனம் படைத்தவர்கள் – பிற மாநிலங்களின் பெரியார்களுடைய போதனைகள் இங்கே சங்கமித்தது மட்டுமல்ல; அவர்களை வழிபடவும் இவர்கள் கற்றுக் கொண்டனர். ஆந்திர தேசத்து வல்லபாசாரியாரின் புஷ்டி சம்பிரதாயம் உத்திரப்பிரதேச சகஜானந்த சுவாமிகளின் சுவாமி நாராயண் சம்பிரதாயம் இவை இங்கே பின்பற்றப்படுகின்றன.

இரான் தேசத்தை விட்டு, எட்டாம் நூற்றாண்டில்



✖ ரவிசங்கர் மகராஜ்

வெளியேறிய பார்ஸி இனத்தவர், கையில் புனிதஜோதியுடன் குடியேறிய இடம் குஜராத் கடற்கரையிலுள்ள ஒரு நகரமான சஞ்சான். ஆரிய சமாஜ நிறுவனர் தயானந்த சரஸ்வதியின் பிறப்பிடமான தான்காரா குஜராத்தில் தான் இருக்கிறது.

போர்ச்சுக்கீசியர் குஜராத்துக்கு முதன் முதலாக வந்த ஐரோப்பியர்கள். சௌராஷ்டிராவின் கிழக்கு கடற்கரைப் பகுதியிலுள்ள

ஒரு சின்னஞ்சிறு தீவான தில் (டையூ என்று தமிழ்ச் சரித்திரப் புத்தகத்தில் படித்த நினைவு இருக்கிறதோ?) இவர்கள் ஆக்கிரமித்த இடம். பிறகு தான் சூரத் பகுதியில் 1612–ல் பிரிட்டிஷ்காரர்கள் பிரவேசித்தனர்.

தாதாபாய் நவ்ரோஜி என்ற தாடிக்காரக் கிழவரின் படம் பார்த்திருப்பீர்கள். (இந்திய தேசிய காங்கிரசின் தோற்ற காலத்தலைவர்களில் (இப்போதுதோற்



○ தாதாபாய் நௌரோஜி

கும் காலத் தலைவர்களைத் தான் ஞாபகம் இருக்கும் நமக்கு!) ஒருவரான இந்த முதுபெரும் மனிதர், பார்ஸி இனத்தைச் சேர்ந்தவர்; குஜராத்தி.

காந்திஜி என்ற மாமனிதர் தோன்றிய புண்ணிய பூமி குஜராத்.

பட்டேல்: துண்டுதுண்டாகச் சிதறிக் கிடந்த சமஸ்தானங்களை இணைத்தவர். (இரும்பு மனிதரா, காந்த மனிதரா?) சர்தார் வல்லப்பாய் பட்டேல் பிறந்த நிலம் குஜராத்தான்.

ஆனால் நம்மைப் போல் ஊருக்குநானர்சிலே? ஊஹூம்.

உத்தரப் பிரதேசத்துக்கு வெளியேயிருந்து முதன்முதலாக ஒரு பிரதமர் – மொரார்ஜி தேசாயை அளித்த மாநிலம்: குஜராத்.

ஒரு ஞானியைப் போல் இங்கே தற்போது வாழ்ந்து வருகிறார் காந்தியவாதி ரவிசங்கர் மகராஜ். மனித குல நேயத்தின் உச்சியைத் தொட்டுவிட்ட இவருக்கு வயது நூறைத் தாண்டி விட்டது.



✕ வல்லபாய் ப்டேல்

'உலகின் நாலு மூலைக்கும் போய் ஆயிரக்கணக்கான பெரிய மனிதர்களைப் பார்த்துப்பேசியிருக்கிறேன். ஆனால் இவரைப் போன்ற மாமனிதரைக் கண்டதில்லை!' என்கிறார் ருக்மிணி தேவி.

''வைஷ்ணவ ஜனதோ பாடலை எம். எஸ். பாடக் கேட்பவர்கள் உருகிப் போவார்கள். ஆனால் அப்படி ஒரு உண்மையான வைஷ்ணவரைக் காண வேண்டுமா? வந்து தரிசியுங்கள் மகான் ரவிசங்கா மகராஜை!'' என்கிறார் இவரது டரம சீடரான பிரபுதாஸ் பட்வாரி – முன்னாள் தமிழக ஆளுநர்.

குஜராத்தியர் இன்று தெற்கு, கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள், ஏடன், நியூஜிலாந்து, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் பெருமளவில் வசிக்கிறார்கள்.

பிரதமர் இந்திராகாந்தி மனப்பூர்வமாகச் சொல்லி, அதில் கருத்து வேற்றுமைக்கு இடமேயில்லாத விஷயம் ஒன்று உண்டு. இதோ படியுங்கள்.



✕ காந்திஜி

''பழைய கதையே பேசி, அதிலேயே குளிர் காய விரும்பாத விசேஷமான மக்கள் குஜராத்தியர். இவர்களது விவசாய, தொழில் முன்னேற்றம் குஜராத்தியரின் துணிச்சலையும், உழைப்பையும் குறிப்பிட்டுக் காண்பிக்கிறது. கூட்டுறவுத்துறையில் இவர்கள் சாதனை, தனி மனித முயற்சியின் தீவிரத்தைக் காண்பிக்கிறது!''

குஜராத்தியரது முன்னேற்றத்தின் இரகசியம் இதுதான்.

குங்குமப் பூ



குங்குமப்பூவிற்கு ஞாழல், கொங்கு போன்ற பெயர்களும் உண்டு. காஷ்மீர் மாநிலத்தின் சீதோஷ்ண நிலையில் மட்டுமே அதிகம் விளைகிறது. விவசாயம் செய்வது மிகவும் கடினம். செலவும் மிகுதி. குங்குமப்பூ வாணிபத்தால் காஷ்மீரம் நல்ல வருவாய் பெறுகிறது.

பூவின் 2.5 செ. மீ. நீளமுள்ள சூல்தண்டின் மீது ஆரஞ்சு நிறமுள்ள சூல்முடிகள் காணப்படும். சூல்முடியை (Stigmas) மட்டும் பொறுக்கித் தனியாக ; வைப்பார்கள். இச்சூல்முடிகள் மட்டும் கொண்ட சரக்கு முதல் தரம். இதன் விலை 1 கி. கிராம் 9000 ரூபாய்.

இதன் குணத்தையும், விலையையும் அறிந்த கஜினி முகமது போன்ற அரசர்கள் காஷ்மீரின் மீது படை எடுத்தனர்!

–குளமங்கலம் செல்வராசன்.



குஜராத் 1960.1984

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து உருவான பின் மகாராஷ்டிரத்துடன் இணைந்திருந்த குஜராத்திலும் எழுச்சியும் போராட்டமும் உருவாயின. இந்துலால் யாக்னிக் உண்ணாவிரதம் இருந்தார். மொரார்ஜி தேசாயோ மகாராஷ்டிராவை விட்டுப் பிரியவே கூடாது என்று பிடிவாதமாக இருந்தார.

மே 1 – 1960.

மகா குஜராத் கிடைக்கப் போராடிய குஜராத்தியர்களின் உள்ளம் குதூகலிக்க மாநிலத்தின் முதல் முதலமைச்சராக டாக்டர் ஜீவராஜ் மேத்தா பதவி ஏற்றார்.

இன்று வெள்ளி விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது குஜராத். வாழ்த்துகிறோம்.

மகாராஷ்டிராவிலிருந்து பிரிந்தாலும் அதிர்ஷ்டவசமாகக் கர்நாடகத்தைப் போல் எல்லைத்தகராறு ஏதும் அன்றுதொட்டு இன்று வரை குஜராத்–மகாராஷ்டிரா இடையே இல்லாதது ஒரு குறிப்பிடத்தக்க விஷயம்.

தொடர்ந்து காங்கிரஸ் அரசாங்கங்களே பதவிவகித்தும் பல முதல்வர்கள் பதவியேற்றும் டாக்டர ஜீவராஜ் மேத்தாவிற்குப் பிறகு ஹிதேந்திர தேசாய் ஒருவரே நிலையில் நிற்கிறவராய் இருக்கிறார் என்றால் தவறில்லை.

○ மொரார்ஜி தேசாய்



○ பாபுபாய் படேல்



○ ஜீவராஜ் மேத்தா



பிறகு காங்கிரஸ் எதிர்ப்பு அலை எழுந்த போது, குஜராத் மாநில காங்கிரஸ் அரசின் போக்கில் குற்றங் குறைகள் கண்டு ஜெயப் பிரகாஷ் நாராயண் ஆசியுடன் மொரார்ஜி தேசாயின் உண்ணாவிரதப்பின்னணியுடன் மாணவர்களின் நவநிர்மாண போராட்டம் 1974–ல் வலுவுற்று உச்சகட்டத்தை அடைந்தது. ஜனதா அமைச்சரவைபதவியேற்றது. பாபுபாய் பட்டேல் முதலமைச்சரானார்.

பின்னால் மறுபடி இந்திரா அலை.

குஜராத் அரசியல் இப்போது சூடு பிடித்திருக்கிறது என்று சொல்லலாம்.

அகடவிகடம் தெரியாத அரசியல்வாதிகள் குஜராத்தில் தான் அதிகம் என்று வெளி மாநிலங்களில் உள்ள பலர் நினைத்துக் கொண்டிருந்தாலும் இங்கேயும் அரசியல் அரசியல்தான் என்று இப்போது சில நிகழ்ச்சிகள் உணர்த்துகின்றன.

முதலமைச்சர் திரு. மாதவ்ஸி சோலங்கி நான்கு வருடங்களை வெகு வெற்றிகரமாகத் தள்ளியிருந்தாலும் இன்னும் மீதியிருக்கிற ஒரு வருடம் அவருக்கு நிறைய தலைவலிகளை உண்டாக்கலாம்.

சமீபத்திய ராஜ்ய சபைத் தேர்தலில் அவரது ஆதரவாளராகச் சொல்லப்பட்டவர ஒருவர் தோல்வியுற்

றதும். சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினரில் குறுக்கு — ஓட்டுப்போட்டது யார் யார் என்று புதிர் விடுபடாத சூழ்நிலையில், அவருடைய தோல்வியை முதலமைச்சரின் தோல்வியாகவே செய்திகள் வர்ணித்தன.

சிறிது சிறிதாகப்புகைந்து கொண்டிருந்த அதிருப்தியாளரின் கோஷ்டி சற்று வெளிப்படையாகவே செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த கோஷ்டிக்குத் தலைவராக, அரசின் இருபது அம்சத் திட்டச் செயற்குழுவின் நிர்வாகத் தலைவராக இருக்கும் ஜினுபாய் தர்ஜிபோர்க்கொடிஉயர்த்தியிருக்கிறார். சிவில் சப்ளை அமைச்சர் மஹேஹர்சிங்ஜி ஜாடேஜாவும், ஏன் — நிதியமைச்சர்சனத்மேத்தா உட்பட இன்னும் இரண்டு, மூன்று முக்கிய அமைச்சர்களும் அமைச்சரவையிலிருந்து விலகுவோம் என்று கூட முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது. ஆனால் டில்லி மேலிடம் அப்படி ஒரு குழப்பச் சூழ்நிலை குஜராத்தில் உருவாக விடாது என்றும், அடுத்துள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் புதிதாகக் கலக்கப்பட்டிருக்கும்குட்டை தெளிவாகிற வரை இங்கு ஏதும் குளறுபடி செய்ய அனுமதிக்காது என்றும் தெரிகிறது.

இதனால் எல்லாம் முதலமைச்சர் மாதவ்ஸிசோலங்கி மனமுடைந்து போகவில்லை. 'அமைச்சரவையில் இருந்து கொண்டே குற்றங்கள் சுமத்துவது அபத்தம்; அநியாயம். வேண்டுமானால் வெளியே போய் விடுங்கள்!' என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார். சூழ்நிலை எப்படி சூடுபிடிக்கப் போகிறது. எந்த உருவில் மாறப் போகிறது சோலங்கி தாக்குப் பிடிப்பாரா?

சட்டசபை, பாராளுமன்றம் இவற்றில் உறுப்பினர்களாயிருந்து ஓய்வு



× ஜயப்பிரகாஷ் நாராயண்



× சனத் மேத்தா

× ஹிதேந்திர தேசாய்



பெற்றவர்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டும் என்று இன்றைய மாநில அரசு சட்டம் கொண்டு வந்தது. இது இன்னொரு புதிய போராட்டத்துக்கு வித்திட்டிருக்கிறது.

''இது வெறும் அரசியல் நோக்கம்கொண்ட எதிர்ப்பு. பிரிட்டனில், ஸ்வீடனில், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனியில் எல்லாம்ஓய்வு பெற்ற பாராளுமன்றஉறுப்பினர்களுக்கு பென்ஷன் கொடுப்பதில்லையா!'' என்று பதிலளித்திருக்கிறார் பிரபோத் ராவல் — உள்துறை அமைச்சர்.

துணை நிதியமைச்சர் ஹரிஹர் கம்போல்ஜா, 'ஏன், ஜனதா காலத்தில் எம். எல். ஏ. சம்பளம் 250—லிருந்து 1000 ரூபாய் ஆக்கவில்லையா? அப்போது எதிர்ப்பே தெரிவிக்கவில்லையே?' என்று கேட்கிறார்.

'என்ன மதுவிலக்கு வாழ்கிறது இங்கே! குடிக்கிறவர்கள் குடித்துத் தள்ளுகிறார்கள்!' என்று முதலமைச்சர் சோலங்கி ஆத்திரத்தில் சொன்னாலும் சொன்னார், நாலா பக்கத்திலிருந்தும் அதற்கு எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

''நீங்கள் இப்படிச்சொல்வது மதுவிலக்கு நீக்கப்படும் என்பதற்கு அடிபோடுகிற மாதிரி அல்லவா இருக்கிறது:'' என்று சாடியிருக்கிறார் மாநில ஜனதா பொதுச் செயலர்.

பெண்கள் முன்னணித் தலைவி ஸ்ரீமதி ஜெயாபென் ஷா முதலமைச்சரின் பேச்சைக் குறைகூறி இருப்பதுடன் 'இந்தச் செய்தி இன்னும் பலரைக் குடிக்கத் தூண்டும்' என்று எச்சரித்திருக்கிறார்...

சரி, ஜனதாவில் ஒற்றுமை எப்படி இருக்கிறது? சொல்லிக் கொள்கிறமாதிரி இல்லை. இந்துபாய் பட்டேலின் தலைமைக்கு எதிர்ப்பு இருக்கவே செய்கிறது — பழைய முதல்வர் பாபுபாய் பட்டேல் கோஷ்டியின் உருவில்.



தென்னகத்தின் அளாவல்

ஆமதாபாத்தில்.... ஒரு கலாக்ஷேத்ரா

"தமிழ்நாட்டை விட, குஜராத்தில் தான் அதிகமாகப் பரதநாட்டிய அரங்கேற்றங்கள் நடைபெறுகின்றன" என்று தெரிவித்தார் ஒரு பத்திரிகையாளர். இது கொஞ்சம் மிகையாக இருக்கலாம். ஆனால் இன்று குஜராத்தி பெண்கள் வெகு ஆர்வமாகக் கற்றுக்கொண்டு வரும் நடனம் — பரதநாட்டியம் என்பதில் ஐயமில்லை.

தெற்கேயிருந்து போய் ஆமதாபாத்தில் 'தர்ப்பணா அகடமி'யை வெற்றிகரமாக நடத்துகிறார் மிருணாளினி சாராபாய். அவரைச் சந்தித்த போது —

"நாங்கள் இங்கே அரங்கேற்றம் என்று சொல்லுவ தில்லை. ஆராதனா என்றே சொல்கிறோம்" என்றார்.

"இதற்கு அவசியமான தமிழ் மொழியை எப்படி இவர்கள் கற்கிறார்கள்?"

"இவர்கள் ஆர்வம் பிரமிக்க வைக்கும். தமிழ்ப் பதங்களும் பாடல்களும் பாஷை புரியாமல் இருக்



தாலும், அவற்றின் அர்த்தத்தை ஆங்கிலத்திலும் குஜராத்தியிலும் நாங்கள் சொல்ல, புரிந்து கொண்டு விடுகிறார்கள். இப்போது குஜராத்தி மொழியிலேயே பாடல்கள் அமைந்த பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் இங்கே பார்க்கலாம். கர்நாடக இசையும் இவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். பல நாட்டிய நாடகங்களும், தயாரித்திருக்கிறார்கள். புதிதாக 'பராசக்தி' என்ற தலைப்பில் பாரதி பாடல்கள் கொண்ட நடன நிகழ்ச்சியின் ஒத்திகையில் பிஸியாக இருந்தார் மிருணாளினி.

"குஜராத்திப் பெண்கள் என்று இல்லை. வங்காளி, மராத்தி, தமிழ் —பெண்கள் கூட இங்கே பரதநாட்டியமும், குச்சிப்புடியும், மோகினியாட்டமும் கற்றுக் கொள்கின்றனர்!" என்றார்.

இவர் மகள் மல்லிகா சாராபாய் ஒரு எம்.பி.ஏ. இவரது பரத நாட்டிய நிகழ்ச்சிகள் உலகின் பல பாகங்களில் நடைபெற்றிருக்கின்றன. இவரும் தாயாருடன் தர்ப்பணாவில் ஓர் இயக்குநராகப் பணியாற்றுகிறார். மாநில அரசு இந்நிறுவனத்திற்கு நல்லாதரவு தருகிறது. ஆனால்... வெளிநாடுகளில் நடைபெறும் இந்திய கலாசார நிகழ்ச்சிகளிலும், மத்திய அரசு ஏற்பாடு செய்யும் தூதுகோஷ்டிகளிலும், தமது மாணவிகள் ஆடத் தகுதி இருந்தும், வேண்டப்பட்டவர்கள் மட்டுமே அந்த மாதிரி வாய்ப்புகளைப் பெறுகிறார்கள் என்று வருத்தத்துடன் சொன்னார் ஸ்ரீமதி சாராபாய். "எனினும் 'தர்ப்பணா'வின் தனிப்பட்ட புகழ் காரணமாக வெளிநாட்டினர் எங்களை அழைக்கிறார்கள். சிறு




உட்பட, உலகின் பல்வேறு நாடுகளில் எங்கள் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன!"

தர்ப்பணா அகாடமியில் நாடகப் பிரிவும் உண்டு. பரீட்சார்த்தமான நாடகங்கள் பல நடத்திப் பெரும் புகழ் ஈட்டியுள்ளது.

ஜீவனாம்சம் கணவன் மனைவிக்குத் தருவது மட்டுமல்ல! காதலன், காதலியை ஏமாற்றிவிட்டால், அவன் மீது வழக்குத் தொடர்ந்து 'ஜீவனாம்சம்' பெற்றுக் கொள்ளக் காதலிக்கு உரிமையுண்டு என்பது இங்கிலாந்தில் புதிய சட்டம். —ஜா.ரவி





ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றுதான், அதன் ஒப்பற்ற 3-வழிச் செயலால் வியர்க்குருவை தடுக்கிறது, முறியடிக்கிறது.

OBM-2515 TM

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றில் தான், சிறப்பான பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது—அது, மூன்று தீவிரமான வழிகளில் செயல் படுகிறது.

- **தடுத்தல்**
  இதன் பாக்டீரியோஸ்டாடிக் செயல், பாக்டீரியா கிருமிகள் பெருகுவதை தடுக்கிறது.
- **நிவாரணம்**
  சுகந்த மணமுள்ள ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், வியர்வையை உறிஞ்சுகிறது, இதமளித்து விரைவான நிவாரணம் தருகிறது.
- **செயல்**
  ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒப்பற்ற கெரடோலிடிக் செயல் உள்ளது; அது, பாதிக்கப்பட்ட சருமத்தை விரைவாக மாசு மருவற்றதாக்குகிறது.






குடும்பம்
முழுவதற்குமான
பாதுகாப்பு

Johnson & Johnson

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்- வேர்க்குருவிலிருந்து உங்களுக்கு சிறந்த பாதுகாப்பு.

வேங்கை வனம்



அத்தியாயம் 3

உக்கிரப் பெருவழுதி

நான்மாடக் கூடலாம் மதுரையம்பதியின் நடு நாயகமாக விளங்கிய எழுநிலைமாட அரண்மனையே பெருத்த பரபரப்பில் ஆழ்ந்து காணப்பட்டது.

கானப்பேரெயிலின் காவலன் – போர்க் களத்து வேங்கை – புகழ்மணக்கும் வீரமாப் புருஷன் வேங்கை மார்பன் வருகையால், அசையாத் தூண்கள் அசைந்தன; ஆடாத நெஞ்சங்கள் ஆடின:

முன்னறிவிப்பற்ற வருகையல்லவா?

பாண்டிய சாம்ராஜ்யத்து மாமன்னர் – கயற்கொடியின் காவலன் – உக்கிரப்பெருவழுதி. செவிசாய்த்த மறுகணமே செயல் மகிழ்ந்து முன்வந்து வரவேற்பு கூறுகிறார்:

''வர வேண்டும் வேங்கைமார்பா! உனது வருகையால் மதுரை மகிழ்கிறது; பாண்டிய நாடே பரவசத்திலாழ்கிறது!''

கரம் கூப்பி முகமலர்ந்து கனிந்த புன்னகையுடன் வரவேற்பை ஏற்கிறுன்வேங்கை மார்பன். அவனது கண்கள் சுற்றுமுற்றும் கவனிக்கின்றன.

எங்கே திருமேனி?

வேங்கைமார்பனை அழைத்துச் சென்று, பிரதான சித்திரக் கூடத்தில் அமரச் செய்கிறார் உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர்.

குசலங்களை விசாரித்த பின்னர், நேரமாகி விடவே, ''வேங்கைமார்பா! போய்க் குளித்து முடித்து விரைவில் விருந்துண்ண வருகிறாய். பின்பு சற்றே ஓய்வு கொள்கிறாய். மாலை நீ வந்த காரியம் குறித்துப் பேசுகிறோம்!'' என்றார் பாண்டிய மாமன்னர்.

மீண்டும் வேங்கைமார்பன் கண்கள் அலைமோதுகின்றன...

எங்கே திருமேனி?

எழுந்து கொண்டான் வேங்கைமார்பன்.

அவனுக்கு மிகவும் மரியாதையுடன் பணிவிடை புரிய ஆட்கள் ஆயத்தமாக இருந்தனர்.





இருநாழிகைப் போதுக்குள் குளித்து முடித்து விருந்து மண்டபத்துக்குள் நுழைந்தான் வேங்கை மார்பன்.

நெய் மணக்கும் அறுசுவை விருந்து அமர்க்களமாக நடந்தது.

ஏழாவது சுவையான எழிலரசி திருமேனி எங்கே என்ற கேள்விக் குறிதான் வேங்கை மார்பன் நெஞ்சில் உப்பு சப்பில்லாதிருந்தது. என்ன அவசரமோ?

தன்னுள் ஒரே சமாதானம்,

மாலை பார்க்கத்தான் போகிறோமே! இன்னும், ஏன் வந்தோம்? எதற்காக வந்தோம் என்பது குறித்தே பேசவில்லையே?

எப்படி உதயம் காண்கிறோமோ அப்படி மறைவது தான் அர்த்தமுள்ள மானுடம் என்கிற மகத்தான உண்மையை— தத்துவத்தை உணர்த்துவது போல, மேற்கு வாசலில் மறைந்து கொண்டிருந்தான் சூட்சமத்துக்கும் சூட்சுமமான சூரியப்பிரகாசன்!

அந்தப் பிரம்மாண்டமான அரண்மனையின் இரண்டாம் பட்டத்து வட்டக்கூடத்துள், கானப்பேர் காவலன் வேங்கை மார்பன், பாண்டியப் பேரமைச்சர் தும்பூர் சாத்தனார், தமிழ்ச்சங்கத் தலைவர் மாங்குடி மருதனார், அகநானூறு எனும் அற்புதத் தமிழ் இலக்கியத்தைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டு தொகுத்து வரும் உருத்திர சன்மர், பாண்டிய மகாசேனாதிபதி அழகன் நம்பி ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

இன்னும் பாண்டிய மாமன்னர் பெருமானார் வரவில்லை..

பொதுவாகத் தங்களுக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டனர். ஆனால் வேங்கை மார்பனுக்குரிய மரியாதை ஒவ்வொருவர் நாவிலும் மண்டியிட்டுக் காணப்பட்டது.

மாபெரும் சாம்ராஜ்யாதிபதியான — தமிழகத்து அத்தனை அரசும் அடிபணிந்து நிற்க வல்லவரான உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மன்னரே வேங்கைமார்பனுக்குச் சிறப்பான மரியாதை செலுத்துகிறபோது...

உக்கிரப்பெருவழுதிப் பாண்டிய மாமன்னர் யார்?

அவரது தந்தை — விரமா சிங்கம் —ராஜசார்தூல — பதினாறு வயதிலேயே தமிழகத்து அனைத்துப் பேரரசுகளையும் போரில் வென்று

கோவி. மணிசேகரன்

ஜயப்பதாகை நிறுவி, பாண்டிய குலத்துக்கே பரிதியாக நின்று நிலாவமித்து நெடுஞ்செழியர் தலையாலங்கானத்தில் ஜய பேரிகை கொட்டிய *தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய மாமன்னர் நெடுஞ்செழியராயிற்றே!

அப்பேர்ப்பட்ட தந்தைக்குத் தப்பாமல் பிறந்த தனயராயிற்றே உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர்!

அவர் வருகிறார் என்கிற எச்சரிக்கைக் குரல் ஒலிக்கிறது.

அனைவரும் எழுந்து நிற்கிறார்கள்.

ஆனால் மூன்றாம் தமிழ்ச் சங்கத்துத் தலைவரான 'மதுரைக்காஞ்சி' எனும் மகா காவியம் பாடிய மாப்புலவரான மாங்குடி மருதனார் மட்டும் அமர்ந்தே காணப்பட்டார்.

தொண்ணூறு வயதான காரணமல்ல; தந்தையார் கால முதல் இருப்பவர் என்கிற காரணமுமல்ல; தமிழ் எழுந்து நின்று பணியக் கூடாது என்ற கட்டளை தந்தையார் நெடுஞ்செழிய பாண்டிய மாமன்னர் காலம் முதல் இருந்து வருகிற காரணமாகும். தமிழ் நின்றால் தமிழ்ச் சங்கத்துக்கு என்ன சிறப்பு?

வட்டக் கூடத்தை அடைந்த உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னருடைய கண்கள் வேங்கைமார்பனை உற்றுக் கவனிக்கின்றன.

அடுத்து, சிங்கமுகம் பொறித்த பொன்னாசனத்தில் கம்பீரமாக மாமன்னர் அமர, அனைவரும் அமருகின்றனர்.

"வேங்கை மார்பா! நாம் பேச வேண்டியவை நிறைய இருக்கின்றன. தனித்தும் சரி; அதிகாரிகளுடனும் சரி. ஆனால் இப்போது நீ வந்த நோக்கம் பற்றித் தனித்துப் பேச வந்தாயா? தக்கார் முன் பேச வந்தாயா?"

பாண்டிய மாமன்னர் எடுத்த எடுப்பில் உரிய பொருளுக்கு வந்ததில் மகிழ்ச்சி கண்டான் வேங்கைமார்பன். அவனும் சட்டி முனைபோல் நேராகவே பேச்சு முனைக்கு வர விழைந்து நாவசைத்தான்:

"எங்கள் குல தலைவ, எங்கள் கயற் கொடிக் காவல, எங்கள் சந்திரகுல திலக, உங்கள் நேர்மைக்குக் காணப்பேர் வணங்கி, வாழ்த்துகிறது."

ஒருகணம் தலைகுனிந்து மறுகணம் நிமிர்த்துகிறான்.

"நான் பேச வந்த செய்தி தனிமைக்குரியதேயானாலும், அதற்கு உடனடியாகத் தாங்கள் விடை கூற மாட்டீர்கள். தக்காரைக் கலந்தே விடை தருவீர்கள். ஆகவே தக்கார் முன்னிலையிலே இதனைத் தகுந்தவாறு பேசி முடிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். ஆனால் ஒரே ஒரு முறை..."

"சொல் வேங்கை மார்பா...!"

"எனது கோரிக்கைக்கு இப்போதும் தங்களால் விடையளிக்க முடியாது. ஒருவர் மீதமிருக்கிறார். அவர்களும் வந்துவிட்டால், ஆலோசனை கால தாமதங்களை விழுங்காது."

"யார் அவர்?"

"மதிப்புக்குரிய பாண்டிமாதேவியார்."

அனைவருடைய நெற்றிக்கு நேரே கேள்விக் குறி வியப்புக்குத் தோரணம் கட்டுகிறது.

"ஓ... அப்படியா? நீ அவ்வாறு விரும்புவதானால் இப்போதே வரவழைக்கிறேன்.." என்று கூறிய பாண்டிமாமன்னர், உத்தரவு பணிக்கிறார்.

சிறிது நேரத்துக்குள் அங்கே பாண்டிமாதேவியார் வர, 'யார் எழுந்து நின்றால் என்ன? இதோ நான் எழுந்து நின்று மரியாதை செலுத்துகிறேன்' என்பது போல் எழுந்து நின்று வணங்கினான் வேங்கைமார்பன். மாமியார் என்பது ஒருபுறமானாலும் திருமேனிக் காவியத்தைப் பிரசவித்த தமிழ்வயிறாயிற்றே!

பாண்டிமாதேவி பூரித்துப் போனாள்.

"வேங்கைமார்பா வந்த விஷயத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லலாம்" என்றார் பாண்டிய மாமன்னர் உக்கிரப்பெருவழுதி.

வேங்கைமார்பனும், "பாண்டியர் குலத் திலகமே! எனது நோக்கம் குறித்துத் தூது போக்கிச் செய்தியறியத்தான் மந்திராலோசனை முடிவு செய்தது. அவ்வாறு அனுப்புவது முறையேயானாலும் அது நமது மீன் சின்னத்தைப் போற்றுவதாகாது என்று கருதியதால் நானாகவே – ஆனாலும் ஒரு தூதுவனாகவே வந்திருக்கிறேன்." என்றான்.

அமைதி அழுத்தமாக நிலவுகிறது.

"குலபதி! சுற்றி வளைப்பானேன்? சுந்தரத் தமிழுக்குரிய சௌந்தரிய தேவதையான தங்கள் திருக்குமாரியை, நான் நன்கு அறிந்து, ஆய்ந்து, பிறகு அவள் மீது ஆவல் கொண்டேன்; எனது நினைவில் காவல் கொண்டேன்! கண்கொண்டு பாராத காதலானாலும் இது மண் கொண்டு ஆழப் பதிந்து விட்ட ஆணிவேர்! ஒன்று, எனது காணப்பேரெயிலுக்குத் திருமேனி நாயகியாக வேண்டும்; இல்லை அது எனக்கு *நடுகல் ஆகவேண்டும்!"

குரல் தழுதழுத்து இவ்விதம் வேங்கை மார்பன் கூறிவருகிற போது, உணர்ச்சிவயப் பட்ட பாண்டிய மாமன்னர் உக்கிரப் பெருவழுதி, "வேங்கை மார்பா!" என்று பெருத்த சத்தமிட்டு விட்டார். அவருடைய கண்களின் இமைகளும் கனத்த மீசையும் படபடத்தன.

சிலகணங்கள் வரை அமைதி அவரைச் சமாதானப்படுத்தியது.

ஆனால் ஏனையவர் நெஞ்சில் தென்றல் குடிபுகுந்தது.

பாண்டியமாதேவி இதயத்திலோ, யாரோ வழிய வழியப் பாலைக் கொட்டுகிறார்கள்.

மெல்லத் தமது நிலைமைக்கு வந்த பாண்டிய மாமன்னர், சற்றே பெருமூச்சு விட்டுத் தம்மை ஆசுவாசப்படுத்திக்கொண்டு விடை சொன்னார்: "மீனவர்ச் செல்வ, நடுகல் என்ற வார்த்தையைச் சொல்லலாமா? திருமேனி உனது கோட்டைக்கு நாயகியாகிறாள்! பாண்டிய குலம் பெருமையடைகிறது!"

---

*ஏறத்தாழ கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்று வரலாற்றுப் பேரறிஞர்கள் காலத்தைக் கணிக்கிறார்கள்

* சமாதி

அந்த அரண்மனையே ஆனந்த போதை கொண்டது.

வேங்கைமார்பன் இதயம் பலாச்சுளை யாகித் தேனில் மிதந்தது. அவன் பணிந்து ஏற்கிறான்.

''மாமன்னவா! ஓர் ஐயம்!''

''இனி ஐயப்பட ஒன்றுமே இல்லை; ஆனாலும் கேள்!''

''நானறிவேன்: ஆயினும் இந்தச் சம்ம தத்தை நான் திருமேனியிட மிருந்து எதிர் பார்க்கிறேன்.''

''உன்னை மணக்க அவளுக்கு என்ன கசக் குமா? ஆரம்பத்தில் இந்த ஆண் வர்க்கத் தின் மீது அவளுக்கு நம்பிக்கை இல்லா திருந்ததென்னமோ உண்மைதான். அதற்குக் காரணம், அவள் சிறு பிராயத்தில் தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியாரிடம் தமிழ் பயிலுகிற போது சிலப்பதிகாரத்தைப் பாடம் கேட்க நேர்ந்தது. கோவலன் மீது ஏற்பட்ட கோபம் ஆண் வர்க்கத்தையே அலட்சியம் செய்யச் செய்து விட்டது. இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூன்றும் தமிழ்ச் சங்கத்திற்கு அவள்தான் தலைவி என்று நமது முதுபெரும் புலவர் மாங்குடி மருதனார் வேறு பிரகடனப் படுத்தி விட்டார். எனவே தமிழை மணந்து தனிவாழ்வு வாழ்ந்தால் போதும் என்ற முடி வுக்கு வந்துவிட்டவள் மாங்குடியார் போதனையின் பேரில் மணத்துக்குச் சம்மதித் தாள். ஆனாலும் உன்னை மணப்பதில் அவ ளுக்கு உள்ளூர ஆசை இருக்கிறது என்பதை நாங்கள் குறிப்பாக அறிந்தவர்களே! ஐயமே வேண்டாம்!''

இவை யாவும் வேங்கைமார்பன் அறிந்த வையே; ஆயினும் மாமன்னர் வாய்மூலம் கேட்டது புளகத்துக்குரியனவாக இருந்தன. அவனது நோக்கம் அதுவல்லவே! எனவே வெளிப்படையாகவே சொல்கிறான்:

''மீண்டும் வலியுறுத்துவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். என் கண்களும் இரு மேனியைக் கண்டு குளிர்ந்தாற்போலிருக்கும்; என் காதுகளும் அவளது சம்மதம் கேட்டு மகிழ்ந்தாற் போலிருக்குமல்லவா?''

''ஓ... அப்படியா?'' என்று கூறிய பாண்டிய மாமன்னர் பகபகவென்று நகைக்க லானார். ''அவளைப் பார்க்க ஆசைப்படு கிறேன் என்று சொல்ல வேண்டியது தானே?''


அடுத்துத் தமது பட்டத்தரசியான பாண்டியமாதேவியை நோக்கி, ''தேவி! தோழிப் பெண்கள் சென்றழைத்தால் திரு மேனி வரமாட்டாள்; நாணப்படுவாள். நீ போய் அழைத்து வா!'' என்றார்.

பாண்டியமாதேவியும் பூரிப்புடன் புறப்பட் டாள்.

இடைவெளியில், பாண்டிய மாமன்னர் கானப்பேரெயில் நிலத்தைப் பற்றியும் மக்களைப் பற்றியும் விசாரித்தார்.

தொழில் வளம் குறித்து விசாரித்தார்.

கானப்பேரெயிலுக்கு அண்மையில் இருந்த *ஏரெயில் கோட்டையைப் பற்றித்தெரிந்து கொண்டார்.



ஹோட்டல் முதலாளி: காப்பி குடித்து விட்டு ஆறு சாக்லேட் தருகிறீர்களே!

முரளி: சில்லறைக்குப் பதிலா உங்க ஓட்டலில் கொடுத்த சாக்லேட் நிறைய சேர்ந்து விட்டது. அதைத்தான் திருப்பித் தர்றேன்.

—லலிதா செல்லப்பா.

பாண்டியமாதேவி சென்று வெகுநேரமாய் விட்டது. என்னவாயிற்று? ஏன் அழைத்து வரவில்லை?

பாண்டிய மாமன்னர் ஒன்றும் புரியாது திகைத்து, தோழிப் பெண் ஒருத்தியை அனுப்ப எத்தனித்த போது...

பாண்டியமாதேவி அங்கே வந்து கொண் டிருந்தாள். அவளது முகம் சூம்பி இருந்தது. புறப்படுகிறபோது இருந்த பூரிப்பு திரும்பு கிறபோது இல்லை.

பாண்டியமாமன்னருக்கு மேலும் குழப்பம்.

''என்ன தேவி?''

பாண்டியமாதேவி தயங்குகிறாள்.

''என்ன தேவி? எங்கே திருமேனி?''

பாண்டியமாமன்னரின் குரலில் கோபம் சிறிது ஏறிக் கொண்டிருந்தது.

பாண்டியமாதேவி தைரியத்தை வர வழைத்துக் கொண்டு, அதே நேரத்தில் வேங்கைமார்பனை ஒருமுறை நோக்கி, மறு முறை தலைதாழ்த்திக் கூறினாள்:

''பிரபோ! திருமேனிக்கு இந்தத் திரு மணத்தில் விருப்பு இல்லையாம்; சம்மதமு மில்லையாம். எவ்வளவு எடுத்துச் சொல்லி யும் பிடிவாதமாக மறுத்துவிட்டாள். தனக்கு இந்தப் பிறவியில் திருமணம் செய்து கொள்ளவும் உத்தேசமில்லை என்று கூறி விட்டுத் தலைதறைக்குச் சென்று தாழ்ப்பா ளிட்டுக் கொண்டாள்.''

யார் எவ்வாறு அதிர்ச்சி கண்டார்களோ..

மலையென அதிர்ந்து போனவன், காதல் மயக்கமுற்ற வேங்கைமார்பன்.

(தொடரும்)

---

* 'ஏரெயிற் கதவம் எறிந்த கை கொண்டு'— கோவூர்கிழார். கானப்பேரெயிலை எவ்வாறு இப் போது காளையார் கோயில் என்று வழங்குகிறார் களோ, அவ்வாறே ஏரெயில் கோட்டையையும் ஏழுபொன் கோட்டை என்று வழங்குகிறார்கள். காளையார் கோயில் என்று பெயர்வரக் காரண மானவர் சுந்தரமூர்த்தி நாயனார். ''கானப்பேர் உறைகாளை'' என்று அவ்வூரைப் பாட, பின் னாளில் காளையார் அமர்ந்த கோயிலாகி, காளையார் கோயிலானது.



பெண்கள் தங்கள் மனோபாவங்களை அநேக அழகான வழிகளில்
வெளிப்படுத்துகிறார்கள்.
விமல் அவற்றில் ஒன்று.

புடவைகள்
ஜார்ஜெட்ஸ்•ஷிஃபான்ஸ்
வாயில்ஸ்
டிஷ்ஷூஸ்•க்ரேப்ஸ்

Mudra : RTI : 1571 TAM

கம கமா...!

— முகுந்தன் —

வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் சமையல் குறிப்பு எழுதினால் எப்படி இருக்கும்?... ஒரு கற்பனை.

கலைஞர் கருணாநிதி:

போராட்டம் என்பது தமிழனின் மூச்சுடன், பேச்சுடன், உணர்வுடன், உதிரத்துடன் கலந்திட்ட ஒன்று. எனவே இன்று நாம் போராட்டப் பொரியல் செய்வது எப்படி என்று பார்ப்போம்.

பொரியலுக்கு முதல் தேவை காய் அல்லது காய்கள். இடைத் தேர்தல்களுக்கு வேட்பாளர்களை எப்படிக் கவனத்துடன் தேர்வு செய்திடுவோமோ, அதே போன்ற அக்கறையுடன் காய்களையும் தேர்ந்தெடுத்திடல் வேண்டும். பசுமை, சுவை இவற்றுக்குத்தான் முக்கியத்துவம் அளித்திட வேண்டுமே தவிர, கவர்ச்சிக்கு மயங்கி விடக் கூடாது.

எந்தக் கட்சியிலும் புல்லுருவிகள் சிலர் இருப்பார்கள். அதேபோல், காய்களிலும் சொத்தையோ, புழு, பூச்சியோ காணப்பட்டால், தயக்கமின்றி வெட்டி எறிந்திட வேண்டும். அவற்றை அனுமதித்து விட்டு, பின்னர் வருந்திப் பயனில்லை.

எதிரிகளை, இனத் துரோகிகளை, கூட இருந்தே குழி பறிக்கும் குள்ளநரிக்குணம் படைத்திட்டோரைப் பழி வாங்குதல்போல, காய்களைத் துண்டு துண்டாக வெட்டி, காரம் — உப்பு — மசாலாத் தூள் சேர்த்துப் பூசி வைத்துக் கொள்ளுங்கள்.



தமிழ் மாநிலம் போலப் பரந்து விரிந்து— ஆழ்ந்து இருண்டு — கிடக்கும் கடாயில் எண்ணெயை ஊற்றி, அது மானமுள்ள மறத் தமிழனின் நெஞ்சம் இலங்கைப் படுகொலைகளைக் கண்டு கொதிப்பது போலச் சூடேறியதும், மசாலா பூசப்பட்ட காய்களைப் போட்டு, பொன்னிறம் வரும் வரையில் வதக்கவும்.

எதிர்க்கட்சியில் இருந்திடும்போது போராட்ட அறிவிப்புகள் மூலம் மக்களைத் தூண்டி விடுதல் போல, அவ்வப்போது கடாயிலுள்ள காய்களைக் கிண்டிக் கொடுத்திட வேண்டும். இல்லையேல், பொரியல் கரியல் ஆகிவிடும்.



எதற்கும் பொரியல் செய்திடும் தேதியை முன்கூட்டியே அறிவித்திடல் வேண்டும். அப்போது தான் போராட்டப் பொரியலைச் சுவைத்திட நமது தோழர்கள் அணி அணியாய், அலை அலையாய்த் திரண்டு வந்திட முடியும்.

சோ

எச்சரிக்கை:

இனிப்போ, காரமோ — எதைச் செய்வதாக இருந்தாலும் முதலில் 'ஊழலின் மொத்த உரு இந்திராகாந்தி' என்று 1008 முறை சொல்லி விட்டே ஆரம்பிக்க வேண்டும். அதுதான் உருப்படுவதற்கு ஒரே வழி.

இப்போது நாம் கத்தரிக்காய் பஜ்ஜி செய்யும் முறையைக் கவனிப்போம்.

கத்தரிக்காய் வாங்குவதற்கு முன்பு கடையில் கத்தரிக்காய்களை நன்கு பார்வையிடுங்கள். அது உங்களது உரிமை. இருக்கும்

கத்தரிக்காய்களுக்குள் எது சிறந்ததாகத் தோற்றமளிக்கிறதோ அதையே நாம் வாங்க வேண்டும். இந்தக் கட்டத்தில் தவறு செய்து விட்டு, பிறகு வருந்திப் பயனில்லை.

கத்தரிக்காயின் தலையிலுள்ள காம்பு என்கிற அதிக அதிகாரத்தை ஜனநாயக முறையில் முதலில் அப்புறப்படுத்த வேண்டும். பின்னர், இப்போது 12 பைசா மதிப்பே உள்ள நமது ரூபாய் நாணயத்தின் தோற்றம் வரும்படி, வட்டமாக நறுக்கிக் கொள்ளுங்கள்.

ஏற்கெனவே கரைத்து வைக்கப்பட்டிருக்கும் கடலைமாவில் ராஜ்நாராயண், சரண்சிங், சுப்பிரமணியசுவாமி போன்றோரை நினைவுபடுத்தும் புழுக்கள் காணப்பட்டால், அவற்றைத் தூக்கியெறிந்து விட்டு, கத்தரிக்காயை மாவில் தோய்த்து, மண்டபம் முகாம் இலங்கை அகதிகள் போலக் கொதித்துக் கொண்டிருக்கும் ஏதோ ஓர்



எண்ணெயில் போட்டு, வெந்ததும் எடுத்து விழுங்குங்கள். முக்கியமாகக் கவனிக்க வேண்டியது – பஜ்ஜி வெந்து போய் விடக் கூடாது. சிவப்பு, கேடு கெட்ட கம்யூனிஸ்ட்டுகளுக்கும் ரஷ்யாவுக்கும் பிடித்த கலர் என்பதை விவரமறிந்தவர்கள் உணர வேண்டும்.

பஜ்ஜி நன்றாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் 'இதுதான் நம் தலையெழுத்து' என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு சாப்பிடவும். (சாப்பிடும் போது நகர்வாலா ஊழல், மாருதி ஊழல், அந்துலே விவகாரம் எல். என். மிஸ்ரா மரணம், சஞ்சீவரெட்டி போன்றவற்றை நினைத்துக் கொள்ளக் கூடாது.)

எம். ஜி. ஆர்.:

காய் தோன்றி பழம் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய பழந்தமிழன், கிழங்குகளைத்தான் சாப்பிட்டதாக ஆய்வு விஞ்ஞானிகள் நமக்குக் கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார்கள். எனவே, பழந்தமிழனை, தமிழை, தமிழன்னையைப் போற்றும் ஒரே வழி, கிழங்குகளைச் சாப்பிடுவதுதான்.


கிழங்கிலே சிறந்தது பீட்ரூட் கிழங்குதான். ஏனெனில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிடித்த கிழங்கு பீட்ரூட் கிழங்கு, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் விரும்பியதும், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜ் ஆகிய பெரியோர்களின் மனம் கவர்ந்ததும் பீட்ரூட் கிழங்குதான். இதை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

நான் பீட்ரூட் கிழங்கின் தன்மையைப் பற்றிப் பல முறை சொல்லியிருக்கிறேன். ஆனால் 'பீட்ரூட்டும் ஒரு கிழங்கா?' என்று முன்னாள் முதல்வர் கருணாநிதி கேலி பேசியிருக்கிறார். அவரது ஆட்சிக்காலத்தில் பீட்ரூட் கிழங்கு பயிர் செய்வதை அவர் எதிர்க்கவில்லை என்பதைக் காட்டும் கோப்புக்கள் என் கையில இருக்கின்றன. சந்தர்ப்பம் வரும்போது அவற்றைப் பொது மக்கள் பார்வைக்கு வைப்பேன்...

பீட்ரூட் கிழங்கில் ஏ முதல் இஜட் வரையில் உள்ள எல்லா உயிர்ச்சத்துக்களும் அடங்கியுள்ளன. அது மட்டுமல்ல; பீட்ரூட் கிழங்கை வெட்டினால், சிவப்பாக ரத்தம் போல இருக்கும். இரத்தத்தின் ரத்தமான நமது கழகத் தோழர்கள் தினமும் ஆளுக்கு ஒரு பீட்ரூட் கிழங்காவது அப்படியே – சமைக்காமல் – பச்சையாகச் சாப்பிட வேண்டும். அப்படிச் சாப்பிட்டால் தான் அவர்கள் அண்ணாவின் உண்மையான தம்பிகளாகக் கருதப்படுவார்கள் என்பதைக்கூறி அண்ணா நாமம் வாழ்க என்று கூறி வாழ்த்தி விடை பெறுகிறேன் வணக்கம்!

அமைச்சர் காளிமுத்து

புரட்சித் தலைவர் என்கிற எரிமலையின் புகழைத் தாழங்குடையால் மறைத்திட முயலும் புல்லுருவிகளின் புத்தி வளர



வைட்டமின்கள்



தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை



வேண்டுமானால், அவர்கள் இனிமேலும் என்னைப் போல இரண்டு வேளையும் புலிக் குழம்பு வைத்துச் சாப்பிட வேண்டும்.

நான் ஆறும் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த போது அதிரசப்பட்டி டெண்ட் கொட்டகையில் புரட்சித் தலைவர் நடித்த 'குலேபகாவலி' படம் பார்த்து — குறிப்பாக சொல்லப் போனால் அவர் அதிலே புலியுடன் கட்டிப் புரண்டு வீராவேசத்துடன் சண்டையிடுவதைக் கண்டு — புல்லரித்துப் போனேன். அது வரையில் புலிக்குழம்பு என்றால் வெறுத்து ஒதுக்கியவன். அன்று முதல் புலிக் குழம்பைத் தேடிப் பிடித்துச் சாப்பிட ஆரம்பித்தேன்.

புலிக் குழம்பு செய்யும் முறை எப்படி?

நல்ல புலியாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, குழம்பு வைப்பதற்கு அறுபது மணித் துளிகள் முன்பாகச் சட்டியிலிட்டுத் தண்ணீரில் ஊற வைக்கவும்.

பின்னர், ஏகடியம் பேசித் திரியும் எதிர்க் கட்சியினரின் வாயைப் போல அகன்ற ஒரு பாத்திரம் அல்லது சட்டியில், புலிச்சக்கையை எடுத்துப் போட்டுவிட்டு, தண்ணீரை மட்டும் ஊற்றிக் கொள்ளவும்.

அவரவரது ருசி சொரணைக்குத் தக்கபடி, தேவையான காய்கறிகளை நறுக்கி, புலித் தண்ணீரில் போடவும். தேவையான அளவு சாத்தூர் மிளகாயைச் சன்னமாக அரைத்த தான் (சாத்தூருக்குச் சிறு வயதில் நான் செல்லும்போதெல்லாம் செந்தில்கனி நாடார் கடையில் தான் வீர மறவனின் உதிரம் போல் சிவந்த மிளகாய் வாங்குவது வழக்கம். அது இப்போதும் என் நினைவில் சிவப்பாக இருக்கிறது.) பெருங்காயம், உப்பு ஆகியவற்றையும் போட்டு, நன்றாகக் கொதிக்க விடவும். புலிக்குழம்பு கொதிக்கும் நேரத்தில் கம்மாயிராமல் புரட்சித்தலைவர் முன்பொரு முறை சட்டமன்றத்தில் நிகழ்த்திய எட்டு மணிநேரச் சொற்பொழிவை எழுத்துக்கு எழுத்துப் படித்துச் சுவைக்கலாம்.

குழம்பு கொதித்து, புலி வாசம் அடங்கியபின், சட்டியை இறக்கி வைத்து, குழம்பைச் சோற்றில் ஊற்றிப் பிசைந்து சாப்பிட — எனது பெருமதிப்புக்குரிய தானைத் தலைவர், பொன்மனச் செம்மல் மீது ஆணையாகக் கூறுகிறேன் — அண்ணாயிசம் புரியும், அண்டசராசரமும் தெரியும். அப்படித் தெரியவில்லை என்று கூறிடும் தமிழ்த் துரோகிகளின் நாக்கைப் பிளந்து, நரம்பை உருவி, நடுத்தெருவில் நிறுத்தி, அறுந்த செருப்பால் அடிக்க வேண்டும்.

முக்கியப் பின்குறிப்பு: புலி என்று வரும் இடங்களைப் 'புளி' என்று திருத்திப்படிக்கவும் குலேபகாவலி புலி தவிர.

உட்கார வைத்த இடத்திலிருந்து பாய்ந்து வந்து, மனைவியின் தலைமுடியைப் பிடித்து உலுக்க முடியவில்லை பாபு....

வினால் அவ்வளவு ஏன், தொடர்ந்து அதே சுருதியில் கத்தக் கூட முடியவில்லை....

''எவனுக்காகடா விருந்து?''

இதைக் கேட்பதற்குள், அவன் தேகத்தில் எங்கெங்கோ வலிக்கிறது...

அடியென்றால் அடி... சும்மாவா?

கதாநாயகன் வில்லனோடு மலையுச்சியில் சண்டை போடுவது போலக் காட்சி....

டூப் இல்லாமல் அநாவசியமாய் விபரீதங்களில் மாட்டிக் கொள்ள விருப்பமில்லை என்பதை, கதாநாயகன் இட்ட வட்டமாகக் கூறியதன் விளை...

பாபு, கதாநாயகனுக்காக யுத்தகளத்தில் இறங்க வேண்டியதாகி விட்டது..

இது மாதிரியான காட்சிகளில் நடிப்பதற்காகத்தானே அவனையும் இத்தனை செலவு பண்ணி அழைத்து வந்திருக்கிறார்கள்....

பாபுவுக்குச் சிம்லாவுக்கு வந்த குஷி. போதாக் குறைக்கு வில்லன் நடிகரின் தயவில் கிடைத்த ஃபாரின் சரக்கு வேறு உள்ளுக்குள் வேலை செய்து கொண்டேயிருந்தது. ஓசியில் கிடைக்கிறதே என்கிற சந்தோஷத்தில் வயிறு முட்ட சிக்கன் பிரியாணி வேறு அடித்திருந்தான்.

சாதாரணமாய்ச் சண்டைக் காட்சிகளில் கதாநாயகனுக்கு டூப்பாக நடிக்கும்பொழுது மிதமாகக் குடித்து விட்டுக் களத்தில் இறங்குவானே தவிர, இது மாதிரி மூச்சு முட்டக் குடித்து, வயிறு முட்டத் தின்று விட்டுக் காமிரா முன் நின்றதில்லை...

உடம்பை அசைக்க முடியவில்லை அவனால். வில்லன் நடிகரின் தாக்குதலுக்கு இணையாய் ஈடு கொடுக்க முடியாமல் அடிக்கடி மண்ணில் உருண்டான். நடுவே வயிறு சங்கடப்படுத்துவதாகச் சொல்லி; விலகிப் போய் உட்கார்ந்து ஓய்வெடுத்துக்கொண்டு, டைரக்டரிடம் வாங்கிக் கட்டிக்கொண்டான்.

இந்த முறை ஒழுங்காக நடித்து, நல்ல பேர் வாங்கியே விடுவது என்கிற தீர்மானத்துடன், தன் சக்தியனைத்தையும் ஒன்று திரட்டிக் கொண்டு நடிக்கத் தொடங்கியவன் செங்குத்தான மலையுச்சியின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு ஊசலாட வேண்டிய கட்டத்தில், கைப்பிடிப்பைத் தளரவிட...

அந்த மலையுச்சியிலிருந்து விழுந்தவர்கள் யாருமே இதுவரையில் உயிர் பிழைத்ததில்லையாம்... கூடியிருந்தவர்கள் கதைகதையாகச் சொன்னார்கள்...

அப்படிச் செத்திருந்தால் கூடத்தேவலை போலத்தான் இருக்கிறது பாபுவுக்கு...

மரண அடி என்பார்களே... அது எப்படியிருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் – பாபுவின் அப்போதைய நிலையைப் பார்த்தால் போதும்...

தற்காலிகமாய் ஏதோ முதலுதவி செய்தார்கள். அவ்வளவுதான். அங்கிருந்து விமானத்தில் ஏற்றி அனுப்பி விட்டார்கள்.. அவனுக்குத் துணையாக இரண்டு பேர்...

விமானத்தில் சென்னை திரும்பும் வரையில் சுயநினைவே இல்லை அவனுக்கு...

நினைவு வந்த பொழுதோ...

காரில் இருந்தான்...

பிசால் நின்று வேண்டும்



''டேய்... என்னங்கடா... ஆஸ்பத்திரியா இது...''

''இல்லேண்ணே... காரு...''

''காரா... எங்கடா போறோம்....''

''உங்க வீட்டுக்குத்தான்...''

''என் வீடா... அது மெட்ராஸ்லே...''

''இப்ப மெட்ராஸ்லேதாங்க இருக்கோம். நாலஞ்சு நானா படுத்த படுக்கையிலதாங்க இருந்தீங்க. இன்னிக்குக் காலமேதான் டாக்டர், வீட்டுக்குத் தூக்கிப் போங்கன்னு சொன்னாரு...''

''ஏண்டா...''

இதைக் கேட்கும் பொழுதே, பாபுவின் இதயம் பயத்தில் நின்றுவிடும் போலப் படபடக்கிறது...

எப்பேர்ப்பட்ட முரடனையும் கதிகலங்கச் செய்வதாயிற்றே இந்த மரண பயம்.... பாபு மாத்திரம் இதற்கு விதிவிலக்கா என்ன...?

''பயப்படும்படியா ஒண்ணும் இல்லே அண்ணே... இன்னிக்கு ஒரு ராவு நீங்க வீட்டுல தங்கும்படியா இருக்கும்...

அனுராதாரமணன்

நாளைக்கே உங்களை ஆஸ்பத்திரியில சேர்க்க வேண்டிய ஏற்பாடுங்களோட வர்றோம்...''

பாபுவைக் கைத்தாங்கலாய் அவன் வீட்டு வாசலில் கொண்டு வந்து இறக்கிய போது, துணைக்கு வந்த இருவரும் சொன்ன உறுதி மொழிகள் இது...

பாபுவின் உண்மை நிலை என்னவெனில்... இதுமாதிரி அசிரத்தையாய் நடத்திக்கூட்டிக் கொண்டு வரும் நிலையில் அவன் இல்லை...

படுக்கையில் மூக்கிலும், விரலிலும் ரப்பர்க் குழாய்களைச் செருகிக் கொண்டு, கட்டையாய்க் கிடக்க வேண்டிய நிலை...

ஏகப்பட்ட ரத்தம் சேதமாயிருந்தது.... வயிற்றிலும், மார்பிலும் பலத்த அடி....


''இது ரொம்ப நாள் தாங்காது... ஆஸ்பத்திரி, ட்ரீட்மெண்ட்னு அநாவசியமா செலவு பண்றது தான் மிச்சம். எதுக்கும் அந்த ஆள் திருப்திக்கு, ஏதாவது நர்ஸிங் ஹோம்லே கொஞ்ச நாள் அட்மிட் பண்ணி வையுங்க... அப்படியே இவனுக்கு ஆயுசு கெட்டியா இருந்து, பொழைச்சு எழுந்தாலும் எதுக்குமே பிரயோசனமில்லே...''

டாக்டர்கள், பாபுவின் சிகிச்சை செலவுக்காகப் பத்தாயிரம் ரூபாயை, அவனுடன் துணையாகப் புறப்பட்ட மனிதர்களிடம் தர — அதிலும் பாதித் தொகையைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு மீதியை மாத்திரம் பாபுவிடம் கொடுத்து விட்டுக் கிளம்பி விட்டார்கள்.

''டேய்... நாளைக்கு வருவீங்களாடா.. இல்லே, கைகழுவி விட்டுடுவீங்களா...?''

பாபு, முக்கலும், முனகலுமாய்க் கேட்டதற்கு இருவருமே பெரிசாய்த் தலையாட்டி, சண்டிப்பாய் வந்து விடுவதாகத்தான் சொல்லிவிட்டுப் போனார்கள்...

இருந்தாலும் பாபுவுக்கு நம்பிக்கையே இல்லை. எப்படி இருக்கும்? இவர்களது



நிலையில் அவன் இருந்திருந்தால் அவனுமே ஏமாற்றத்தானே பார்ப்பான்.

தன்னால் எதுவுமே செய்ய முடியவில்லையே என்கிற சுய பரிதாபத்துடன் கண்ணெதிரில் இரண்டு தட்டுக்களில், சம்பிரமமாய்ப் பரிமாறப்பட்டிருந்த சாப்பாட்டைக் கண்டதும் உண்டான எரிச்சலும்சேர்ந்துகொள்ள...

''சொல்லேன். எவனுக்கு விருந்து படைக்க வச்சிருக்கே.''

தாரா பதில் சொல்லக் கூடத் திராணியில்லாமல் ஸ்தம்பித்து நிற்கிறாள்.

இன்னமும் அவள் தன் சுய பிரக்ஞைக்கு வரவில்லை...

'திடுதிப்'பெனப் புருஷனைப் பார்த்த அதிர்ச்சி. அவன் உடம்பு முழுக்கப் போடப்பட்டிருந்த கட்டுக்கள் வேறு நெஞ்சுக்குள் பலத்த இடியாய்...

என்னதான் வேண்டாத கணவனாக இருந்தாலும், கண்ணெதிரில் அவன் படுகாயப்பட்டுக் கிடக்கும்பொழுது நெஞ்சு பதறத்தானே செய்யும்...

''ஐயோ... என்னங்க ஆச்சு?''

அவள் கம்மிய குரலில் வினவ...

அவன் உறுமுகிறான்...

''இன்னும் உசிரோடத்தான் இருக்கேன்...''

''....''

''என்னைப் படுக்கையில படுக்க வைடீ...''

அவள், அவன் சொன்னபடி செய்ய...

இரு கைகளும் பாண்டேஜ் சுற்றிய நிலையிலும் அவன் பரபரத்துப் போகிறான்.

இருக்கிறபடி இருந்திருந்தால் – இத்தனை நேரத்துக்கு அவளை, தரையில் போட்டுப் புரட்டியெடுத்திருப்பான்... இப்பொழுதோ–

''த்தூ!!!''

அத்தனை எரிச்சலையும் ஒன்று திரட்டி, அவள் முகத்தில் காறி உமிழ்கிறான் அவன்.

''கட்டுப் பிரிக்கட்டும்டீ... உன்னை ஒரு கை பார்த்துக்கறேன்... நான் இல்லாதப்ப, கள்ளக் காதலனை வரவழைச்சுச் சமைச்சுப் போடறியா...?''

''ஐயய்யோ... இவளிங்க... துணைக்காக எப்பவும் ஒரு ஆயாவை வந்து படுத்துக்கச் சொல்லியிருந்தேன்...''

''அது யாரும் எனக்குத் தெரியாமப் புதுசா ஆயா...''

''எங்க ஆபீஸ்லே பெருக்கி, சுத்தம் செய்யறவ...''

''ஓ... இன்னிக்கு எங்கே அவளைக் காணோம்...''

''உடம்பு சரியில்லைன்னு சொல்லிட்டிருந்தா... அதான் வரல்லே போல இருக்கு...''

தாரா, முகத்தைத் துடைத்தபடி, தன் தட்டில் பரிமாறியிருந்த சோற்றைப் பிசைந்து எடுத்து வருகிறாள்...

''ஒரு வாய் சாப்பிடுங்க...''

''விளையாடறியா?''

''....''

''ஒரு வாய் தண்ணி கூட முழுங்க முடியல்லேடீ... காலையில இவனுங்க வந்து அழைச்சுட்டுப் போற வரைக்கும் கூடத்தாங்காது போல் இருக்கு... ஓடு... இப்ப போய் ஒரு ஆம்புலன்ஸைக் கூட்டிவா...''

அவன் வலியில் கத்த, தாரா – கையிலிருந்த தட்டை அப்படியே போட்டுவிட்டுத் தெருவுக்கு ஓடுகிறாள்.

நெஞ்சுக்குள் துக்கம் பந்தாய் அடைக்கிறது...

இத்தனை நேரத்துக்கு மேல் எங்கேபோய், ஆம்புலன்ஸை வரவழைப்பது... எந்த ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போவது....

அமாவாசை பிறந்த வீட்டிலேயே இருந்தபோது நடந்த ஒரு சம்பவம் நினைவில் நிழலாடுகிறது...

தாராவின் அப்பா ஏசு பிசகாய்க் காரை ஓட்டி, மரத்தில் மோதிக் காலை ஒடித்துக் கொள்ள...

அவரைப் பத்து பேராய்த் தூக்கிப்போய்ப் பிரபலமான நர்ஸிங்ஹோம் ஒன்றில் சேர்த்ததும், மருத்துவத்தில் தலைசிறந்த டாக்டர்கள்



நாட்டைக் காக்க மூன்று அம்சங்கள் தேவை என்றார் கன்பூசியஸ்.

1. மக்கள் வயிறார உண்பதற்குப் போதிய உணவு. 2. போதிய படைக்கலம். 3. மக்களுக்கு ஆட்சியாளரிடம் நம்பிக்கை.

அப்போது சேகாய் என்பவர், ''இந்த மூன்றில் ஒன்றை விட்டுவிட வேண்டும் என்றால் எதை விடுவீர்கள்?'' என்று கேட்டார்.

கன்பூசியஸ், 'படையை விட்டுவிடுவேன் !' என்றார்.

''இன்னொன்றையும் விட்டுவிட வேண்டுமென்று ஏற்பட்டால்...?'' என்று தொடர்ந்து கேட்டார் சேகாய்.


கன்பூசியஸ், ''உணவையும் விட்டுவிடத் தயார். மக்களுக்குப் போதிய உணவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பஞ்சம் உலகுக்குப் புதியதில்லை. ஆனால் அரசாங்கத்தில் மக்கள் நம்பிக்கை இழந்தால் எந்த நாடும் உருப்பட முடியாது'' என்று முடித்தார்.

ஆதாரம்: அறிய வேண்டிய அறிவுச் சுடர்கள்.

தகவல்: பட்டாணி.

அடுத்த வாரம்:

குஜராத் சிறப்பிதழ்-II





தேர்தல் களத்தில்...

நமது நிருபர்

-Special Report

ஒன்று கூடி அவருக்குச் சிகிச்சை அளித்ததும்...

இத்தனைக்கும் சின்ன எலும்பு முறிவு தான். இருந்தாலும் பணக்காரராயிற்றே....

எல்லாமே தடபுடலாகத்தான் நடந்தது.

இன்றோ—

சமயத்தில் உதவிக்குக் கூட ஆளில்லாத நிலை தாராவுக்கு.

ஒரு கணம் நின்று, ஆபத்துக்குப் பாவமில்லை என்று, பெற்றவர்களுக்கே போன் செய்யலாமா என்று கூட நினைக்கிறாள் அவள்.

ஒரே கணம்தான். அடுத்த வினாடியே தன் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறாள்.

அப்பாவின் இளக்காரமான பார்வையைத் தாங்கிக் கொள்வதை விடவும், புருஷனின் கடுமையான வார்த்தைகளை வாங்கிக் கட்டிக் கொள்வது, அவளைப் பொறுத்த வரையில் மிகவும் சுலபம்.

அவள் உறுதியாக அடுத்த அடி எடுத்து வைக்கும்பொழுது — அவளை உரசுவது போலப் பக்கத்தில் வந்து நிற்கிறது ஆம்புலன்ஸ்...

''இந்த வீடா...''

''இல்லிங்க... அடுத்த வீடு... அதோ, அந்தப் பொம்பளைதான் அடிபட்டவரோட சம்சாரம் போல...''

கதவைத் திறந்து கொண்டு இறங்கிய பெண்மணியை அடையாளம் தெரிந்து கொள்ள முடியாமல் தாரா நிற்க...

அந்த அம்மாள் மிகுந்த வாத்ஸல்யத்துடன் அவளது தோளில் கை வைக்கிறாள்.

''நீதானே தாரா...''

''அ... ஆமா...''

'உம்... எனக்கு ராஜா சொன்னான்... நான் கோவில் வாசல்லே வளைக்கடை வைச்சிருக்கேன்... இப்பத்தான் அவன் தகவல் தெரிவிச்சான். என்னோட மச்சினன் மவன் ஆசுபத்திரியிலே வண்டி ஓட்டுறான்... அவனுக்கு போன் பண்ணி வண்டி எடுத்துட்டு வாடான்னு சொன்னவுடனே வந்திட்டான்.. ஏம்பு...''

தாரா, தன்னைப் பெற்ற தாயே எதிரில் வந்து நிற்பது போல... இது நாள் வரையில் அடக்கி வைத்திருந்த துயரத்தையெல்லாம் ஒரே மூச்சில் கொட்டிவிட வேண்டும் என்கிற துடிப்புடன் அவள் தோளில் முகம் புதைத்து அழத் தொடங்குகிறாள்...

வயதான அந்த மாதின் அணைப்பும், கனிவான பேச்சுமே அவளது துக்கத்தைப் பறக்கச் செய்வதாய்...

அதே நேரத்தில் எங்கோ தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கும் ராஜாவை நினைத்ததும்...

சொல்லத் தெரியாத வேதனை...

'ஓ... இவனுக்கு நான் எந்த விதத்துல நன்றிக் கடனைத் திருப்பிச் செலுத்தப் போறேன்...'

அவள் அழுதபடி ஆம்புலன்ஸில் ஏறி, தன் வீட்டு வாசலில் இறங்குகிறாள்...

உள்ளே—

தன் நினைவிழந்து கிட்டத்தட்ட செத்த பிணம் போலக் கிடக்கிறான் பாபு.

(தொடரும்

குஜராத்தி ஜோக்ஸ்

''இந்த நாயின் விலை 500 ரூபாயா? ரொம்ப அதிகம்.''

''இது மிகவும் நன்றியுள்ளது சார். அதனால்தான் இத்தனை விலை.''

''அப்படி என்னப்பா உசத்தி?''

''நன்றி என்றால் சாதாரண நன்றி இல்லை. நான் யாருக்கு விற்றேனோ அவரிடமிருந்து உடனே திரும்பி என்னிடமே வந்துவிடும்!''



மூன்று நண்பர்கள் ஒரு பிக்னிக் போனார்கள். சாப்பாட்டு நேரத்தின் போது மதராஸி, 'நான் இட்லி–வடை கொண்டு வந்திருக்கிறேன்!' என்றான். வங்காளி, 'நான் ரசகுல்லா கொண்டு வந்திருக்கிறேன்!' என்றான். குஜராத்தி சொன்னார்: 'நான் என் தம்பியைக் கூட்டி வந்திருக்கிறேன்!'





''சிறந்த முறையில் குழந்தைகளை வளர்ப்பது எப்படி என்பது பற்றி ரேடியோவில் உரை கேட்டாயோ?''

''எங்கே! என்னிடம் மூன்று குழந்தைகளையும் விட்டுவிட்டு மனைவி ரேடியோவில் உரை நிகழ்த்தப் போய் விட்டாள். குழந்தைகள் சண்டையை நிறுத்தவே நேரம் சரியாய்ப் போயிற்று!''



சங்கீதம் கற்றுக் கொள்ளும் மனைவி: பாருங்களேன். யாரோ ஒரு செருப்பைப் பக்கத்து வீட்டிலிருந்து எறிந்திருக்கிறார்கள்!

கணவன்: கவலைப்படாதே. தொடர்ந்து பாடு. இன்னொரு செருப்பையும் அவர்கள் எறிந்தால் ஒரு ஜோடி கிடைத்து விடும்!

சேட் மணிலால் மரணப் படுக்கையில் இருந்தார். அவருடைய மூன்று பையன்களும் அவரைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

சேட் மெல்லக் கண் விழித்தார்: ''எங்கே மூத்த பிள்ளை?''

''இங்கே இருக்கிறேன் அப்பா!''

''ரமண் எங்கே?''

இரண்டாவது பிள்ளை கிட்டே வந்தான்: ''இதோ இருக்கிறேன் அப்பா!''

''மோகன் எங்கே?''

கடைசிப்பிள்ளை முன்னால் வந்து, ''இங்கே இருக்கிறேன் அப்பா!'' என்றான்.

இரைந்தார் சேட்: முட்டாள்களே! அப்படியானால் கடையை யார் பார்த்துக் கொள்வது?



சில குஜராத் உணவு வகைகள்



குறிப்புகள் தருபவர்
ஸ்ரீமதி லதா வெங்கடேஷ்

1. சுந்தா:

நல்ல புளிப்புள்ள மாங்காயாகப் பார்த்து ஐந்து கிலோ எடுத்துக் கொள்ளுங்கள். தோலை நன்றாகச் சீவி எடுத்துவிட வேண்டும். துருவிய மாங்காயை ஒரு பாத்திரத்தில் அளந்து வைத்துக் கொள்ள வேண்டும். சரிக்குச் சரியாகச் சர்க்கரை போட வேண்டும். (துருவிய பிறகு அதிலிருந்து கொஞ்சம் ஜூஸ் பிழிந்து எடுத்து விட வேண்டும்.) பிறகு சர்க்கரையையும் மாங்காய்த் துருவலையும் நன்றாகக் கலந்து, ஓர் இரவு முழுவதும் அப்படியே மூடி வைத்துவிட வேண்டும்.

அடுத்த நாள் அதை வாய் அகன்ற பாத்திரத்தில் போட்டு, ஒரு மெல்லிய துணியால் பாத்திரத்தின் வாயைக் கட்டி, காலையில் 7 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெயிலில் வைத்து எடுக்கவேண்டும். தினமும் அதைக் கரண்டியால் கிளறிவிட



வேண்டும். எட்டு நாட்களில் அது நன்றாகச் சேர்ந்து கொண்டு இறுகிவிடும். பிறகு அதில் ஒன்றரை ஸ்பூன் காரப்பொடி போட்டு, ஐந்தாறு ஏலக்காய்களையும் பொடி செய்து போட்டு, நன்றாகச் சேர்த்துக் கிளறி ஒரு பாட்டிலில் போட்டு மூடி வைத்துவிட வேண்டும். ஒரு வாரத்திற்குப் பிறகு –

சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்ளப் பிரமாதமாக இருக்கும்!

ஒரு வருடத்திற்குக் கெடாமல் இருக்கும், குழந்தைகள் அதுவரை விட்டு வைத்தால்!

2. திக்கி பூரி:

காரப் பூரி என்று இதற்கு அர்த்தம்.

தேவை: கோதுமை மாவு 3 கப்; ஓமம் அரை ஸ்பூன், காரப்பொடி 1 ஸ்பூன். தேவையான அளவு கடலை எண்ணெய்.

கோதுமை மாவில் அரை ஸ்பூன் ஓமம், காரப்பொடி, தேவையான அளவு உப்பு இதை எல்லாம் போட்ட பிறகு, நிறைய கடலை எண்ணெயை விட்டுப் பிசைய வேண்டும். கடலை எண்ணெய் 5 அல்லது 6 கரண்டி விட்டுக் கொள்ளலாம். பிறகு அதை நன்றாகக் கெட்டியாக, கொஞ்சம் தண்ணீர் விட்டுப் பிசைந்து கொள்ளவேண்டும். தளரப் பிசைந்து கொள்ளக்கூடாது. பிறகு அதைச் சிறிய சிறிய பூரியாகத் தட்டி, எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுத்து விடவும்.

திக்கி பூரி ரெடி!

3. சுக்கடி (இனிப்பு):

தேவை: கோதுமை மாவு, வெல்லம், நெய்



இரண்டு கப் கோதுமை மாவை, நிறைய நெய்யை விட்டு (அடுப்பைச் சிறியதாக எரியவிட்டு) வறுத்துக் கொள்ளவும். பெரிதாக எரியவிட்டால் கரிந்து போய் விடும். ஒரு மாதிரி நன்றாகச் சிவப்பாக வறுத்த பிறகு, ஒரு கப் வெல்லத்தை, கத்தியால் சீவியபின் அந்த மாவுடன் கூடவே போட்டு, ஐந்து நிமிஷம் கிளறி ஓரளவு சேர்ந்து வந்த பிறகு, ஒரு தட்டில் போட்டு வில்லை போட வேண்டும். சூடாகத் தின்பதற்குச் சுக்கடி நன்றாக இருக்கும்.

குஜராத்தி பழமொழிகள்

★ முதியோர் எளிதில் நிரப் பார் சிக்கலை

★ ஒருமுறை அனுபவித்தால் மறுமுறை புத்தி வந்துவிடுகிறது

★ விழிப்பாயுள்ளவன் மகிழ்ச்சியுடன் இருப்பான்





Do you have any friends or relatives staying abroad?

If so, they have a golden investment opportunity to invest in their motherland without sacrificing the return on their investment.

As you know, India is marching ahead in fields of advancements in industry, medicine, science and technology. But at the same time, we have not forgotten our people abroad.

For Non-Resident Indians, we have a wonderful investment opportunity......National Savings certificates VI and VII series issued by the Government of India.

What happens when Non-Residents invest in this scheme...

(1) They can get back their money in the currency of their own choice.

(2) Investment in National Savings Certificates by the Non-Residents is totally free from Income Tax, wealth tax and gift tax.

(3) Uptill now, the interest on VI and VII issue National Savings Certificates was annually 12%. But as per relaxations declared by Union Finance Minister in his Budget speech on 28th February, 1983, the rates were revised and raised to 13% for the Non-resident Investors.

(4) There's absolutely no limit to the amount they can invest in this scheme.

How is the money utilized......

While investment is earning interest, their money will be utilized for developmental activities in Gujarat........... the Rs. 4000 crores Sardar Sarovar (Narmada) Project, **construction of roads, dams, schools, hospitals etc. in the rural areas.**

Out of the total invested capital, the Central Government gives 66% as loan on minimum interest to the State Government for Development Projects. During the last four years, this loan has amounted to yearly Rs. 90 to 100 crores. In 1982-83 Rs. 107 crores have been received in this manner. Moreover, out of this loan, ad-hoc grants are given to the concerned districts for their District Development Plans.

Who can invest in National Savings Certificate...

Any non-resident of Indian origin as defined by the income tax Act, 1961.

How to invest in National Savings?

(a) For application forms, you may intimate your non-residents friends and relatives to contact our Non-Resident Indian Investment Cell; or you may forward addresses of your non-resident relatives to us.

or

(b) You may intimate your non-resident relatives to contact any post master in Gujarat.

or

(c) To contact any Small Savings Agents in Gujarat.

— Commissioner, Small Savings and State Lotteries, Gujarat.

குஜராத்தி கதை

கார்த்திகாவின் முடிவு

திலீப் ராணபுரா

ஜேமன் ஹால் கதவைத் திறந்த போது, இருபத்தைந்து வயதான ஓர் இளம்பெண் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். யார் இவள் என்று அவன் நினைவைக் கிளறிக் கொண்டிருந்த போது, ''உங்களுக்கு என்னைத் தெரிய வாய்ப்பில்லை!'' என்றாள் அவள்.

''ஆமாம் நீ யாரென்று என்னால் கணிக்க முடியவில்லை.''

''நீங்கள்தானே மிஸ்டர் ஜேமன்?''

''ஆமாம்.''

''உங்கள் தம்பி பெயர் ஜிகிஷ்தானே?''

''ஆமாம்... ஆனால்...'' என்று மு ணுமுணுத்துக் கொண்டே உள்ளே போன போது, அந்த யுவதியும் பின் தொடர்ந்தாள்.

''உட்கார்!'' என்றான் ஜேமன் கையால் சைகைகாட்டி.

அவள் நாற்காலியில் உட்கார்ந்துகொண் டும் ஒரு பெருமூச்சு விட்டாள். ''நான் சரியான இடத்திலிருந்துதான் வந்திருக்கிறேன்!''


ஜேமன் ஒன்றும் புரியாமல், வியப்பும் குழப்பமுமாக அவளையே உற்றுப் பார்த்தான். என்ன சொல்லுகிறாள் இவள்! எப்படி இவளுடன் பேச்சை ஆரம்பிப்பது என்று அவன் தவித்தான். அதற்குள் அவளாகவே, ''என் பெயர் கார்த்திகா!'' என்றாள், தன்னை அறிமுகம் செய்து கொள்கிற மாதிரி.

மறந்து போனவர்கள் வரிசையிலிருந்து அவள் பெயரை நினைவுக்குக் கொண்டுவர முயன்றான் ஜேமன், அவளையே பார்த்தபடி.

''உங்களுக்கு என்னைத் தெரியாது'' என்றாள் அவள் மறுபடியும்.

''ஆமாம், எனக்கு உன்னை நினைவில்லை.''

''ஆனால் எனக்கு உங்கள் எல்லோரையும் தெரியும்.''



''எப்படி?''

''சொல்லட்டுமா?''

அதற்குள் ஜேமஸ் தன் மனைவியைக் கூப்பிட்டு, ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்கக் கொண்டு வரச் சொல்லிவிட்டு, தேநீர் தயாரிக்கச் சொன்னான்.

''நீங்கள் சிரமப்பட வேண்டாம்!'' என்று மறுத்தாள் கார்த்திகா. ''எனக்குக் குடிக்க நீர் மட்டும் கொடுங்கள்!''

ஜேமஸின் மனைவி அங்கிருந்து போனவுடன், ''முன்னாலேயே சொல்லிவிடுகிறேன்!'' என்று ஆரம்பித்தாள் கார்த்திகா. ''நான் வந்திருப்பது நம் இருவர் சம்பந்தப்பட்ட விஷயமாகத்தான். நாம் பேசுகிற போது உங்கள் மனைவி வராமல் இருப்பது நல்லது.''

ஜேமஸுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. பயமாகக் கூட இருந்தது. இதயத்துடிப்பு இன்னும் வேகமாக, ''சரி'' என்றான்.

மனைவி, குடிக்கத் தண்ணீரைக் கொண்டு வந்ததும் அவளை அங்கே வந்து பேச்சில் குறுக்கிடாமல் இருக்கும்படி கேட்டுக் கொண்டான், ஜேமஸ். அவள் அகன்றதும், ''நான் பேச வந்திருப்பது ஜிஜேஷ் பற்றி!'' என்றாள் கார்த்திகா.

''உனக்கு அவனைத் தெரியுமா என்ன?''

''ஆமாம்... நன்றாகத் தெரியும்.''

''எப்படி?''

''நாங்கள் இருவரும் ஒரே கல்லூரியில் படித்த போது உண்டான பரிச்சயம். இந்தப் பரிச்சயம் தொடர்ந்திருந்தால் நட்பாக முகிழ்ந்திருக்கும். நட்பு காதலாக மலர்ந்திருக்கும். காதல் — ஒருவேளை — கல்யாணத்தில் முடிந்திருக்கலாம் — அந்தச் சமயத்தில்...!''

''இப்போது உன் உணர்வுகள் எப்படி இருக்கின்றன?''

''அன்று நாங்கள் பிரிந்தோம். கடைசி வருடத்தில் நான் வேறு கல்லூரிக்கு மாறினேன். அதனால் எங்கள் பரிச்சயம் அந்த எல்லையோடு நின்று விட்டது. ஆனால் ஜிஜேஷ் என் மனத்தில் ஓர் அழுத்தமான சுவட்டைப் பதித்து விட்டுப் போய் விட்டான். ஒன்பது நீண்ட வருடங்களுக்குப் பிறகும் என்னால் அழிக்க முடியாத சுவடு அது. நான் அவனை மறக்க முயன்ற வேளையில், நான்கு மாதங்களுக்கு முன்னால் அவனைப் பற்றிக் கேள்விப்பட்டது என்னை அதிரச் செய்தது. அவன் நினைவுகளை மெல்லத் தூசு தட்டி, அவனது பரிச்சயத்தை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்தவுடன் என்னால் அவனை மீண்டும் பழையபடி மறக்க முடியாமல் போயிற்று!''

''அவனைப்பற்றி என்ன கேள்விப்பட்டாய்?''

''மனநிலை சரியாக இல்லாதவன் என்று.''

''ஆமாம்; அப்படித்தான் இருக்கிறான் அவன்.''

''மனநோய் வைத்தியர்களும், செக்ஸ் துறை நிபுணர்களும், கல்யாணம் ஒன்று

நிருபர்: திருமணத்துக்குப்பிறகு நீங்கள் நடிப்பீர்களா?

நடிகை: அது என் கணவர் விருப்பத்தைப் பொறுத்தது. அவர் விரும்பினால் நடிப்பேன். இல்லையென்றால் விவாகரத்து செய்வேன்.

—பாவ. கோபால்சாமி.



தான் அவனைக் குணமாக்கும் என்றார்கள். சரிதானே?''

''ஆமாம்.''

''ஒரு பெண்ணின் வாழ்க்கையைப்பாழாக்கும் என்பதால் அவனுக்குத் திருமணம் செய்து வைக்க நீங்கள் விரும்பவில்லை. இல்லையா?''

''ரொம்பச் சரி.''

''மனநோய்க்கான சிகிச்சை அவனைப் பூரணமாகக் குணப்படுத்தும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?''

''ஆமாம், சந்தேகமில்லாமல்...''

''அவன் ஒரு திருமணம் செய்து கொண்டு, அந்தப் பெண்ணோடு இல்வாழ்க்கை இன்பங்களில் ஈடுபட்டால், அதுவே அவனைக் குணமாக்கி விடும் என்றும் நம்புகிறீர்கள்?''

''ஆமாம்... ஆனால் வெகுவாய்க் குழம்பிப் போயிருக்கிறோம்!''

''உங்கள் குழப்பத்தில் நீங்கள் சிக்கிக்கொண்டு, ஏழு வருடங்களை வீணடித்திருக்கிறீர்கள். அதிலும் கடந்த மூன்று வருடங்களில் ஜிஜேஷ் சொல்ல முடியாத மனவேதனையில் நொந்து போய் விட்டான். இல்லையா?''

''உண்மைதான்... ஆனால் இதற்கு என்ன முடிவு என்று...''

''சற்று என் பேச்சைக் கேளுங்கள்: சுய அறிவுள்ள எந்தப் பெண்ணும் இப்படிப்பட்ட ஒரு மன நோயாளியை மணந்து கொண்டு துன்பப்படத் தயாராக இருக்க மாட்டாள். சரிதானே?''

''ஆமாம்'' என்றான் ஜேமஸ்.

''பிறகு ஏன் அவனை யாரும் அடையாளம் காணாத தொலை தூரத்தில் எங்காவது அனுப்பிவிட்டு, கொஞ்ச காலத்துக்கு ஏதாவதும் வேசி எவளுடனாவது அவன் வாழ்க்கை நடத்த அனுமதிக்கக் கூடாது?''

எதற்காக நியூட்ரமுல்



''நாக்குலே சாக்லேட் ருசி... நியூட்ரமுல் வஸ்தாத்-ன்ற பெருமை எனக்கு !''

''ரொம்பவும் ஆரோக்கிய மாச்சே இது எம் பையனுக்கு''..



''...விலேயோ பலே பேஷ்-- 7 ரூபா மிச்சம் எம் பையிலே !''



''ருசியாயிருக்கா, படு துடியாப்பாலே குடிக்கறான் ராஜு. பண மிச்சம் பிடிக்கவா நான் நியூட்ரமுல் வாங்கறேன், அதான் இல்லே''.

ISI தரம் உடைய ஒரே ஒரு கோக்கோ-மால்ட் பானமாக விளங்கும் நியூட்ரமுல் இப்போது பிறவற்றைவிட 7 ரூபா விலே குறைவு. எப்படி சாத்தியமாயிற்று இந்தச் சிக்கனம் ? விளம்பர, விற்பனைச் செலவுகளைக் குறைத்ததால்; உற்பத்தித் திறன்களை முடுக்கிவிட்டுப் புதுப்பித்ததால்... மிஞ்சும் லாபம் அனைத்தையும் உங்களிடம் சேர்ப்பிப்பதால். இனியும் நீங்கள் செயற்கைச் சுவையூட்டிய, ISI தரமில்லாத தயாரிப்புகளுக்குப் போய் அதிக விலே கொடுப்பானேன். நியூட்ரமுல் வஸ்தாதாக ஆகிவிடுங்களேன்.

நியூட்ரமுல்	ரூ. 13.34
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 20.45
பூஸ்ட்	ரூ. 21.57

மார்ச் '84 நிலவரப்படி 500 கி. லாக்-ப்பிளெக்ஸிபேக் பேக்குகளுக்கான அது போக உச்ச விலைகள். வரிகள் தனி.

மேலும் லாபமடைவீர் ! வாங்குவீர் பெருஞ் சிக்கன 1 கிலோ டின் அல்லது வசதியான 200 கிராம் டின்.



daCunha/GCM/108(A)/84/TM

ஜேமனுக்கு அதிர்ச்சியில் தூக்கிவாரிப் போட்டது.

"அதிர்ச்சி அடையாதீர்கள். இது ஜிகிஷின் வாழ்க்கைப் பிரச்சினை. நீங்கள் அவனது அண்ணன் என்கிற உறவு, அவனைப் பற்றி உங்களைக் கவலையுறச் செய்கிறது என்று நான் அறிவேன். ஆனால் ஓர் எளிதான நிவாரணம் இருக்கிற பொழுது, ஏன் அதைக் காண மறுக்கிறீர்கள் என்று தெரியவில்லை!"

"மன்னித்துக் கொள் சகோதரி. இந்த மாதிரியான நிவாரணம் எங்களுக்கு உடன்பாடில்லை. மிகக் கேவலமான முடிவு மட்டுமல்ல இது. அதன் பயங்கரமான வேறுவிதப் பாதிப்புக்கள் உங்களுக்குத் தெரியாது போலும்!"

"எனக்கு நன்முகத் தெரியும். நீங்கள் வைத்திருக்கும் முடிவு என்ன?"

"ஏதானும் ஒரு பெண், அவளாக முன் வந்து அவனை மணந்து கொண்டால் ஒழிய, இதற்கு வேறு நிவாரணம் இடையாது. ஆனால் அப்படிப்பட்ட பெண்களைச் சினிமாவிலும், நாவல்களிலும் மட்டுமே பார்க்க முடியும்."

"நிஜ வாழ்க்கையில் இடையாதோ?"

"நிச்சயம் இடையாது. லட்சிய நோக்கமும் நடைமுறை வாழ்க்கையும் இருவேறு துருவங்கள்."

"சில வேளைகளில் லட்சிய எண்ணம் கூட நிஜ உருக் கொள்வதும் உண்டு!"

"அப்படியென்றால்?"

"நான் ஜிகிஷை மணந்து கொள்ளும் முடிவுடனேயே வந்திருக்கிறேன் என்றால் எப்படி இருக்கும் உங்களுக்கு?"

"அதிர்ச்சி அடைவேன்; ஆச்சரியம் அடைவேன்!"

"அதிர்ச்சி ஏன் உண்டாக வேண்டும்?"

"நீ இப்படி ஒரு பைத்தியக்காரப்பெண்ணாக இருக்கிறாயே என்ற அதிர்ச்சி.



ஜப்பானிய மொழியில் உழைப்பு என்பதற்கு நிறைய வார்த்தைகள் இருக்கின்றன. 'ஓய்வு' என்பதற்கு ஒரு வார்த்தை கூட இல்லை. இப்போது தான் 'ஓய்வு' என்பதற்கு 'ரீஜா' என்ற வார்த்தையை ஜப்பானிய அகராதியில் சேர்த்திருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கையிலும் சரி, அகராதியிலும் சரி, ஓய்வு என்று ஒன்று இருந்ததே இல்லை.

—எஸ். விஜயாசீனிவாசன்.

இதுநாள் வரை அதனால் தான் மணமாகாமல் இருக்கிறாயோ?"

"ஆச்சரியம் ஏன்?"

"இத்தனை நாள் கன்னியாக இருந்து விட்டு, இப்போது போயும் போயும் ஒரு மனநோயாளியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிவு செய்திருக்கிறாயே?"

"திருமணமே வேண்டாம் என்று நான் முடிவெடுக்கவில்லை. தவிர உயர்ந்த லட்சியங்கள் என்று ஏதும் எனக்குக் இடையாது. ஜிகிஷின் நிலைமையை அறிந்த எந்தப் பெண்ணும் அவனை மணக்க முன் வரமாட்டாள் என்ற பச்சாதாபம். ஜிகிஷுடன் எனக்கிருந்த அந்நியோன்னியம்; இவையே என்னை இந்தப் பாதையைத் தேர்ந்தெடுக்கச் செய்கின்றன. இதில் உயர்வான லட்சியமோ, அதீதமான பரிவோ, தியாகமோ எதுவுமில்லை. நம்பிக்கை மட்டுமே... ஜிகிஷ் குணமடைவான் என்கிற என்னுடைய ஒரே ஒரு நம்பிக்கை மட்டுமே காரணம், இந்தச் சோதனைக்கு!"

"பிறகு திரும்பவும் வந்த வழியே போய் விடுவாய், இல்லையா?"

"மாட்டேன். அவனுடன் இங்கேயே இருப்பேன்!"

"அவன் குணமடையா விட்டால்?"

"எனக்கு ஒன்றும் நஷ்டமில்லை. ஜிகிஷுக்கு, அவனுக்குத் தேவையான அன்பையும், காதலையும், நட்பின் கதகதப்பையும் கொடுக்க முடிந்தது என்பதே எனக்குத் திருப்தி அளிக்கும். வாழ்க்கையை நடத்துவது எனக்கு ஒரு பிரச்னை அல்ல. பாங்க் உத்தியோகம் இருக்கிறது எனக்கு. இங்கே டிரான்ஸ்ஃபர் வாங்கிக் கொள்ளுவேன். போதுமா?"

கார்த்திகாவின் முகம் மறையும் அளவிற்கு, ஜேமன் கண்களில் நீர் துளிர்த்து நின்றது. அவனால் எதுவும் பேச முடியவில்லை. சட்டென்று எழுந்தான்.

"இது வெறும் நடிப்போ, வேறு வழியில்லை என்று தீர்மானித்த முடிவோ அல்ல!" என்றாள் கார்த்திகா உறுதியாக. "என்னை ஜிகிஷின் அறைக்குக் கூட்டிக் கொண்டு போங்கள்!"

இருவரும் ஜிகிஷின் அறைக்குள் நுழைந்தார்கள்.

நன்றி:- குஜராத் வார இதழில் வெளியான இந்தச் சிறுகதையின் தமிழாக்கத்துக்கு உதவியவர் திரு. ஜயந்த் காம்தார். 'காம்தார்ஸ் காண்டாக்ட் லென்ஸ்' நிறுவன உரிமையாளர். ஏராளமான புத்தகங்கள் படிக்கிற பழக்கமுள்ளவர். இவருடைய சொந்த நூலகம் பிரமிக்க வைக்கும். ஜே. கிருஷ்ணமூர்த்தியின் சொற்பொழிவுகளிலும், தத்துவத்திலும் மிகுந்த நாட்டமுடையவர்.


ஓம் க்ரீம் க்ரைம்!
5
கதை: ஜே.எஸ்.ராகவன்
சித்திரம்: செல்லம்
பேய், பிசாசுகளின் பீக் ஹவர் நேரமான அமாவாசை நள்ளிரவில் பிஸ்டலானந்தாவின் குடிலுக்குள் ஜனார்தனன் நுழைகிறார்.
மங்களம் உண்டாகட்டும். கனகமும் உண்டாகட்டும். பக்தசிகாமணியே! பூஜை அறைக்குச் செல்லலாமே!
சுவாமி! இந்த வருஷ பிஸ்டல் பூஜையின் பிரசாதத்தை அடியேன் பெற்று புத்திர பாக்கியம் அடைய ஆசீர்வதிக்க வேண்டும்.
பூஜை அறையில்.
சுவாமி! இது என்ன? இரண்டு புற்றுகள் போல் மூடிய மனித உருவங்கள்.
பக்தனே! இந்த புற்றுக்குள் உன்னுடைய பற்றுகள் உள்ளன. மந்திரத் துப்பாக்கியை உபயோகிக்கும் நேரம் நெருங்கி விட்டது!
சுவாமி பிஸ்டலானந்தா கரடித்தோல் மேல் நிஷ்டையில் ஆழ்கிறார்.
பிஸ்டல், பிஸ்டூல் ஜெய் ஜெய் பிஸ்டல









நடுங்கும் கரங்களுடன் ஜில் ஜில் ஜுர்தனன் அவருக்குப் பிடித்த கருப்பு நிறத் துணியால் மூடிய உருவத்தைப் பார்த்துச் சுட மூலிகை மருந்து பீச்சி அடிக்காமல், டுமீல் என்ற சத்தத் துடன் ஒரு குண்டு வெளிப்பட்டு உருவத் தைத் தாக்குகிறது.



''இத பாரு சித்ரா, உன் சம்மதம் இல்லாம உன் லைஃப்ல என்னென்னவோ நடந்ததைப் போயி உன் காதலர் கிட்ட நீயே சொல்றது முட்டாள்தனமானது. உன்னோட பிரைவேட் லைஃப்ல நடந்த ஒரு சின்ன நிகழ்ச்சியை ஏன் தப்புன்னு நெனைக்கிறே?''

''சொஸைட்டி அப்படி நெனைக்கிறதால தாண்டி நானும் அப்படி நெனைக்கிறேன். ஒரு பெண்ணுக்குக் கற்புங்கறது ரொம்பச் சின்ன விஷயமா?''

இதை நான் சொன்னவுடன் பெரிதாய் நான் ஏதோ ஜோக்கடித்த மாதிரி சிரிக்கிறள் சாந்தி. எனக்கு அவள் மீது எரிச்சல் ஏற்படுகிறது.

''ஏண்டி சிரிக்கிறே?''

''என்னமோ சொஸைட்டிங்கறியே, என்னடி பெரிய சொஸைட்டி? நாமதாண்டி சொஸைட்டி... இப்படித்தான் இருக்கணும்னு வெளியே சொல்லிக்கிட்டு உள்ளே எப்படியும் வாழ்றாங்கடி... நாம ஸ்டுடன்ஸுக்குப் பரீட்சை வைக்கிறோம். ஆனு அதே சமயத்துலே முக்கியமான கேள்விகள்னு கொஸ்டின் பேப்பர்ல வர்ற கேள்விகளோட நாலஞ்சு சேர்த்துக் குறிச்சுத்தர்றோம் நாமளே...ஏன்? நெனைச்சுப்பாரு.. அதுமாதிரிதாண்டி லைஃப்பும்.''

அவளுக்கு என்னால் பதில் சொல்லமுடியாமல் போகிறது. பதில் சொல்ல முடியவில்லை என்பதற்காக அவளின் வாதம் நியாயமாகி விடாது. என் மனதில் குழப்பம் அதிகமாகிறது. இவளிடம் யோசனை கேட்டதே விறைகப்படுகிறது. ஒரு தீர்மானமான முடிவில் தெளிவாக இருந்த என்னைக் குழப்பி விட்டுவிடுகிறள்.



''ஒனக்குக் கணவனு வர்றவன் எப்படிப் பட்டவனு இருக்கனும்னு நீ நெனைக்கிறே?''

''எப்படிப் பட்டவன்னு, எப்படி?''

''உன்னைக் கட்டிக்கிற வரைக்கும், எவளையும் மனசில நெனைக்காதவனு, யாரையும் காதலிக்காதவனு, யாரோடேயும் உடலுறவு கொள்ளாதவனு இருக்கனும்னு நீ நெனைக்கிறியா?''

இதைக் கேட்டதும் உடனே ஓங்கிய குரலில் ஒரு வேகத்தோடு 'ஆமாம்' என்று சொல்கிறேன். ஆறு வருடங்களுக்கு முன்னுல் நான் பி. எஸ்.சி. படிக்கிற பொழுது என் வாழ்க்கையில் நடந்து விட்ட விபத்து அந்தக் கணத்தில் மனத்திலே மின்னலாய்த் தோன்றி மறைகிறது. எதிர்வீட்டில் இருந்த கதிரேசன். அந்த அயோக்கிய ராஸ்களின் முகம் என் நினைவில் புரள்கிறது... நான் அவனைக் காதலித்ததும் அவன் என்னைக் காதலிக்கிருன் என்று நினைத்ததும் பின்னுல் ஒருநாள் யாரும் வீட்டில் இல்லாதபோது, படித்துக் கொண்டிருந்த என் பக்கத்தில் ஓசையில்லாமல் வந்து ஆசையோடு பேசிப் பேசி... நான் திமிரத் திமிர என்னைக் கெடுத்து விட்டு ஓடியதும் காலத்தில் ஆருத ரணமாகி வலியெடுக்கிறது. அப்போது ஆண்களின் மேல் விழுந்த வெறுப்பு என்னுடை அரவிந்தனைப் பார்க்கும் வரை மாறவில்லை. எந்தப் பெண்ணையும் மனசால்கூடத் தொடாதவரைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் அப்போது ஏற்பட்டது தான். அது என் மனசுக்குள்ளேயே வேர்விட்டு மரமாகி விழுது விட்டும் போயிருக்கிறது. அதுதான் என்னுடை திருமண லட்சியம்...

''சரி சித்ரா, உன்னுடை ஆசைப்படியே நீ மனசாரக் காதலிக்கிற அரவிந்தன் இருப்பார்னு நெனைக்கறியா?''

நான் அதிர்ந்து போகிறேன்.

''அப்படியே இருந்தாலும் எந்தப்பெண்ணையும் மனசாலக் கூடத் தொடாத தூய்மையுடைய அவர், ஒருத்தனுல அவ சம்மதம் இல்லாம கெடுக்கப்பட்டவளைத் தன் மனைவியாக்கிக்க முன் வருவாரா? அவரும் ஒன்னை மாதிரியே தூய கற்பு நெறி தவருதவளை எதிர்பார்த்தா என்ன செய்வே?''

''என் லைஃப்ல நடந்துட்ட விபத்தைப் பெரிய மனசோட மன்னிக்கறவரைத்தான் விரும்பறேன்... இந்தக் குணம் அரவிந்தன் கிட்டே இருக்கும்னு நிச்சயமா நம்புறேண்டி...''

''தூயவனுக இருக்கனும்கிறே. உன் தப்பை மன்னிக்க ஏத்துக்கிறவனுகவும் இருக்கனும்கிறே. சித்ரா... இம்பாஸிபிள்... நீ நெனைக்கிற மாதிரி எவனும் இருக்கமாட்டான்...!''

''அரவிந்தன் கூடவா?''

''இத பாருடி... கூறு கெட்டவளே! ஆம்பளை எவ்ளோதான் தப்பு செஞ்சிருந்தாலும் தனக்கு மனைவியா வர்றவ சீதை மாதிரி கண்ணகி மாதிரி கற்புக்கரசியாக இருக்கனும்னுதான் எதிர்பார்க்கிருன். இப்படி இருக்கிறப்ப 'நான் கெடுக்கப்பட்டவள்'னு அரவிந்தன்கிட்டே சொல்லிப் புதுசா பிரச்னையைக் கிளப்பிக்கிட்டு உன் காதலைக் கெடுத்துக்காதே... உன்னுடை அம்மாவும் காதலுக்குச் சம்மதிச்சிட்டாங்க இல்லே...? பேசாம கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்.''

''இது அவரை ஏமாத்துகிற மாதிரி எனக்குப் படுது... கல்யாணத்துக்கப்புறம் இது தெரிஞ்சா... என் வாழ்க்கையே பாழாயிடும் இல்லையா? அதனுல் முன்னடியே சொல்றது நல்லதுன்னு தோணுதுடி.''

நான் குரலிளகிப் பேசுகிறேன். அவள் பெருமூச்சு விட்டபடியே எழுகிருள். 'இது திருத்த முடியாத கேஸ்! பட்டு அனுபவிச்சா தான் தெரியும்' என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்குப் புறப்படுகிருள்.

ஈக்களினுல் 30 வகையான ஆபத்தான நோய்கள் பரவுகின்றன. ஈக்கள் தங்கள் உடலின் மேற்பக்கங்களில் முப்பது லட்சம் வகைக்கிருமிகளை (பாக்டீரியா) எடுத்துச் செல்வதாகவும், கோடைக்காலங்களில் 325,923,200,000,000 ஈக்கள் உற்பத்தியாவதற்கு ஒரு ஜோடி ஈக்கள் போதுமானவையாக இருக்கின்றன என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

—எஸ். சாகுல் ஹமீது.



எனக்குத் தூக்கம் வரவில்லை. அரவிந்தனின் முகம் நினைவில் எழ ஓர் அபூர்வமான சுகம் மனசெல்லாம் நிறைகிறது. சாந்தம் தவழும் முகம்... அறிவுக் கூர்மை வெளிப்படும் விழிகள்...

நான் சயன்ஸ் டீச்சராய் அந்த ஹைஸ்கூலில் சேர்ந்த ஒரு வெள்ளிக்கிழமையில்தான் அவரும் டிராயிங் டீச்சராய்ச் சேர்ந்தவர். முதல் பார்வையிலேயே என் மனசில் அவர் உருவம் பதிந்து போயிற்று. ஆண்களின் மேல் வெறுப்புக் கொண்டிருந்த நான் எப்படி அவரைப் பார்த்ததும் பழக விரும்பினேன் என்று இதுநாள் வரை எனக்குப் புரியவில்லை. வெகு காலத்துக்கு முன்னுல் பழகியவரை திடீரென்று சந்தித்தவுடன் ஏற்படுகிற சந்தோஷமும் நெருக்கமும் அவரைப் பார்த்தவுடன் என் நெஞ்சில் ஏற்பட்டன.

நானே தான் அவரிடம் முதலில் பேசினேன். ஆசைக்கு ஏது வெட்கம்?

''என்னுடை ஃப்ரெண்ட் ஒருத்திக்கு மேரேஜ் சார்... அவளுக்கு ஒரு ஓவியம் பிரசண்ட் பண்ணலாம்னு ஆசைப்படறேன்... ரொமாண்டிக்கா... எனக்கொரு பெயிண்டிங்... கொஞ்சம் பெரிய ஸைசா வரைஞ்சு தருவீங்களா?''

அருமையான ஓவியம் வரைந்து தந்தார். பார்த்ததும் மலைத்துப் போனேன். அதன் அழகில் என்னை மறந்து போனேன். மரங்க

டர்ந்த சோலையிலே ஒரு தலைவன். அவன் மார்பிலே சாய்ந்தபடி அழகிய தலைவி. அருகிலுள்ள சுனையில் நீர் பருகும் மான் ஜோடியைத் தலைவிக்குச் சுட்டிக் காட்டுகிறான் தலைவன். அவளும் முறுவலுடன் பார்க்கிறாள்...

அந்த ஓவியத்தை பிரசன்ட் பண்ண மனசு வராமல் நாற்பது ரூபாய்க்குக் கண்ணாடிச் சட்டம் இட்டு என் படுக்கை அறையில் என் பார்வையில் படும்படி மாட்டி வைத்தேன். என் தோழிக்கு ஒரு பால் குக்கரை வாங்கிப் பரிசு கொடுத்து விட்டேன்.

அறையின் நீல வெளிச்சத்தில் அந்த ஓவியத்தைப் பார்க்கிறேன். எனக்கும் அவருக்கும் இடையே உறவை ஏற்படுத்த உதவிய இந்த ஓவியம் என் உயிரோவியம்.... இந்த மூன்று வருட காலமாக உயிருக்குயிராய் நேசிக்கும் அவரிடம் போய் ஏமாற்றுவது போல் என் கறையை மறைக்கச்சொல்கிறாளே சாந்தி!

அது எனக்கு நியாயமாகப் படவில்லை.

மறுநாள் கோவிலுக்குப் போகிறோம். பொற்றாமரைக் குளத்தின் படியில் வந்து அமர்ந்து கொள்கிறோம்.

''அரவிந்தன்... என்னைச் சந்திக்கிறதுக்கு முன்னால, நீங்க நமக்கு இப்படிப்பட்டவ தான் மனைவியா வரணும்னு நெனைச்சிருப்பீங்க இல்லையா? அதையெல்லாம் என்கிட்டே நீங்க எதிர்பார்க்கலாமில்லே?''

''அப்படியெல்லாம் நான் எதையும் நெனைச்சதில்லே சித்ரா. கல்யாணமேசெய்ய வேண்டாம்னுதான் இருந்தேன். உன் அன்பு கெடைச்சப்போ அத ஒதுக்கறதுக்கு எனக்குத் தைரியமில்லே... மனசும் வரல்லே... அதனால அந்த எண்ணத்தை மாத்திக்கிட்டு உன்னோட பழகினேன். உன்னோட அன்பைத் தவிர வேற எதையும் எதிர்பார்க்கலே சித்ரா...!''

''அப்பமுன்னா... நான் எப்படிப்பட்டவளாயிருந்தாலும் ஒங்களுக்குக் கவலை இல்லையா?''


''நீ என்ன சொல்றே?''

''உங்களைச் சந்திக்கிறதுக்கு முன்னாடி யாரையாவது காதலிச்சு... அதனால கெட்டு, தோத்துப் போனவளாவோ, அல்லது யாராலேயும் கெடுக்கப்பட்டவளாவோ இருந்தா ஏத்துக்குவீங்களா?''

நான் தலைகுனிந்து கொண்டு என் வாழ்க்கை விபத்தைப் பற்றி உடைந்த குரலில் சொல்கிறேன்.

''பின்னால இது உங்களுக்குத் தெரிஞ்சு அதனால நீங்க மனசு ஒடைஞ்சு நம்ம வாழ்க்கையில பிளவு ஏதும் வந்துடக் கூடாதேன்னு தான் இதை முன்ஜாக்ரதையா சொல்றேன். இதைக் கேட்டப்புறம் நீங்க பெருந்தன்மையோட விசால மனசோடே ஏத்துக்கிட்டீங்கன்னா அது நான் செஞ்ச பாக்யமாத் தான் இருக்கும்!''

''வா, புறப்படலாம் சித்ரா என்ற வார்த்தைகளைத் தவிர வேறு எதையுமே அவர் பேசவில்லை.



வெப்ப சக்தியால் இரை தேடும் பாம்பு

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் காணப்படும் 'குழிவிரியன்' எனப்படும் பாம்பு எதிரி அல்லது இரையை வெப்ப சக்தி மூலம் அறிந்து கொள்ளும். இதன் மூக்குக்கும் கண்ணுக்கும் இடையேயுள்ள பகுதியில் குழி போன்ற ஓர் அமைப்பு உள்ளது. இதற்கு 'லோரியல் குழி' என்று பெயர். இக்குழியின் உட்புறம் காற்று இல்லாத மெல்லிய பை உள்ளது. இது மிக நுண்ணிய உணர்வு நரம்புகளால் மூளையுடன் இணைக்கப்பட்டுள்ளது. பிற பிராணிகளின் உடலிலிருந்து வெளிப்படும் வெப்பம் இவ்வெற்றிடப் பையைத் தாக்கும்போது பை விரிவடைகிறது. எந்த அளவுக்கு விரிகிறது என்பதையொட்டி பிராணிகளை இனம் கண்டு கொள்கிறது பாம்பு.

த.த. மனோகரன்.

மறுநாள் அவர் வேலைக்கு வரவில்லை. அதற்கடுத்த நாளும் வரவில்லை. என் மனசு நிம்மதி இழந்துபயத்தில் ஆழ்ந்தது. அம்மா, 'இந்த லெட்டர் வந்துச்சுடி'ன்னு ஒரு உறையைக் கொடுக்கிறாள். அவர்தான் எழுதியிருக்கிறார். படபடப்போடு பிரித்துப் படிக்கிறேன்.

அன்பிற்கினிய சித்ரா,

எந்தக் குற்றத்தைச் செய்தவனை எந்தப் பெண்ணுமே மணந்து கொள்ளக்கூடாது என்று ஆக்ரோஷமாகத் திட்டினாயோ அதைச் செய்தவன் நான்.

நான் ஓவிய ஆசிரியராகச் சேர்வதற்கு முன்னால் முழுநேர ஓவியனாக இருந்தேன். அப்போது என்னோடு பழகியவள் பவானி. நான் இருந்த மாடியின் கீழே அவள் இருந்தாள். அதிகம் படிக்காதவள். ஆனால் அதிக அழகு வாய்ந்தவள். ஓர் ஓவியன் எப்படிப்பட்ட அழகை விரும்புவானோ அப்படிப்பட்ட அழகின் சிகரமாய் அவள் இருந்தாள். என்னோடு நன்றாகப் பழகினாள். நான் அதைக் காதல் என்று எண்ணினேன். அவளின் அழகைப் பல ஓவியங்களில் தீட்டினேன். தீட்டத் தீட்ட அந்த அழகு என் நெஞ்சில் ஓர் ஆசைக்கனலை மூட்டி விட்டது.

கனலின் உக்ரம் தாங்காமல் அவள் சம்மதம் இல்லாமலேயே அந்த அழகினை அடைந்தேன். அவள் என்னைத் திட்டினாள். கீழ்த்தரமானவன் என்றாள். உங்களை எந்தப் பெண்ணும் விரும்பக் கூடாது. விரும்பினாலும் உங்களுக்கு அவளைத் தொட அருகதை இல்லை என்று சாபம் விடுவது போல ஏசிவிட்டுச் சென்றாள். நான் என் ஆசைக் கனல் அணைந்ததுமே எத்தனை பெரிய தப்பைச் செய்து விட்டோம் என்று உணர்ந்தேன்.

என் வட்டத்தைத் தாண்டிக் கொண்டு நீ நுழைவாய் என்று எதிர்பார்க்கவே

இல்லை. என் முழுநேர ஓவியப் பணியை விட்டுவிட்டு டிராயிங் டீச்சராக மனநிம்மதிக்குச் சேர்ந்தேன். நீ வலிய என்னை வளைய வந்து கனிய வைத்துவிட்டாய்.

உன்னைப் பற்றி அறிந்த போது உன்னை ஏற்றுக் கொள்வதன் மூலம் பிராயச்சித்தம் செய்து கொள்ளலாம் என ஒரு நினைவு. ஆனால் உன் மனத்தின் தீவிரம் அறிந்த போது அதுவும் கனவானது.

உன் தவறுகளை நான் மன்னித்து ஏற்றுக் கொள்கிறேன் என்பதற்காக உன்னையும் என்னை மன்னித்து ஏற்றுக் கொள் என்று கட்டாயப்படுத்த மாட்டேன். அன்புக்கனி மனமென்னும் அறையில் போட்டு மூடி வைக்கப்பட்டு கட்டாயமென்னும் புகைமூட்டத்தால் கனிய வைக்கப்படுவதல்ல. தானாய்க் கனிந்து தேனாய்த் தித்திப்பது தான் அன்பு. உன் இஷ்டம். ஆனால் ஒன்று சித்ரா, உன் முடிவில் என் வாழ்க்கை தொடங்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

—அரவிந்தன்.

கடிதத்தைப் படித்ததும் என் இதயத்தில் இடிவிழுந்ததைப் போல அதிர்ச்சி அடைகிறேன்.

'சீ! நீங்க இவ்வளவுதானா? உங்களையா நான் இத்தனை நாளும் காதலித்தேன்?'

என் மன ஏமாற்றத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என் அறையின் கட்டிலில் விழுந்து குமுறிக் குமுறி அழுகிறேன். அழுகையின் முடிவில் அவர் மீது ஆத்திரம் பொங்குகிறது. அதைப் பேப்பரில் கொட்டிய பிறகுதான் தணிகிறது.

மிஸ்டர் அரவிந்தன்!

நீங்களும் அந்தக் கதிரேசனைப் போன்றவர் தான் என்பதை வெளிப்படுத்தியதற்கு நன்றி. என்னை மறந்து விடுங்கள். உங்களை என்னால் மன்னிக்க முடியவில்லை. என்மனக் கொலுவில் ஒரு மூளிபொம்மையை வைக்க விரும்பவில்லை.

—சித்ரா.

கடிதத்தை உடனே போஸ்ட் செய்கிறேன். எனக்கிருந்த மனஏமாற்ற நிலையில் பள்ளியில் பாடம் நடத்த முடியும் என்று தோன்றவில்லை. எனவே ஒரு வாரம் விடுமுறை எழுதி அதையும் போஸ்ட் செய்கிறேன்.

மூன்றும் நாள் மதியம். சாப்பிடக் கூடப் பிடிக்காமல் மாடியறையில் அந்த ஓவியத்தையே பார்த்துக் கண்கலங்கிக்கொண்டிருக்கையில் சாந்தி அவசர அவசரமாய் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கப் படியேறி ஓடிவருகிறாள்.

''ஏண்டி சித்ரா... என்ன நடந்துச்சு? நீ ஏதும் எழுதினியா அவருக்கு?''

''ஏன், என்ன நடந்துச்சு இப்போ?'' வெறுப்போடு பேசுகிறேன்.

''என்னவா.... அரவிந்தன் நேத்து ராத்திரி விஷத்தைக் குடிச்சிட்டாராம்... உயிருக்கு ஆபத்தான நிலையிலே பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்காங்க... இன்னைக்கிக் காலையிலதான் ஸ்கூல்ல அவரோட ஃபாதர் வந்து தகவல் சொல்லிவிட்டுப் போனார்... என்னடி என்ன நடந்துச்சு....

நான் என்னை அறியாமலேயே அலறி அடித்துக் கொண்டு அழுகை பொங்கிவர, அவரின் கடிதத்தையும், என் பதிலையும் பற்றிச் சொல்கிறேன்.

''அடிப்பாவி! திரண்டு வந்த வெண்ணெயை எடுத்துத் தெருவில் எறிஞ்சிட்டியேடி! எதையும் பிராக்டிகலா யோசிக்காம லட்சியம், லட்சியம்னு சொல்லி ஆளைச் சாகடிச்சிட்டியேடி! இந்த மனசு யாருக்கு வரும் சொஸைட்டியிலே யாரு மூளியா இல்லே, சொல்லு? ஒவ்வொருத்தரும் ஒவ்வொருவிதத்தில மூளி தாண்டி...இது தெரியலியே ஒனக்கு? நீதனக்கு இல்லேன்னுதெரிஞ்சவுடனே வாழ்க்கையையே வெறுத்திட்டாரே. இதாண்டி உண்மையான அன்பு, காதல்...''


அவள் பேசப் பேச என் மனம் எது உண்மை என்று உணர்கிறது. என் அரவிந்தனைக் காணத் துடிக்கிறது. நானும், அவளும் ஆஸ்பத்திரிக்கு விரைகிறோம். உலகத்தில் உள்ள எல்லாத் தெய்வங்களையும் அவர் உயிர் பிழைக்க வேண்டும் என்று மன்றாடி வேண்டிக் கொள்கிறேன்.

''கவலைப்படாதீங்க. ஆபத்தான நிலைமையை அவர் கடந்துட்டார்'' என்று டாக்டர் அவரின் பெற்றோரிடமும், என் சக ஆசிரியர்களிடமும் கூறிய வார்த்தைகள் அப்போதுதான் அங்கு போய்ச் சேருகிற என் காதிலும் விழுகின்றன. அப்போது தான் என் உயிர் என்னிடமே இருப்பதாக உணர்கிறேன்.

என் விழிகளிலிருந்து கண்ணீர் அருவியாய் வழியச் சாந்தியின் தோளில் முகம் புதைத்துக் கதறுகிறேன். இனிமேல் நான் அழவே கூடாது என்பதற்காக அப்போதே அழுது தீர்த்து விட வேண்டும் என்பது போல அழுகிறேன். அழுவதே ஓர் ஆனந்தம் என்று அப்போது எனக்குப் படுகிறது.

உலக கோடீஸ்வரர்களில் ஒருவரான ''ராக்பெல்லர் காலமான போது 1500 பக்கங்கள் கொண்ட தஸ்தாவேஜுக்களை ஆராய்ந்து அவருடைய சொத்துக்களுக்கு மதிப்புப்போட்டு வரி முதலியவற்றை நிர்ணயம் செய்ய ஐந்து ஆண்டுகள் ஆயின. அவர் விட்டுச் சென்றது எண்பது கோடி ரூபாய் சொத்து. கொடுத்துத் தீர்க்க மறந்து போனது ஆறேகால் ரூபாய்க்கு ஒரு மின்சார பில்.

—ஜா. ரவி.



நரசுஸ் காபியைப் போல...



மணமும் சுவையும்
ஒருங்கே இணைந்த
இனிய வாழ்க்கையை
காலமெல்லாம் ரசித்து
சுவைத்து வாழ
எங்கள் வாழ்த்துக்கள்!

ஜீவனுள்ள
ஒரே காபி!


நரசுஸ் காபி

தெர்மலோ முறை காபி!



ADWAVE/NCC/2596

நரசுஸ் காபி கம்பெனி சேலம் 636 007, கிளைகள்: தமிழ்நாடெங்கும்.



பெரியவருக்கு மூணுல சத்தியம் பண்ணுங்கவாழ்நாள் பூராவும் தினம் ராத்திரி டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் கொளுத்துவேண்ணு!
கொசுவை விரட்டும், உறுதியாக—டார்டாய்ஸ்
சனி, குருவைப் பாக்கிறான்... கஷ்ட தசைதான். இந்த வருஷம் கொசுத் தொல்லை உங்களுக்கு அதிகமா இருக்கும்.
என்ன பண்ணலாம்? தோஷ சாந்தி, 'ஹோமம்' ஏதாவது...?
ஹோம்புகை போலே... மகிழ்ச்சியும், அமைதியும் தர—டார்டாய்ஸ்
எங்கிட்ட தான் இந்தக் கோபமெல்லாம் செல்லும்.. கொசுக்கள் கிட்ட செல்லுமா..?!
கொசுக்களை விரட்டி அடிக்க—டார்டாய்ஸ்
திரை எதற்கு? விலக்கி விடேன்!
முதலில் கொசுக்களை விரட்டி விடுங்கள்..!
பாழும் கொசுக்களை விரட்டி அடிக்க எளிய வழி—டார்டாய்ஸ்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

● ஏமாற்றமளிப்பது ஏ.வி எம். அல்ல; உமது விமர்சனம்தான்! ஒரு படம் நன்றாயில்லை என்று எழுத உமக்கு உரிமை உண்டு. ஆனால் ஒட்டுமொத்தமாய் 'ஏ. வி. எம். படங்கள் ஒரு காலத்தில் ஏமாற்றமளிக்க வில்லை, இன்று ஏமாற்ற மளிக்கின்றன' என்பதாக எழுதுவது அழகல்ல என்பதோடு அபத்தமும் கூட. இதற்குச் சான்றாக எத்தனையோ வெற்றிப் படங்களை வரிசைப் படுத்திடலாம். ஏன், கல்கியே இவற்றைப் பாராட்டி எழுதியுள்ளதே; அட்டைப் படங்களாகக் கூடப் பிரசுரித்துள்ளதே.
சென்னை—28,
ராகவேந்திரன்

● "ரசிகர் மன்றங்களா? ரகளைக் கும்பல்களா?"—கட்டுரையில் என்னைப் பற்றிய குறிப்பு படித்தேன்.
நான் குள்ளமானவன் தான்; கவர்ச்சியில்லாத முகம் கொண்டவன் தான். பிறப்பால் சற்று ஊனமுற்ற என்னைப் பாராட்டா விட்டாலும் தூற்றாமல் இருக்கக் கூடாதா?
சென்னை—26,
கே. வி. செட்டிபாபு

(திரு. செட்டிபாபு மனம் புண்பட நேர்ந்ததற்கு வருந்துகிறோம். தனிப்பட்ட முறையில் யாரையும் குறை கூறுவது எமது நோக்க மல்ல. ரசிகர் மன்றங்கள் என்ற தீவிர வேகம் எப்படி அபத்த நிலைகளுக்கு மக்களைக் கொண்டு செல்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதே கட்டுரையின் மையக் கருத்து. ஆர்)

● திரு. ரஜினி, திரு. கமல், இவர்களுடைய ரசிகர்களின் நற்பணிகளைக் கூறிய நீர் அண்ணன் சிவாஜி அவர்களின் ரசிகர்களின் நற்பணிகள் ஒன்றைக் கூட கூறாதது ஏன் சார்? திரு. கமல் ஹீரோவாகப் பிரபலமாகும் முன்பே சிவாஜி ரசிகர்கள் அவர் பிறந்த தின விழாவின்போது கண்கள் தானம் செய்தது உங்களுக்குத் தெரியாதா?
சென்னை—5,
ஏ. எஸ். சூரி.

● இறைவன், சிம்ம'மும், 'பறவை'யும் கலந்த, 'சிம்—புள்' வடிவம் எடுத்து 'சரப' மூர்த்தியாக விளங்குவதை நம்பியாண்டார் நம்பிகள் என்ன சிம்பியாக, 'சிம்புள்' என்று பெயரிட்டுப் பாடிப் பரவி விட்டார்!
பம்பாய்—37,
எஸ். ஆர். சீதாலக்ஷ்மி.





● "நான் பாடும் பாடல்" விமரிசனத்தில் கௌரவமாக, கண்ணியமாக அடக்கமாகப் பேசி, அற்புதமாக நடித்திருக்கும் வி. கோபாலகிருஷ்ணனைப் பற்றி குறிப்பிடாதது ஏனோ?
சென்னை—33,
ஆர். ஜெயேந்திரா

● அதிக் போன்ற அரசியல் வாதிகளை அமைச்சராகப் பெற்ற பொது மக்களின் புலம்பலாக இருந்தது உங்களது தலையங்கம். நாடு வெட்கப்படும் படியான செயல்.
நீடாமங்கலம்,
பத்மா சுப்பிரமணியன்.

● எங்களின் நோக்கமறிந்து செயல்படும் 'கல்கி' விலையை ஏற்றினால் வாங்காமல் விட்டுவிடுவோமா என்ன?
சென்னை—5,
எஸ். சம்பத்குமார்.

● "குபீர்... குபீர்..." சிரிப்போடு — கவலை போக்கும் அருமருந்தாகச் செல்கிறது "ஓம் க்ரீம்! க்ரைம்!!—படக்கதை!
அந்தணப்பேட்டை,
அ. அன்பழகன்.

● மாலினி சேஷாத்ரியின் அருமையான விவாதங்களைப் படிப்பதற்காகவே விவகாரங்களை ஏற்படுத்தும் தோவுகளைக் கூட வரவேற்கலாம் என்று தோன்றியது.
சென்னை—14,
ஐயாறு எஸ். வாசுதேவன்.

● 'வாவ்!' சுஜாதான்னா சுஜாதாதான்! பல்லிபத்தை இப்படி அட்டகாசமாக வர்ணிக்க சுஜாதாவினால் மட்டுமே இயலும்! நெடுநாளுக்குப் பின் வஸந்த் — கணேஷைச் சந்தித்ததில் மகிழ்ச்சி.
சென்னை—57,
இரணியல் 'குமரன்'

● கும்பகோணம் மகாமகக் குளத்தின் ஒரு பகுதியில் நகரின் சாக்கடைக் கழிவுநீர் படிக்கட்டுகளைக் கடந்து வந்து நீருடன் கலக்கிறது. இதையும் கண்டு கொள்ளாமல் — சிலர் குளித்துக் கொண்டிருந்தார்கள். இதைத் தவிர குளத்தின் வெளியே இருக்கும் மண்டபத்தில் குப்பைக் கூளங்கள் குவிக்கப்பட்டிருந்தன.
இப்படி வேதனையளிக்கக் கூடிய காரியங்களைத் தடுக்க அவ்வூர் பெரியவர்கள் முயற்சி எடுக்கக்கூடாதா?
சென்னை—5,
எஸ். வி. ராஜசேகர்.

கூடசிக்கூடிதம் பசிக பெறுகிறது.

ஏமாற்றமளிப்பது ஏ.வி.எம் அல்ல!

திருமலைக்கும், சண்பகத்துக்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. அந்த ஊர் எல்லையில் முகூர்த்தநாள், நல்ல நேரம் எல்லாவற்றையும் புறக்கணித்து அசல் இராகு காலத்தில் நடைபெற்ற முதல் சுயமரியாதைத் திருமணமே அதுதான். திருமலை அதற்கு இணங்கியதைப் பற்றி யாரும் வியப்படையவில்லை. பக்தி சிரத்தை மிக்கவளாக வளர்ந்த பண்டாரத்தின் மகள் சண்பகம் நாள் நட்சத்திரம் நல்ல, நேரம், தாலி, எல்லாவற்றையும் கைவிடத்துணிந்து அந்தத் திருமணத்திற்குச் சம்மதித்ததுதான் எல்லோருக்கும் பெரிய ஆச்சரியமாயிருந்தது. என்ன ஆனாலும் திருமலையையே மணப்பது என்று காத்திருந்த அவள் உறுதியும், பிடிவாதமும் அதில் தெரிந்தன. அது ஒரு கலப்புத் திருமணம். பொன்னுச்சாமியும், மற்றவர்களும் அரும்பாடுபட்டு ஈரோட்டி லிருந்து ஐயாவையே அழைத்து வந்து தலைமை வகிக்கச் செய்து அந்தத் திருமணத்தை நடத்தியிருந்தனர். சண்பகத்தின் சகோதரன் திருமணத்திற்கே வரவில்லை. திருமலை மட்டும் பழைய அநாதைத் திருமலையாயிருந்திருந்தால் உள்பட்டணத்துப் பெரும் புள்ளிகள் அடியாட்கள் வைத்துக் கல்யாணத்தை நடக்க விடாமல் தடுத்திருப்பார்கள். வெறும் பயல் என்று அவர்கள் எண்ணிய திருமலைராஜனுக்குப் பின்னால் இன்று வலுவான அரசியல் சமூக சீர்திருத்த சக்திகள் இருந்ததால் உள்பட்டணத்துப் பெரும் புள்ளிகளும், வெளிப்பட்டணத்து மடிசஞ்சிகளும் அந்த சு.ம. — கல்யாணத்தைக் கண்டு கொள்ளாதது போல் ஒதுங்கி விட்டனர்.

'கலி முத்திப் போச்சு! இல்லாட்டி இப்பிடியெல்லாம் நடக்குமா?' — என்ற வம்புப் பேச்சோடு ஊரார் தங்கள் எதிர்ப்பையும் விமர்சனத்தையும் நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. எந்தப் புதிய மாறுதலையும் ஆயிரம் சந்தேகங்களுடனும் பதினாயிரம் பயங்களுடனும் பார்க்கக் கூடிய அந்தப் பழைமையான ஊருக்குத் திருமலை தன்னுடைய திருமணத்



இன் மூலம் போதுமான அதிர்ச்சியை அளித்திருந்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

''ஆனாலும் நீங்க ரொம்ப மோசம்! தாலி கூட இல்லாம ஒரு கல்யாணமா? உங்களுக்காகத்தான் இந்தக் கூத்துக்கெல்லாம் சம்மதிச்சேன்'' — என்று சண்பகம் தனியே அவனிடம் சிணுங்கியதோடு தன் மெல்லிய எதிர்ப்பை நிறுத்திக் கொண்டாள். அதற்கு மேல் பகிரங்கமாக எதையும் அவளால் எதிர்க்க முடியாது; எதிர்க்கவும் அவள் விரும்பவில்லை. 'கணவனே கண்கண்ட தெய்வம்' — என்ற பழைய கொள்கைப்படி பார்த்தாலும் கூடத் திருமலை எந்தப்பாதையைக் காட்டுகிறானே அந்தப் பாதையில் செல்ல வேண்டியது அவள் கடமையாயிருந்தது. ஊர் நிலைமையை உத்தேசித்து இவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகத் தாம் குடியிருந்த மறவர் சாவடி வீதியிலேயே ஒரு வீடு பார்த்துக் கொடுத்திருந்தார் பொன்னுச்சாமி. புதுமைகளையும் வழக்கத்துக்கு மாறான காரியங்களையும் சந்தேகத்தோடு மட்டுமின்றிக் கோபத்தோடும் பார்க்கிற ஒரு பழைய ஊரில் இப்படிப் பாதுகாப்பு அவசியமாகத்தானிருந்தது. திருமணமாகி ஓராண்டுக் காலமும் ஓடிவிட்டது.



தன்னுடைய பகுத்தறிவு நண்பர்கள் கேலி செய்வார்கள் என்று தோன்றியதால் வெளிப்படையாகப் பேசிக் கொள்ள நாணினான் என்றாலும் சண்பகத்தை மணந்த பிறகு தன் வாழ்வில் பல முன்னேற்றங்களும் வளர்ச்சிகளும் படிப்படியாகத் தனக்கு ஏற்படுவதைத் திருமலையே உணர்ந்தான். தேரடியிலேயே அநாதையாக வசித்து வந்த அவனுக்கு இப்போது வீடுவாசல் என்று ஒன்று ஏற்பட்டிருந்தது. தேரடியைத் தவிரக் குளக்கரையில் எண்ணெய், சிகைக்காய்த் தூள், தைலம், சோப்பு, சீப்பு, விற்கிற பெட்டிக்கடை ஒன்றும் புதிதாகப் போட்டிருந்தான் திருமலை. அதுவும் நல்ல வியாபாரம் ஆகியது. கையில் கொஞ்சம் பணமும் சேர ஆரம்பித்திருந்தது.

உள்ளூர்க் கோவாபரேட்டிவ் பாங்க் ஒன்றின் டைரக்டர்ஸ் போர்டுக்கு நடந்த எலெக்ஷனில் நின்று அவன் வெற்றியும் பெற்றுவிட்டான்.

''தம்பீ! மெல்ல மெல்லப் பொது வாழ்க்கையிலே மேலே வரணும் நீங்க... அதுக்கு மேடைப் பேச்சு முக்கியம்.... மேடையிலே பேசிப் பழகுங்க... நம்ம மாதிரி ஆளுங்களும் இயக்கங்களும் பேசிப் பேசித்தான் மேலே வளரணும்'' — என்றார் பொன்னுச்சாமி.

அதுவரை அந்த ஊரில் இராமாயணம், பாரதம், கதாகாலட்சேபம் செய்கிறவர்களும், காங்கிரஸ்காரர்களும்தான் தேரடியில் கூட்டங்களை நடத்தி வந்தார்கள். சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்காகப் பொன்னுச்சாமியே ஒரு பெரிய கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். தாமே தலைமையும் வகித்தார். ''தங்கத் தமிழகத்தின் சிங்கநேர் இளைஞர்கள் திராவிட இயக்கத்தின் அடலேறுகள் இன்று மேடையேறுகின்றனர்! மாற்றார் கேட்டு நடுங்க மடிசஞ்சிகள் பதைபதைக்க, சநாதனிகள் தடுமாற, வைதிகர்கள் வழியறியாது திகைக்க இந்த அறிவுப்படை ஆயுதத்தோடு புறப்பட்டு விட்டது' — என்று தம்முடைய முரட்டுக் குரலில் பேச்சாளர்களை அறிமுகப்படுத்தி வைத்தார் பொன்னுச்சாமி அண்ணன். ஐயாயிரம் பேருக்கு மேல் மக்கள் தொகையுள்ள அந்த ஊரில் ஐம்பது பேர் கூட இவர்கள் கூட்டத்துக்கு வரவில்லை. அதிலும் சரிபாதிக்கு மேலே வேடிக்கை பார்க்க வந்த கூட்டமாயிருக்கும் போலிருந்தது. 'தென்மொழி வளர்த்த திராவிட நாட்டில் இன்று இருட்டுக் கூட்டம் பிழைக்கிறது' — என்பது போல் குரலையும், உணர்ச்சியையும் உச்சஸ்தாயியாக உயர்த்தியபோது கூட மேடையில் சிலரும், கீழே சிலருமாக உதிரியாய்க் கைதட்டினார்களே ஒழியக் கூட்டம் முழுவதும் கைதட்டவில்லை. நிழல் யுத்தம் போல் யாரோ ஓர் எதிரியைக் கற்பனை செய்து கொண்டு சாடு, சாடு என்று திட்டித் தீர்த்தார்கள் பேச்சாளர்கள்.



அருள் வாக்கு

வெளி தேசங்களில் உள்ள 'லக்ஷுரி' கள் தான் இப்போது நம் சர்க்காருக்கு 'டார்கெட்' (குறிக்கோள்). வாஸ்தவத்தில் தேசத்தில் திருப்தியும் ஆத்யாத்மிகமான அபிவிருத்தியும் ஏற்பட வேண்டுமானால் ஜனங்களுக்கு இடையில் பொறாமையும் போட்டியும் போக வேண்டுமானால் ''வாழ்க்கைத்தரம்'' என்று சொல்வதைக் குறைப்பதற்குத் தான் திட்டம் போட வேண்டும். ஆனால் வாழ்க்கைத் தரத்தை மேல்நாடுகளின் தரத்துக்கு உயர்த்தியே தீர வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு வேண்டாத வஸ்துக்களை அத்தியாவசியத் தேவையாக ஆக்குவதற்கே ஸர்க்கார் திட்டம், திட்டம் என்று ஓயாமல் போட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக இந்தத் தேசத்திலுள்ள எல்லா ஜனங்களின் கடனையும் சேர்த்து வைத்து ஸர்க்காரே ஒன்றுக்கப்புறம் எத்தனையோ ஸைபர்கள் போடுகிற தொகையைலோகம் பூராவும் கடன் பட்டிருக்கிறது. வேண்டாத வஸ்துக்களில் ஜனங்களுக்கு அபிருசியை உண்டாக்கிவிட்டு அவர்களையும் சம்பள உயர்வுக்காக எப்போது பார்த்தாலும் சண்டை, ஸ்டிரைக் என்று இறங்குவதற்குத் தூண்டிக்கொண்டிருக்கிறது. ''திட்டம்'' என்ற பெயரில் திட்டமில்லாமல் செய்கிற காரியத்தால் ஏற்பட்டிருக்கிற Inflation–ல்(பணவீக்கத்தில்) என்ன(சம்பளம்) வந்தாலும் போத மாட்டேனென்கிறது. ஜனங்கள் கடனாளியாக வேண்டியிருக்கிறது. இதற்கு ஸர்க்காரே 'இன்ஸென்டிவ்' (ஊக்குதல்) தருவதாக இருக்கிறது! ஜனங்களைக் கடன் வாங்குவதற்கு நன்றாகப் பழக்கி வைக்கிற ரீதியில் கிராமத்துக்குக் கிராமம் பாங்குகள் திறந்து அநேக இனங்களுக்கு 'லோன்' (கடன்) கொடுக்கப்படுகிறது.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

''வைதிகக் கோட்டையாகிய உன்பட்டணம் உருக்குலையப் போகிறது. அதிகார ஆணவங்கள் அழியப் போகின்றன. பணத்திமிர் பட்டழியப் போகிறது. உடையார்கள் உடையப் போகிறார்கள். இல்லாதவர்கள் பொல்லாதவர்களாகப் போகிறார்கள்'' — என்று திருமலை பேசிய பேச்சில் அறிவு வாதத்தை விட உன்பட்டண எதிர்ப்பே மேலோங்கியிருந்தது.


1943–ல் திருமலை சண்பகம் மணவாழ்வு அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையை அளித்தது. பொன்னுச்சாமி அண்ணன் அந்தக் குழந்தைக்கு 'மலர்க்கண்ணி' என்று பெயர் சூட்டினார்.

மூன்றாண்டுகள் தவழ்ந்து விளையாடி விட்டு 46ல் ஒரு குளிர்காலத்தில் அந்தக் குழந்தை கண்ணை மூடிவிட்டது. மீண்டும் 1947–ல் இந்தியா சுதந்திரம் அடைந்த முதல் நாளில் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

சண்பகம் குழந்தைக்கு 'சுதந்திரன்' — என்றே பெயர் வைத்து விடலாம் என்றாள். சுதந்திர தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாட வேண்டும் என்ற அபிப்பிராயத்திலிருந்த பொன்னுச்சாமி அண்ணன் அதை மறுத்து 'இராவணன்' என்று பெயர் சூட்டினார். சண்பகத்துக்கு இந்தப் பெயர் அறவே பிடிக்கவில்லை என்றாலும் சகித்துக் கொண்டாள். தன்னளவில் அவள் குழந்தையை 'ராஜா' என்றே கூப்பிட்டுக் கொஞ்சினாள்.

''என்ன தங்கச்சி! நான் ஒரு பேரு வச்சிருக்கேன். நீ பாட்டுக்கு 'ராஜா'ன்னு வேற பேரைச் சொல்லிக் கூப்பிடறே?'' — என்று எப்போதாவது பொன்னுச்சாமி அண்ணன் சண்பகத்தைக் கேட்டால், ''உங்க ராவணனும் ஒரு ராஜாவாகத்தானே இருந்தான்? அதான் 'ராஜா'ன்னு கூப்பிட்டுக்கிட்டிருக்கேன்'' என்பதாகப் பதில் சொல்லிச் சமாளித்துக் கொண்டிருந்தாள் அவள்.

ஒரு மலையருவியிலிருந்து தண்ணீர்கொட்டுகிற மாதிரி வார்த்தைகளை அள்ளிக்கொட்டியே படிப்படியாய் மக்களை மலைக்க வைக்கும் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவனாகி விட்டான் திருமலை. உள்ளூரில் யாரையோ எதிர்க்கும் முனைப்பில் ஆரம்பித்த அவனது மேடைப்பேச்சு மெல்ல மெல்ல வெளியூர்களிலும் அழைத்து மேடைபோட்டுக் கேட்க விரும்புகிற ஒன்றாகி விட்டது. மிகக் குறைந்த அடிப்படைக் கல்வி கூட இல்லை என்றாலும் வாக்குச் சாதுரியத்தால் மிகப் பெரிய பேச்சாளனாகி விட்டான் அவன். தங்கள் இயக்கத்தின் மேடை 'ஒக்கபிலேரி'யில் அவன் பிரமாதமாகத் தேறிவிட்டான். காங்கிரஸ் கூட்டங்களில் மகாத்மா காந்தி என்றும், நேரு, என்றும் ராஜாஜி என்றும் கூறினால் தங்கள் கூட்டங்களில் காந்தியார் என்றும், நேரு பெருமகனார் என்றும் ஆச்சாரியார் என்றும் கூற வேண்டும் என்பது அவனுக்கு அத்துபடியாகியிருந்தது. மனிதர்களை 'இன்ஸ்டன்டாகப்' புகழுவதற்கும் தாக்குவதற்கும் தோதான தமிழ் வார்த்தைகள் அவனுக்கு இலகுவாகப் பிடிபட்டிருந்தன. முன்பெல்லாம் இயக்கத்



At eventide on a lonely road, returning after a hard day's work, a blind man bearing a lamp met a stranger who laughingly asked: "Does a blind man need light?" "Yes," replied the blind man, "my lamp is lit so that others can see."

On the palm fringed shores of Phansa, near Daman, Tatas have donated a 240 acre farm. Here, the blind are trained as farmers and tradesmen, resettled on their own farms or in co-operative endeavours

TATA ENTERPRISES

TS-6153


மாபெரும்
சலுகை!
ஓர் அழகிய எவர்சில்வர் டம்ளர் ரூ.2-25க்கு மட்டுமே
Super Power
Regal
SAVE! A Stainless Steel Tumbler for only Rs. 2.25
இது போன்ற 3 கட்டிகளுடன்
ACIL-0743/84-Tam
சூப்பர் பவர்
ரீகல்
அழுக்கைத் தகர்த்திடும்
துணிகளைக் காத்திடும்
Shaw Wallace
ஷா வாலஸின் தரமான தயாரிப்பு
சூப்பர் பவர் ரீகல் இச்சலுகை இல்லாமலும் கிடைக்கிறது

தொண்டர்களும், வெளியூர் அன்பர்களும் பொன்னுச்சாமியை அண்ணன் என்று மரியாதையாக அழைத்ததைப் போல் அவனையும் திரு அண்ணன் என்று உரிமையோடும் மதிப்போடும் இப்போது அழைக்க ஆரம்பித்திருந்தார்கள். புகழும் வருமானமும் போதுமான ஆணவத்தையும் கர்வத்தையும் அவனுக்கு அளித்திருந்தன. நெஞ்சை நிமிர்த்திப் பேசுகிற குணம் வந்தது. தன்னால் எதுவும் செய்ய முடியும் என்கிற முரட்டு நம்பிக்கையும் அடாவடித்தனமும் கூடவே வந்தன. கூட்டங்களில் பேச நிபந்தனை போட ஆரம்பித்தான் அவன். எல்லாப் பேச்சாளர்களும் பேசிய பின்பு கடைசியாக முத்தாய்ப்புப் பேச்சாகத் தன்னுடைய பேச்சே இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினான். கூட்டத்திற்காக விளம்பரங்கள் செய்யும் போது சிறப்புப் பேச்சாளர் சீர்திருத்தச் சிங்கம் – பகுத்தறிவுப் பகலவன் திருமலை என்று தன் பெயருக்கு முன் அடைமொழிகளோடு முக்கியத்துவம் தந்து விளம்பரம் செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்தினான். தான் பேசுவதைக் கேட்க இரவு எவ்வளவு நேரமானாலும் மக்கள் கலையாமல் உட்கார்ந்திருப்பதையும் கைதட்டுவதையும் கண்டு தன்னிடம் ஏதோ ஒரு வசீகர சக்தி இருப்பதாக அவனே எண்ணத் தொடங்கினான். 'தனக்கு எல்லாமே தெரியும்' என்று பாமரர்கள் நம்பியதைத் தானும் நம்ப ஆரம்பித்தான். வெறும் அரைக்கைச் சட்டையும் நாலு முழம் கைத்தறி வேட்டியும் கட்டிக் கொண்டு 'அறிவியக்கத்தின் ஏழைத் தொண்டர்களில் தானும் ஒருவன்' – என்று விநயமாகச் சொல்லிக் கொண்டிருந்தவன். தோளில் நீளமாகத் துண்டு போட ஆரம்பித்தான். பெட்டிக் கடைகளின் பக்கம் அவன்போவது குறைந்தது. எனினும் விற்று முதல் லாபம் வீடுதேடி வந்தது. அவன் பேரை வைத்து ஆட்கள் கடைகளை நடத்தினார்கள். திருமணங்களுக்குத் தலைமை, மகாநாடுகள், சிறப்புக் கூட்டங்கள், போராட்டம், மறியல், ஊர்வலம் என்று அவன் அலைய ஆரம்பித்தான். சதாகாலமும் அண்ணன், அண்ணன் என்று நாலைந்து தம்பிகள் அவன் கூடவே சுற்றினர். வேடிக்கை என்னவென்றால்

அபிமானவல்லி



வாசகர் கருத்து

● விக்கிரமன் என்ற வீரனுக்கு ஆதித்த சோழன் ''செம்பியன் தமிழ்வேள்'' என்ற பட்டமும், தவிசும், சாமரையும், சிவிகையும், இமிலையும், கோயிலும், இறையிலி நிலமும் பரிசாக வழங்கியதாக திரு சதாசிவ பண்டாரத்தார் பிற்காலச் சோழ வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ள ஆதாரத்தை வைத்து ''அபிமான வல்லி'' என்னும் ஓர் அழகான வரலாற்றுக் காவியத்தைக் கல்கி ஆசிரியர் படைத்துள்ளார்.

மேலும் பட்டத்தரசியின் மகன் கன்னரதேவன் இருக்கையில் இளையவன் பராந்தகனுக்கு அரசுரிமை கிடைக்கக் காரணம் என்னவென்று தெரியவில்லை என்று சதாசிவ பண்டாரத்தார் விட்ட இடத்தையும், மன்னனின் இரண்டாம் மனைவி பல்லவர் குலத்தில் வந்தவள் என்ற ஆதாரங்களையும் வைத்து அற்புதமாகக் கதை புனைந்துள்ளார். பல்லவ மன்னன் மரணத் தறுவாயில் வரம் கேட்ட இடம் உருக்கமாக அமைந்துள்ளது. அபிமான வல்லியின் எழிலைப்போன்று அழகான வர்ணனைகளும், அவள் நடனத்தைப்போன்ற லாகவமான தமிழ் நடையுமாகக் கதை சிறப்புற்று விளங்குகிறது.

மன்னார்குடி. ஜெ.சரஸ்வதி.

● அபிமானவல்லி; எங்களுக்கு விருவிருப்பான திரைப்படத்தைப் பார்த்த உணர்வை ஏற்படுத்தினாள்.

சென்னை—57,

இரணியல் 'குமரன்'.

● கதை இறுதியில் அபிமானவல்லியை ஒன்றும் செய்யாமல் தப்பியோட வைத்து, அவளை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று விக்கிரமனிடம் ஆணையிட்ட ஆதித்தன் மிகச் சிறப்பான பாத்திரம்.

கோவை— ப. மகாலிங்கம்.

● அடுத்த வாரம் கல்கி எப்பொழுது வரும் எனும் அளவிற்கு ''அபிமான வல்லி'' விறுவிறுப்பாக இருந்தது. ஆசிரியருக்கும் ஓவியத்திற்கு உயிர் கொடுத்த 'லதா'விற்கும், எங்கள் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்!

சீர்காழி, சிரவணன்.

● 25 அத்தியாயங்கள் தொடர்ந்ததும் முடிந்ததும் கனவு போல் இருக்கிறது

கும்பகோணம் ஸ்ரீதரன்.

அந்த சூரிய வெளிச்சத்தைக் காதலிக்கிறேன்

ரா. காமராசன்

- இந்தத் தேசத்தின் தெருக்களில் வீசும் காற்று நான் அறிந்த விதத்தில் வீசுகிறது. இங்கு பாயும் ஒளிப்பின்னல்கள் எனக்குப் பழக்கமானவை. இதயம் மலர்வது மலைப்பகுதியோ — வயலும், புல்வெளியும் சேர்ந்த சிறியபாதையோ —எதுவானாலும் இது என் நாடு. மலையின் இசையை அறிந்தவன்— அதன் எதிரொலிக்குச் செவிசாய்ப்பவன் — கிராமப்புறத்தின் இனிமையை உணர்ந்தவன் தனக்குச் சொந்தமாக ஓரடி மண் கூட இல்லா நிலையிலும் தாய்நாட்டை நேசிக்கிறான்.

- காலத்துக்கு ஒவ்வாத — உயிரோட்டத்திற்கு உண்மையாயிராத பல சிற்பக் கட்டடக் கலைச் சிரமிவுகள் இந்நாட்டில் உள்ளன. சோலைகளிலும், பொது இடங்களிலும் சில உருவங்கள் நமக்குப் பயமூட்டுகின்றன. பலவினங்களின் எல்லைக் கோடுகளையும் தாண்டி— இதன் புகழிடத்தில் இதயப் பிரவேசம் நடக்கிறது.

- இங்கே எத்தனையோ காட்சிகள் இருந்தாலும் — புகைப்படக்காரர்களின் கண்களுக்குத் தப்பிய ஒரு குக்கிராமத்து மூலையில் நிழல் படர்ந்த தோப்பில் ஒரு 'சிறிய இந்தியா' தோற்றம். அதுதான் இந்த மண்ணின் ஆத்மா.

- மத்திய இந்தியாவோ — வட இந்தியாவோ அங்கு இதயத் துடிப்பை ஆட்சிமொழியாக்கி விட்டால் ஒரு தேசம் உருவாகிறது.

- மரங்களைத் தொட்டுப் பார்க்கிறேன். கடற்காற்றின் வாசனையில் கனவு



காண்கிறேன். வீட்டு உச்சிகள் மீது விழும் சூரிய வெளிச்சத்தைக் காதலிக்கிறேன். ஏனென்றால் இது என்தேசம். இங்கே... பல்வேறு முரண்பாடுகளுக்கு மேலாக அசைக்க முடியாமல் உறுதியாகக் கொடியில்லாமல், கொட்டுமுரசு இல்லாமல் —உணர்ச்சி வெறிக்கு அப்பால் — வாளின் துணையில்லாமல் நிலைத்து நிற்பது — எங்கள் தந்தையர் நாட்டிடம் நாங்கள் கொண்டுள்ள ஆழமான அமைதியான அன்பு.

அவனை விட இரண்டு மூன்று வயது அதிக மானவர்கள் கூட இப்போது அவனருகே கைகட்டி, வாய் பொத்தி நின்று, ''அண்ணன் மட்டும் சரின்னு ஒருவார்த்தை சொல்லித் தேதி குடுங்க! நாளைக்கே கூட்டத்துக்கு செட் அப் பண்ணிடலாம்'' — என்று பேசத் தொடங்கினார்கள். இந்தச் சுற்றுப்புற மரியாதைகள் உள்ளே தன்னடக்கத்தையும் பண்பாட்டையும் வளர்க்காமல் புறத்தே மட்டும் அவன் வளர்ச்சியைப் பெரிதாக்கின. பப்பாளி மரம் போல் முருங்கை மரம் போல் உள்ளே வைரம் பாயாத மேற்பார்வைக்கு மட்டும் மருட்டத் தக்க வெறும் புறவளர்ச்சியாயிருந்தது அது.


சில ஆண்டுகளில் பொன்னுச்சாமி அண்ணனுக்கு 'முதல் ஹார்ட் அட்டாக்'— இரண்டாவது ஹார்ட் அட்டாக் என்று அடுத்தடுத்து இரண்டு அட்டாக் வந்து டாக்டர் அறிவுரையின் பேரில் அவர் வீட்டோடு ஒடுங்கித் தங்கி ஓய்வு பெற ஆரம்பித்தார். இது திருமலையின் பிரமுகத்துவத்தைத் திடீரென்று உயர்த்தி அதிசமாக்கியது. அந்த வட்டாரத்தின் ஒரே பிரமுகராக அவன் உயர்ந்தான். உள்பட்டணத்து ஜமீன்தார் வகையறாவும் காங்கிரஸ் சட்டசபை, மந்திரிபதவி என்று வேறு வழியில் மேலே போய் முன்னேறிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனாலும் அவர்களுடைய வளர்ச்சி திருமலையின் வளர்ச்சியைத் தடுக்கக் கூடியதாக இல்லை. ஜமீன்தார் ஒரு திறப்புவிழாவுக்கோ, அடிக்கல் நாட்டு விழாவுக்கோ வந்து பேசினால் கூடுகிற கூட்டத்தை விடத் திருமலை தெருவில் பேசினால் கூடுகிற கூட்டம் பல மடங்கு அதிகமாகவே இருந்தது.

இணையற்ற இந்தக் கூட்டமும், இந்தப் புகழும் தந்த ஆணவ வெறியில் அந்த வருஷ நடுப்பகுதியில் ஒரு தவறான காரியத்தை முன்நின்று நடத்திக் கைதாகி முதல் தடவையாக ஜெயிலுக்கும் போனான் திருமலை. பொன்னுச்சாமி அண்ணன் சம்மதம் தெரிவித்து ஒப்பாத அந்தப் போராட்டத்தில் அரை மனத்தோடு தான் அவன் இறங்கினான். ஆனால் அது பொன்னுச்சாமி அண்ணன் எச்சரித்தது போலவே அவனைச் சிறைக்குள் கொண்டு போய்த் தள்ளி விட்டது.

(தொடரும்)

மயூரகிரி மயில்வாகனன்

ஆனந்தி



குன்றின்மேல் கோபுரம்

ஆன்று தோராடும் குமரனைத் தரிசிப்பது ஒவ்வொரு தடவையும் உள்ளத்தில் இன்ப ஊற்றைச் சுரக்கச் செய்யும் ஆனந்த அனுபவம். ஈசருடன் ஞான மொழி பேசிய பெருமான் எளியோரின் பேதமற்ற பக்திக்கு இரங்கும் அருட்கடலாகவும் விளங்குகிறான்.

குமரக் கடவுள் சூரபதுமனுடன் கடுமையான போர் செய்தபோது அவன் சமுத்திரத்தில் வானத்தை முட்டும் மாமரமாகி நின்றான். அவனை வேலால் பிளந்தார் முருகன். பிளந்த இரு கூறுகளும் கோழியும், மயிலுமாகி எதிர்த்தன. நெருங்கி வந்த மயில் மீது தன் பொற்பாதங்களை வைத்து அடக்கினார் முருகப் பெருமான். திருவடிகளின் ஸ்பரிசம் பட்ட உடனே சூரனுக்கு ஞானமுண்டாகி விட்டது. ஆறுமுகக் கடவுளை வணங்கித் துதித்தான். ''தங்களை நான் சுமந்து திரிய வேண்டும்'' என்று வரம் கேட்டான். ''அசுரப் பிறவியில் பல பாபங்களைச் செய்தாய். அந்தப் பாபங்கள் தொலைய மலை வடிவமாகத் தவம் செய்தாயானால் உன்னை வாகனமாக ஏற்றுக் கொள்வேன்'' என்று வரம் கொடுத்தார் முருகன்.

உடனே சூரன் பெண்ணையாற்றுக்கு வடக்கே தொண்டை நாட்டில் மயில் வடிவமுடைய குன்றாக நின்று மோனத்தவம் செய்தான். அவன் தவத்தைக் கண்டுமகிழ்ந்த முருகப் பெருமான் தன் தேவியரோடு காட்சி கொடுத்துத் தன்னுடைய வாகனமாக ஏற்றுக் கொண்டார். திருக்கோயிலோடு அவரைத் தாங்கும் பேறு பெற்றான் சூரன்.

அந்த மலையே மயூராசலம் என்றும் மயிலம் என்றும் இன்று வழங்குகிறது. திண்டிவனம் தாண்டிச் சற்றுத் தூரம் சென்னை, திருச்சி நெடுஞ்சாலையிலேயே சென்றால் மயிலம் குன்றும் கோபுரமும் இடப்புறம் தென்படும். பாதையில் திரும்பி நேரே சென்றடைய வேண்டியது தான்.

சிவபெருமானின் கணங்களில் ஒருவராகிய சங்குகன்னன் ஈசனுடைய சாபத்தினால் பூவுலகில் வந்து தவம் செய்யத் தொடங்கினார். அவருடைய இளமையையும், அற்புத சக்திகளையும் கண்ட மற்ற முனிவர்கள் அவரைப் ''பாலசித்தர்'' என்று அன்போடு அழைத்தனர். நாரதருடைய உபதேசப்படி பாலசித்தர் மயூராசலத்துக்கு வந்து நெடுநாள் தவம் செய்தார். பற்பல சோதனைகளுக்குப் பிறகு வள்ளி, தெய்வயானை இருவருடைய கருணையால் முருகப்பெருமானோடு சரிசமமாகப் போர் புரிந்தார். அப்போது அவருடைய சாபமும் நீங்கிற்று. முருகப் பெருமான் ஸ்ரீவள்ளி தெய்வ யானையைத் திருமணம் புரிந்து கொண்ட காட்சியையும் காணும் பேறு பெற்றார்.

அதன் பின்னர் முருகப் பெருமான் சிவிகை விருது முதலியவற்றைப் பாலசித்தருக்கு அளித்துத் தம்முடனேயே உலாவரும் சிறப்பையும் அளித்தார்.

பாலசித்தர் பல நூற்றாண்டுகள் சித்து விளையாட்டுக்கள் புரிந்து மயூராசலத்தில் சிவபெருமானுடன் ஐக்கியமானார். பாலசித்தர் ஐக்கியமான இடமே காசி விசுவநாதர் கோவிலாகவும் அதை அடுத்து முருகப் பெருமானின் கோவிலும் விளங்குகிறது. பாலசித்தரின் முதல் சீடரான சிவஞான தேசிகர் அமைத்த பொம்மபுர ஆதீன மடத்தினால் இந்தக் கோவில் இன்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்த விவரங்களையெல்லாம் மயூராசலப் புராணம் என்ற நூலில் காணலாம். கார்த்திகேயனுக்கு வாகனமாக அமைந்த மயிலின் பெருமையைப் போற்றி, வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் 'மயிலலங்காரம்' என்று நூறு பாடல்கள் இயற்றி இருக்கிறார்.

மாலை ஆறு மணிக்கு மலையடிவாரத்தை அடைகிறோம். தூரத்தில் சாலையிலிருந்து தெரிந்த கோபுரம் அருகில் வந்ததும் கடைகளால் மறைக்கப்பட்டுக் கண்களுக்குத் தெரியவில்லை. தேங்காய் பழம், புஷ்பமாலைகள் எல்லாம் ஏராளமாய் இருந்தன. கூடவே எவர்சில்வர் பித்தளைப் பாத்திரக் கடைகளும், லாட்டரிச் சீட்டு விற்பனையாளர்களும்!

மலையேறப் படிகள் இருக்கின்றன. சிறிய குன்று தான். மலையைச் சுற்றி வலம் வருவது போல நல்ல சாலை போட்டிருக்கிறார்கள். கோபுர வாயிலில் வண்டிகளை நிறுத்தச் சௌ

கரியமாக இடம் இருக்கிறது.

கிரிப் பிரதக்ஷிணம்செய்து கொண்டு மலைமீது வாகனத்திலேயே ஏறிச்செல்லுகிறோம். அந்தி வானத்தின் இளஞ்சிவப்புக் கலந்த நீல வண்ணமும் அதைப் பின்னணியாகக் கொண்ட ஐந்து நிலைகள் கொண்ட கோபுரமும், பசுமையான மரங்களும், சுத்தமான சூழ்நிலையும், தூரத்தில் கீழே தெரியும் நீர்ப் பரப்புக்களும் நம் உள்ளத்தை மலர்த்துகின்றன.

கோபுர வாசலைக் கடந்து உள்ளே செல்லும் போது குளுகுளுவென்று காற்று வீசுகிறது. விநாயகர் சந்நிதியில் இரண்டு பேர் அமர்ந்து தட்டுத் தட்டாகப் பழங்களை உரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கே இருந்த அர்ச்சகரிடம் கோவிலைப் பற்றிக் கேட்டபோது ஆவலுடன் கோவில் வரலாறுகளைக் கூறியதோடு மிகவும் சிரத்தையோடு தரிசனம் செய்து வைத்தார். விநாயகப்பெருமானுக்குத் தீபாராதனை காட்டுகிறார். அடுத்ததாக விசுவநாதர் விசாலாட்சி சந்நிதி. ''இங்கே தான் ''பாலசித்தர்'' ஈசனுடன் ஐக்கியமானார்'' என்று கூறுகிறார் குருக்கள். அடுத்ததாக முருகப் பெருமான் சந்நிதி.



✖ உற்சவமூர்த்தி

அகர மயில் வடக்கு நோக்கி அடக்கமாகவே நிற்கிறது. கவர் விட்டெரியும் விளக்குகளும், ஊதுவர்த்திகளின் நறுமணமும், பன்னீர் புஷ்ப வாஸனைகளும் நம்மை ஊடுருவுகின்றன. உஷ்ணம் உடலை உருக்குகிறது. ஆயினும் குஞ்சரியும் குறக்கொடியும் தழுவக் குன்றமென உயர்ந்து நிற்கும் சரவண பவனைக் கண்டு மனமும் உருகத்தான் செய்கிறது. கணீரென்ற குரலில் அர்ச்சனை செய்கிறார் அர்ச்சகர். வடநாட்டு பக்தர்கள் சிலர் வருகிறார்கள் அவர்களுடைய அர்ச்சனைத் தட்டைவாங்கிக் கொண்டு மற்றொருவரும் அர்ச்சனையைத் தொடங்குகிறார். இருவருடைய குரலும் சேர்ந்து ஒலிக்கிறது.

ஒரு அர்ச்சகர் அந்த வடநாட்டுப் பெண்மணியின் குழந்தையை வாங்கிக் கொண்டு கருவறைக்குள் செல்கிறார். குழந்தையின் சிரம் முருகப் பெருமானின் பாதங்களில் படும்படி தலைகீழாகச் சாய்த்துப்பிடிக்கிறார். 'அடடா! குழந்தை அலறப் போகிறது!' என்று எண்ணுகிறோம். ஆனால் அது சிரிக்கிறது! விபூதி, குங்குமம் இட்டுக் குழந்தையைத் தாயிடம் கொண்டு போய்க் கொடுக்கிறார். அகமும், முகமும் மலர முருகப்பெருமானையே பெற்று விட்டது போல் வாங்கி அணைத்துக் கொள்கிறார் அந்தப் பெண்மணி. பாலசித்தர் வழிபட்ட தெய்வம் அல்லவா? பாலர்களுக்குத் தனிச்சலுகையும், அனுக்கிரகமும் உண்டு போலிருக்கிறது.

பிராகாரத்தில் வலம்வருகிறோம். அடடா! எத்தனை உற்சவ மூர்த்திகள்! இனிய குரலில் வார்த்தைகளை நன்றாக உச்சரித்து ஓதுவார் பாடுகிறார். அதைக் கேட்டுக் கொண்டே அங்கிருக்கும் விக்ரகங்களின் அழகை அனுபவிக்கிறோம். பூஜைகளைக் குறைவில்லாமல் செய்து நன்றாக நிர்வகிக்கப்படும் கோவிலைப் பார்த்த திருப்தி.

நன்றாக இருட்டிவிட்டது. இருந்தாலும் அருகில் உள்ள திருவக்கரை தலத்தையும் தரிசித்து விடுவது என்ற உறுதியோடு முருகப் பெருமானின் பிரஸாதங்களைப் பெற்றுக்கொண்டு கிளம்புகிறோம். அது ஒரு அற்புதமான அனுபவம். அதுபற்றி விரிவாக இன்னொரு சமயம் எழுதுகிறேன்!

✖ பொம்மபுர ஆதீன மடம் முதல் சன்னிதானம்



எதிர்காலம் உங்கள் கையில்

ரஜினிகாந்த்... ஆக ஜெயராஜ்.. ஆக

(திரைப்படக் கல்லூரி ஓவியக் கல்லூரிகளில் சேர்வதற்கான விதிமுறைகள் விளக்கப்படுகின்றன.)

சென்னை திரைப்படக் கல்லூரி:

1. டைரக்ஷன் மற்றும் திரைக்கதை வசனமெழுதுதல் கல்வித் தகுதி: பட்டப் படிப்பு. இந்த மூன்று வருட படிப்புக்கு மொத்தம் பத்தே இடங்கள்.

2. சினிமாட்டோகிராபி என்கிற காமிரா இயக்கம்: ஹையர் செகண்டரியில் பௌதீகம்; ரசாயனம் படித்திருக்கவேண்டும். 15 இடங்கள் இந்த 3 வருடப் படிப்புக்கு.

3. சவுண்ட் ரெகார்டிங் மற்றும் சவுண்ட் இஞ்சினீரிங்: 10 இடங்கள் கொண்ட இந்த 3 வருட கோர்ஸுக்கும் கல்வித்தகுதி மேலே சொன்னதுதான்.

4. ஃபிலிம் பிராஸஸிங் கோர்ஸ்: படிப்பு வேறுயினும் மற்றவையெல்லாம் நெ. 3 போலவே.

5. ஃபிலிம் எடிட்டிங்: இருவருடப் படிப்பு. 10 இடங்கள். ஹையர் செகண்டரி போதுமானது.

மேல் சொன்ன ஐந்தும் டிப்ளமா படிப்புகள்.

அடுத்து நடிப்புக்கான சர்ட்டிஃபிகேட் படிப்பும் உள்ளது. இதற்கு 10—ம் வகுப்பு போதும். ஒரு வருடம். 10 இடங்கள் ஆண்களுக்கு 10 இடங்கள் பெண்களுக்கு.

நடிப்புப் பயிற்சி தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில்.

நடிப்புப் பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள், அத்துறையில் தம் திறமைக்கு வாங்கிய பரிசுகள் போன்றவற்றின் விபரத்தை அவசியம் குறிப்பிடவேண்டும். இவர்களில் தகுதியுள்ளோர் ஆடிஷன் டெஸ்ட், ஸ்கிரீன் டெஸ்ட ஆகியவற்றுக்காகவும், இண்டர்வியூவுக்காகவும் அழைக்கப் படுவார்கள். தம்சொந்த செலவில் இதற்காக நடிப்புக் கல்லூரிக்கு வர வேண்டும்.

வயது வரம்பு: டைரக்ஷன் — குறைந்தது பதினெட்டரை வயது. அதிகபட்சம் 24. நடிப்புக்கு 18—25 வயது (ஆண்களுக்கு) 15-22 (பெண்களுக்கு) மற்றவற்றுக்கு பதினெந்தரை — 21.

திரைப்படக் கல்லூரியில் படிக்கக் கட்டணம்?

ஆண்டுக்கு 250 முதல் 300 ரூபாய்.

திரைப்படக் கல்லூரியில் படிப்பவர்கள் தம் படிப்பு முடியும் முன், தொழில்ரீதியாக எந்தப் பணியையும் ஏற்றுக் கொள்ள அனுமதியில்லை.

ஓவியக் கல்லூரிகள் சென்னையிலும், கும்பகோணத்திலும் உள்ளன. பெயிண்டிங், சிற்ப வேலை, கமர்ஷியல் ஆர்ட் இவற்றில் டிப்ளமாவுக்கானபடிப்புகள்.

எல்லோருக்குமே முதலிரண்டு வருடங்களுக்கு, மேற்சொன்ன மூன்றையும் சொல்லித் தருவார்கள். கடைசி மூன்று வருடங்களில், மூன்றில் ஏதாவது ஒரு பிரிவைத் தேர்ந்தெடுத்து, சிறப்புப்பயிற்சி பெறலாம். தவிரவும், மரவேலை, உலோகவேலை, பீங்கானில் வேலை, மற்றும் துணிகளுக்கு டிஸைன்கள் உருவாக்குதல் போன்றவற்றிலும் பயிற்சி தரப்படும்.

கல்வித் தகுதி: பத்தாம் வகுப்பு.

வயது வரம்பு: குறைந்தது 15. அதிகபட்சம் 30.

இங்கேயும் நுழைவுத் தேர்வு மூலமே அட்மிஷன். இரண்டு மூன்று நாட்கள் தேர்வு நடைபெறும். மாடலை நிற்க வைத்து வரையச் சொல்வார்கள். பிறகு இண்டர்வியூ. இந்த இரண்டு, மூன்று நாட்களில் ஓவியம் தீட்டுவதில் உங்களுடைய திறமை, ஆர்வம், இதெல்லாம் நன்கு கவனிக்கப்படும். பிறகுதான் அட்மிஷன்.

இந்தப் படிப்புக்கு டியூஷன் கட்டணம் எவ்வளவு ஆகும்? சுமாராக மூந்நூறு ரூபாய். முழுப்படிப்புக்கும்.

இந்த டிப்ளமா கோர்ஸ்கள் தவிர ஃபைன் ஆர்ட்ஸில் டிகிரி கோர்ஸும் உள்ளது. மற்ற தகுதிகள் யாவும் மேல் சொன்னதே.

இந்தப் படிப்பு முடித்த பின் எதிர்காலம்? திறமை



யைப் பொறுத்து நல்ல வேலை கிடைக்கும். பிளஸ் பாயிண்ட்: சென்னையிலும், கும்பகோணத்திலுமாய் ஆண்டுக்கு இவற்றை முடிப்பவர்கள் சுமார் 100 பேர்தான். ஆனால் நாட்டில் —விளம்பரத் துறை டெக்ஸ்டைல் துறை போன்ற பலவற்றிலும் இவர்களுக்கு டிமாண்ட் மிக அதிகம்.

கொசுறு:

தலைப்பில் உள்ளதுபோல ரஜினிகாந்த் முந்நாள் நடிப்புக் கல்லூரி மாணவரே! ஆனால் ஓவியர் ஜெயராஜ் ஓவியக் கல்லூரியில் பாடம் வரையக் கற்றுக் கொண்டவரில்லை!

-எஸ். சந்திரமௌலி



நேரம் காலம் தெரியாமெ பெண் பார்க்க வந்தவா கிட்ட கல்கி விடுமுறை மலரைக் கொடுப்பாளோ?.. பொண்ணு பாக்கறத்துக்குப் பதிலா கல்கி விடுமுறை மலரைப் பாத்துண்டு இருக்கா!...
கல்கி விடுமுறை மலர்



நலம் நலமறிய ஆவல்

டியர் மோகன்

இப்பல்லாம் அடிக்கடி ஸ்க்ரீன்ல உங்களைப் பார்க்க வேண்டியிருக்கு. படத்துக்குப் படம் என்னவோ வித்தியாசமான ரோல் தான். ஆனா சும்மா சொல்லக் கூடாது. உங்க பாணியை நீங்க மாத்திக்கறதே இல்லே. ஒரே மாதிரி அசட்டுப் பார்வை, துக்கம் வர்றப்ப அதே மாதிரி முகத்தை அழுத்தித் துடைக்கறது. அதே மாதிரி டான்ஸ் மூவ்மெண்ட்ஸ்ன்னு இந்தப் படத்திலயும் 'மோகன்' பிராண்ட் நடிப்பு தான். பொண்டாட்டி மேல இருக்கற சந்தேகத்தை மனசுக்குள்ள புதைச்சிக்கிட்டுச் சகஜமாப் பேசற ஒரு சீன் மட்டும் ஸ்பெஷலா பண்ணியிருக்கீங்க.... பரவாயில்லே... ஜஸ்ட் கீப் இட் அப்....

டியர் சரிதா

அட, ஒடம்பு கொஞ்சம் எளைச்சிருக்கே. நடிப்புந்தான். பழைய வின்னிய ரிட்டி இல்லியோ? கவுனும், ரெட்டைப் பின்னலுமாத் துள்ளினாக்கூட உங்களை அவ்வளோ சின்னப்பொண்ணு ஒத்துக்கறது கஷ்டமாகத் தான் இருக்கு. அதுசரி சந்தேகப்பட்ட புருஷன் தன்னோட தப்பு புரிஞ்சி மன்னிப்பு கேட்டதும், நியாயமான வீறாப்போட 'அட போய்யா'ன்னுசொல்லிட்டு அடுத்த ஸீனே பெட்ரூம்ல அவனுக்காகக் காத்திருக்கிற மாதிரியான க்ளைமாக்ஸ் இருக்கே—ஆம்பிளை என்ன செஞ்சாலும், பொம்பளைங்களுக்கு இது தான் கடமைங்கற மாதிரி அவ்வளவு நல்லா இல்லியே—நீங்களாவது எடுத்துச் சொல்லி இருக்கலாமே!

டியர் ஷ்யாம்

டைட்டில் பாட்டைக் கேக்கறப்ப ஏதோ ஸ்கூல் பிரேயர் ஸாங் மாதிரி இருக்கேன்னு பார்த்தா, ட்யூன் போட்டது நீங்கதானா? புதுசப் புதுசா எத்தனை ட்யூன் போடறாங்க மத்தவங்கள்ளாம் — நீங்களும் கொஞ்சம் முனைஞ்சுபோட்டிருக்கலாமே. (காத்து சூடா கொதிச்ச கெடக்கு—பாட்டு மட்டும் கேக்க சோகமா இருக்கு) பெஸ்ட் ஆஃப் லக்.

டியர் ராக்கெட் ராமநாதன், கல்லாப்பெட்டி அன்கோ.,

அங்கங்க ஏதோ முகத்தைக் காட்டறீங்க, சரி, மத்தபடி படத்துக்கு நீங்க அத்தனை பேரும் அவசியமான்ற கேள்விதான் வருது. தெரியாத்தனமா 'பலான' ரொட்டி, பட்டர், ஜாமை சாப்டுட்டு சகுந்தலா (சி. ஐ. டி.) கிட்ட வழியற சீன் மட்டும் கல்லாப்பெட்டிக்கு ஒரு ப்ளஸ்பாயிண்ட்.

டியர் கஜேந்திரகுமார்


முதன் முதலாப் படத்துக்கு வசனம் எழுத முன் வந்திருக்கிறீர்கள். முதல் பாதியை விட பின்பாதியில் வசனங்கள் சுவைதான். இருந்தாலும் அங்கங்கே சென்ஸாரில் கைவைக்கிற மாதிரி முதல் படத்துக்கே எழுத வேண்டுமா என்ன?

டியர் டைரக்டர் ஜெயதேவி:

ஒரு பெண் நினைத்தால் முடியாததல்ல என்று டயலாக் வரும்போது பெயரைப் போட்டுக் கொள்கிற சாமர்த்தியத்தை, காட்சிகளை அமைக்கிற விதத்திலும் காண்பித்திருக்கலாம். அதுவும் அந்த ஆரம்பக் காட்சிகள், ஒவ்வொரு குடித்தனமாய் அறிமுகமாகிற நாடகத்தனம், ஒரு விரல் கிருஷ்ணராவின் கூத்து, க்ளைமாக்ஸில் அடிக்கிற 'சின்ன' பல்டி என்று நிறைய அமெச்சூர் முத்திரைகள். இருந்தாலும் கதையே இல்லாமல் வருகிறவர்களை விட நீங்கள் எவ்வளவோ மேல். அடுத்த படத்தில் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கலாமா?

வந்தனங்களுடன்,

-ஜெயமன்மதன்





அங்கே நம்மவர்

குஜராத்திகளைவிடச் சிறப்பாக

காந்தி நகரில் கிட்டத்தட்ட அரை டஜன் உயர் அதிகாரிகளைச் சந்தித்த போது அவர்களில் நிறைய பேர் தென்னிந்தியர்கள்; குறிப்பாகத் தமிழர்கள் எனக் கண்டோம். பொது மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடைவெளி குறைவு என்பதைப் பலர் குறிப்பிட்டார்கள். நேரில் காணவும் முடிந்தது.

பிரபல அதிகாரிகள்-ராமமூர்த்தி, சிவராஜன், சந்திரமௌலி, சிவஞானம், கோல்கில், கிரிதர், மஞ்சுளா சுப்பிரமணியம், வரதன்— இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

''இங்கு பொது மக்கள் அதிகாரிகளைக் காண வரும் போது, கைகளைக் கட்டிக் கொண்டு, அதீதமான பணிவுடன் வருவது கிடையாது. உண்மையானகுறை இருந்தால் – நேராக அதிகாரிகளைக் காண வருவார்கள்.

✖ ராமமூர்த்தி



''குஜராத்திகள் பொதுவாக வியாபாரிகள் தான். இன்ன தொகைக்கு இவ்வளவு வட்டி போட்டால் எத்தனை நாளில் எவ்வளவு ரூபாய் வரும் என்று எந்தக் குஜராத்தியும் சொல்லி விடுவார். அரசாங்க வேலை மாதிரி பொறுப்பான வேலைக்கு வேறு ஆட்கள் இருக்கும் போது நாம் ஏன் சிரமப் படவேண்டும்' என்பதுஅவர்களின் மனோபாவம்.''



✖ சந்திரமௌலி

முதல் அமைச்சரின், பிரதம காரியதரிசிஇதையே வலியுறுத்தினார். ''இந்த மாநிலத்தில் குறுகிய மனப்பான்மை கிடையாது: வெளி மாநிலத்தவர்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை இங்கு உள்ளது. அரசுத்துறை, தனியார் துறை இரண்டிலும் பொறுப்பான பதவிகள் மட்டுமல்ல; ஸென்ஸிடிவ்ஆன பதவிகளில் கூட வேறு மாநிலத்தவர்கள் இருப்பது ஓர் உதாரணம்.''

'இங்கு ஆட்சி மொழி குஜராத்திதான். கடிதங்கள் கூடக் குஜராத்தியில்தான் டைப் செய்யப்படுகின்றன'' என்றார் வேறு ஒரு அதிகாரி-தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். ''எங்களை விட இலக்கண சுத்தமாக குஜராத்தி பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்!'' என்று பாராட்டு வழங்கினார் ஒரு குஜராத்தி அதிகாரி.

குஜராத் சிறப்பு அம்சங்களைத் தயாரித்து அளிப்பவர்கள்: சாருகேசி தமயந்தி



✖ வரதன்

மேலட்டையில்:
குஜராத் மாநிலம் டார்னெடார் சந்தையில் கூடும் மக்களின் தோற்றம்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran


ஆண் நெஞ்சம் அலைபாய
அஞ்சு மீட்டர் வசியம்!
பாம்பே டையிங்
100% பாலியெஸ்டர், ஜார்ஜெட் மற்றும் டிஷ்லான் டிஷ்யூ சேலைகள்.
BDM — 1220

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka